புத்திய உலகம்.

SCANNED

R6
N31
120651

1540

# சத்திய சமாஜம்

ஆசிரியன்

க. சந்தானம்

11 SEP 1931

ஸ். கணேசன்,
லிக்கேணி, சென்னை.
1931

R6
N31
L20651

# சத்திய சமாஜம்

ஆசிரியன்

க. சந்தானம்

11 SEP 1931

எஸ். கணேசன்,
திருவல்லிக்கேணி, சென்னை.
1931

170651

R6
M31

3267
894.8114

Printed by S. Ganesan,
at the Current Thought Press, Triplicane, Madras

# பொருள் அடக்கம்


| அதிகாரம். | | பக்கம். |
|---|---|---|
| I. | மதியும், மதமும் | ... 1 |
| II. | சுதந்திரம் | ... 29 |
| III. | சமத்துவம் | ... 45 |
| IV. | சகோதரத்துவம் | ... 65 |
| V. | குடும்பம் | ... 68 |
| VI. | சமூகலக்ஷியங்கள் | ... 73 |
| VII. | பிரவிருத்தியும், நிவிருத்தியும் | ... 75 |

# சத்திய சமாஜம்

## மதியும் மதமும்

பாரத தேசம் தனது அடிமை நிலை ஒழிந்து, வறுமை நீங்கி உய்ய வேண்டும். காந்தியடிகளின் உபதேசத்தால் இவ்வவா இந்தியர்களை ஆட்கொண்டு விட்டது சூரிய பகவானிடமிருந்து ஒளியும், உஷ்ணமும் பெற்ருலொழிய பூமியிலுள்ள ஜீவராசிகள் உஜ்ஜீவிக்க மாட்டா. அப்படியே எந்த மனித சமூகமும் அறிவும், ஆற்றலுமின்றி செழித்தோங்க முடியாது. சத்தியாக்கிரகப் போரின் மூலம் சிறிது சக்தி பெற்று வருகிறோம். இத்துடன் நல்லறிவையும் பெறுவிடின் நமது முயற்சிகளின் பூரண பலன்களை அடைவது சாத்தியமல்ல.

மதத்தின் பெயரால் இந்த நாட்டில் உலவி வரும் மூடக் கொள்கைகளுக்கும், அறிவினப் பழக்க வழக்கங்களுக்கும் கணக்கு வழக்கில்லை. நம்மைப் போன்ற மனிதர்களைத் தீண்டாதவர்களென்று பெயரிட்டு அவர்களுக்கு கடவுளை வணங்கக் கூட உரிமையில்லையென்றுரைப்பது தர்மமென்று நம்புகிறோம். பால் மணம் மாருத குழந்தைகளை விவாகம் செய்வித்து குடும்ப பாரத்தையும், பால்ய விதவா நிலையையும் சிறிதும் கவலையின்றி சாஸ்திரத்தின் பெயரால் அவர்கள் தலையில்

சுமத்துகிறேம். இவைகளைச் சிந்தித்து மனம் புண்ணுன சிலர் இத்தேசத்திலிலுள்ள மதங்களெல்லாம் ஒழிந்தா லொழிய உய்யும் வகையில்லை யென்ற முடிவுக்கு வந்திருக்கின்றனர்.

இது தவறு. ஆத்திரப்படுவதால் பயன் ஒன்றுமில்லை. மனம் சாந்தமாக நடு நிலைமை வகிக்கும் பொழுதே உண்மை விளங்கும். ஆதிமுதல் இந்நாட்டில் தோன்றியுள்ள யாக்ஞவல்கியர், புத்தர், மகா வீரர், சங்கரர், ராமானுஜர், கபீர், நானக், ஆழ்வார்கள், சிவனடியார்கள் முதலிய மத குருக்களின் பரிசுத்த வாழ்க்கைகளையும், தூய சிந்தனைகளையும் ஆலோசிக்கும் எவனும் மதத்தை இகழான்.

தன் மதத்தின் கொள்கைகளைத் தாழ்மையுடன் ஆராய்ந்து பார்த்தல் மனிதனுடைய இன்றியமையாத கடன். ஆனல், பரம்பரையாக வந்திருக்கும் எல்லாக் கொள்கைகளையும் கண்ணை மூடிக் கொண்டு ஒப்புக் கொள்ள வேண்டுமென்று சொல்வதும், சகல புராதன வழக்கங்களையும் அனுசரிக்க வேண்டுமென்று வற்புறுத்துவதும் மனிதத் தன்மையைக் குலைத்து அடிமையை நிலைநிறுத்துவதற்கு நேரான வழி. எந்த மதத்திலும் அதன் ஆரம்ப காலத்தின் பழக்கவழக்கங்களுக்கும், நம்பிக்கைகளுக்கும் ஏற்ற பலகொள்கைகள் காணப்படுகின்றன. இவைகளின் நடுவில் சில நித்திய தத்துவங்களும் விளங்குகின்றன. இவைகளை யெல்லாம் சரிசமானமாகப் பாவித்தல் அறியாமையே.

இருள் சூழ்ந்த கானகத்தில் விடப்பட்ட குழந்தைகள் போல இவ்வாதியந்தமில்லாத பிரபஞ்சத்தில் தட்டித்தடுமாறிச் செல்ல வேண்டியவர்களாக விருக்கிறேம். இதற்கு மதியொன்றே நாம் சொந்தமாகப் பெற்றிருக்கும் வழிகாட்டி. அவ்வப்போது தோன்றிய பெரியார்கள் மதங்களை நமது மனக் கண்ணுக்கு சாதகமான விளக்குகளாக அளித்திருக்கின்றனர். மதியுள்ளவனுக்கே அவைகள் உதவும். சொந்த அறிவில்லாதவனுடைய மதம் குருடன் கைவிளக்குப் போல் ஒருவேளை மற்றேருக்கு உதவலாம்; தனக்கு உபயோகமில்லை.

இந்த அறிவு எத்தன்மையது? அதன் பிரமாணங்கள் என்ன? எந்தெந்த விஷயங்களில் எவ்வளவு தூரம் மதத்தின் சகாயத்தைத் தேடவேண்டும்? இவைகளை ஆராய்வது இவ்வியாசத்தின் கருத்து.

(2)

ஜகத்திலுள்ள பொருள்களை சேதன, அசேதனங்களென்றும், சேதனங்களை ஸ்தாவர, ஜங்கமங்களென்றும் நமது முன்னோர்கள் வகுத்தனர். கல், மண், ஜலம், காற்று முதலிய உயிரில்லாப் பொருள்கள் அசேதனங்கள். புல் பூண்டு முதல் மனிதன் ஈறாக உள்ள எல்லா ஜீவராசிகளும் சேதனங்கள். பிறத்தல், வளர்தல், இறத்தல் உயிரின் முக்கிய அறிகுறிகள்.

சேதனங்களுக்குள் மரம், செடி, புதர், பாசி முதலியன ஸ்தாவரங்கள். இவைகளுக்கும் ஜங்கமங்களுக்கும் உள்ள மூல வித்தியாசங்கள் சலனம், தன்னறிவு. ஸ்தாவரம் பூமியில்ஒரே இடத்தில் வேரூன்றி, இறக்கும் வரையில் அதே இடத்தில் இருக்கிறது. அற்ப புழுவாயினும் தான் பிறந்த இடத்திலிருந்து சிறிது தூரம் போகும் சக்தியைப் பெறுகிறது. ஒவ்வொரு ஜங்கம பிராணியும் தன்னை ஒரு பிரத்தியேகமான ஜீவனாக அறிகிறது. இந்த பிரத்தியேக அறிவை அகங்காரம் என்று கூறலாம். அகங்காரமே ஜங்கமத்திற்கும், ஸ்தாவரத்திற்கும் முக்கிய வித்தியாசமென்று சொல்லுதல் தகும்.

ஜங்கமங்களுக்குள் இந்திரிய அமைப்புகளிலும், சக்திகளிலும் மற்றவைகளைவிட மிருகங்கள் மனிதனை ஒத்திருக்கின்றன. விசேஷமாகக் குரங்குகள் அவனுக்கு நெருங்கிய பந்துவென்றும் முதலில் குரங்கிலிருந்தே மனிதன் படிப்படியாக உண்டானான் என்றும் இக்காலத்துப் பரிணாமவாதிகள் நிச்சயமாகக் கூறுகின்றனர். இவைகளுக்கும் மனிதனுக்கும் பொதுவான இந்திரியங்கள் பதினொன்று, ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, மனம். மெய், வாய், கண், மூக்கு, செவி இவைகள் ஞானேந்திரியங்கள். இவைகள் வழியாக இவ்

வுலகைப் பார்த்தும், கேட்டும் நுகர்ந்தும், ருசித்தும், ஸ்பரிசித்தும் அறிந்து கொள்ளுகிறோம். ஞானேந்திரியங்களின் வழியாகக் கிடைக்கும் உணர்ச்சிகளை ஒரு விதமாகத் தொகுத்து அனுபவமாகச்செய்வது மனம். இதற்கு இருப்பிடம் மூளை. கால், கை, வாய், ஆசன உறுப்பு, ஜனனேந்திரியம் இவை கர்மேந்திரியங்கள். ஞானேந்திரியங்கள் மூலம் வரும் அனுபவங்களுக் கேற்பவும், பசி, காமம், குரோதம் முதலிய இயற்கை குணங்களை அனுசரித்தும் மனம் கர்மேந்திரியங்களைக்கொண்டு பிராணிகளை நடமாடச் செய்கிறது.

மிருகங்களுக்குள்ளும் மனதில் ஏற்றத் தாழ் வுண்டு. ஆனால் மனிதனுடைய மனத்தின் பக்கத்தில் இந்த தாரதம்யங்கள் பொருட்படுத்தக் கூடியவைகளல்ல. மிருகத்தின் மனம் ஆயுள்முழுதும் மற்ற இந்திரியங்களின் அடிமையாகவே இருக்கும். மனிதனிடத்தோ அது தலைமைப்பதவியை அடைய ஓயாமல் முயற்சிசெய்து, பெரியார்களிடம் ஏகசக்காராதிபத்தியத்தைப் பெற்று விளங்கும். மனித மனத்திற்குள்ள விசேஷ ஆற்றலை மதி, புத்தி, அல்லது பகுத்தறிவு என்று கூறலாம். இதன் தன்மையைச் சற்று ஆராய்வோம்.

மதியின் வளர்ச்சிக்கு ஆதாரம் பாஷை. மற்றப் பிராணிகளைப்போல் மனிதனும் கண்முதலிய அவயவங்களின் ஜாடைகளால் தன் மனோபாவங்களைத் தெரிவிக்கிறான். ஆனால், வாக்கு அவனுடைய பிரத்தியேகமான கருவி. பறவைகளும், மிருகங்களும் சப்தங்களால் தங்கள் இனத்தோடு குலாவுகின்ற போதிலும், அந்த சப்தங்கள் கோபம், பயம், பசிமுதலிய சில மனோபாவங்களையே குறிப்பன. மனிதனே வாக்கின் உதவியினால் உலகை யாளும் வல்லமை பெறுகின்றான்.

பாஷையின் மூலம் மனிதனுடைய ஞாபக சக்தி ஆயிர மடங்குஅதிகரிக்கின்றது. வெளிப்பிரபஞ்சத்தினின்று ஞானேந்திரியங்கள் மூலம் வரும் உணர்ச்சிகளையும், தன் அந்தக்கரணத்தில் உதிக்கும் மனோபாவங்களையும் மலர்களைக் கயிற்றால் தொடுப்பது போலப் பெயர்களால் அடுக்கிக் கோர்த்துக் கட்டி

நமது உபயோகத்திற்குத் தருவது பாஷையே. அதில்லாவிடின் சிறகொடிந்த பறவை போல் நமது மதி மேலெழ முடியாது.

தனது அனுபவங்களைப் பெயரிட்ட பிறகு அவைகளைத் தங்கள் குணங்களின் பிரகாரம் ஜாதிகளாக வகுத்து, இனி கூறப்போகும் பிரமாணங்களால் இந்த ஜாதிகளின் சுபாவங்களையும் பரஸ்பர சம்பந்தங்களையும் ஆராய்ந்து, ஜகத்தின் அடிப்படையான இயற்கைத் தத்துவங்களை நிர்ணயிப்பது மதியின் ஒப்பற்ற வேலை.

ஆனால், இது மட்டுமல்ல. இயற்கையாக நமது உள்ளத்தில் தோன்றும் பாவங்கள் மதியால் தூய்மை பெற்று விசாலமடைகின்றன. மதியின் கல்பனா சக்தியைக் கொண்டு அவை காவ்யம், சங்கீதம், சில்பம் முதலிய கலைகளில் பரிணமிக்கின்றன. நமது ஒவ்வொரு இயற்கை குணமும் நல்லறிவோடு கூடினால் தனது தன்மையே அடையாளந் தெரியாமல் மாறிவிடும். எல்லாப்பிராணிகளிடத்தும் தோன்றும் ஜாதி அபிமானம் புத்தரிடம் எல்லையற்ற ஜீவ காருண்யமாகப் பிரகாசித்தது. அப்படியே கோபம் வீரமாகவும், காமம் கற்பாகவும் விளங்கக் கூடும்.

நன்மை, தீமை என்னும் பிரிவு மனிதனுக்கே உடையது. கர்மங்களின் பலன்களை ஆலோசித்துத் தீமையை விலக்கவும், நன்மையைக் கடைப்பிடிக்கவும் நமது பகுத்தறிவினால் ஆற்றல் பெறுகின்றோம். மேலும் வாழ்க்கையின் லக்ஷ்யங்களை ஆராய்ந்து, அவைகளுக் கேற்ப நடவடிக்கைகளைத் திருத்தியமைப்பதும் நமது பகுத்தறிவைப் பொறுத்திருக்கிறது. இந்த விவேகம் ஒருபிரத்தியேகமான சக்தியல்ல ; அறிவின் வளர்ச்சியும், சமூக பழக்க வழக்கங்களுமே இதன் காரணம்.

கடைசியாக, பூரண அறிவு பெற்ற மனிதன் சுயநலத்தை முற்றிலும் மறந்து இவ்வுலகின் விசித்திரத்தையும் அதன்காரணமான பரம்பொருளின் தன்மையையும் தியானம் செய்ய ஆரம்பிக்கிறான்.

ஆகையால் ஞானம், கலை, தர்மம், தெய்வ பக்தி இவைகள் எல்லாவற்றிற்கும் ஆதாரம் நமது மதியே. ஒவ்வொருவனுடைய மதிக்கும் எல்லையுண்டு. ஆனால் அதன்வளர்ச்சிக்கு எல்லை யில்லை. எழுதப் படிக்கத் தெரியாமல் காட்டில் திரியும் மனிதன் தன் அறிவின் வளர்ச்சியால் மகாத்மா காந்தியைப் போல் தர்மிஷ்டனாகவும், ஈன்ஸ்டீனைப்போன்ற ஞானியாகவும் ஆக முடியும். எப்படி சிறிய ஆல் விதைக்குள் சதுரங்க சேனை நிழலில் தங்கக்கூடிய விசாலவிருக்ஷமாகும் சக்தி இருக்கின்றதோ, அப்படியே ஒவ்வொரு மனிதக்குழந்தையிடத்தும் மதி யென்னும் அபூர்வசக்தி இருக்கிறது. அதன்வளர்ச்சிக்குத் தடைகளாக இருப்பவைகளைப் போக்கி விசாலத்திற்கு வேண்டியசகலசாதனங்களையும் செய்து கொடுப்பது சத்தியசமாஜத்தின் முதல் வேலை. மதியை வளர்த்து முடிவில் ஆத்மஞானம் அடைவது மானிட வாழ்க்கையின் இறுதி நோக்கம்.

## (3)

மதியின் கருவிகள் மூன்று; (1) பிரத்தியக்ஷம் (2) அனுமானம் (3) மதம், சாஸ்திரம் அல்லது ஆப்த வாக்கியம். இவைகளைப் பிரமாணங்கள் என்று சொல்வது வழக்கம்.

பிரத்தியக்ஷமாவது ஞானேந்திரியங்கள் மூலம் வரும் நேர் அனுபவங்கள். இவைகளின் தன்மையை ஒவ்வொருவனும் அனுபவத்தால் உணரவேண்டுமே ஒழிய பிறர் மூலம் அறிய முடியாது. கண்ணில்லாதவன் வர்ணங்களையும், காதில்லாதவன் இராகங்களையும் மற்றெந்த முயற்சியாலும் அறிவது சாத்தியமில்லை. சர்க்கரையைப் பற்றி எவ்வளவு புஸ்தகங்கள் படித்தாலும் ஒரு சிறிது ருசி பார்ப்பதனாலுண்டான அனுபவம் கிட்டாது.

பிரத்தியக்ஷ ஞானத்தில் இரண்டு வகையில் தவறுகள் உண்டாகக்கூடும். ஒன்று ஞானேந்திரியத்தில் குறையோ, அல்லது நோயோ உண்டாகி உணர்ச்சிக்குறைவோ, மாறுதலோ உண்டாகலாம். மஞ்சக் காமாலை வந்தவனுக்குப் பார்த்ததெல்

லாம் மஞ்சளாகத் தோன்றும். தவிர, நாம் சில வேளை பிரத்தியக்ஷத்தால் கிடைத்த அனுபவத்துடன் தப்பான அனு மானத்தைச் சேர்த்துப் பிரத்தியக்ஷ ஞானமாகக் கொள்ளு கிறோம். சூரியன் காலையில் கிழக்கில் உதித்து, நாள் முழுதும் மேற்கே போவதைப் பார்ப்பதாக நினைக்கிறோம். ஆனால் நாம் உண்மையில் பார்ப்பதாவது: காலையில் சூரியன் பூமியின் கிழக்கில் காணப்படுகிறது. கொஞ்சங் கொஞ்சமாக மேற்குப் பக்கத்தில் தோன்றி மாலையில் நேர் மேற்கில் காணப்படுகிறது. இந்தத் தோற்றம், சூரியன் கிழக்கிலிருந்து மேற்கே செல்வத னால் உண்டாகலாம். அல்லது பூமி மேற்கிலிருந்து கிழக்குப் பக்கமாக உருள்வதாலும் உண்டாகலாம். பல காரணங்களைக் கொண்டு பூமிதான் சுழல்கிறதென்றும், அதனால் இரவும் பக லும் உண்டாகின்றனவென்றும் வான சாஸ்திரத்தில் வல்லோர் நிர்ணயித்திருக்கின்றனர்.

இவ்விரண்டு குற்றங்களும் நீங்கிய பிரத்தியக்ஷஞானத்தை மற்ற எந்த ஞானத்தாலும் அசைக்க முடியாது. மாயாவாதி யென்று சொல்லப்படும் சங்கராசாரியார் இந்த உண்மையை தன் சூத்திர பாஷ்யத்தில் தெளிவாக ஒப்புக் கொள்ளுகிறார். வேதாந்திகள் பாரமார்த்திக தசையில் இப்பிரபஞ்சம் மித்யை என்றும், வ்யவகாரிக அல்லது லௌகிக தசையில் சத்திய மென்றும் சொல்வார்கள். இது உண்மையாக இருக்கலாம். எப் படித் தூங்கும்பொழுது இந்த உலகம், மறைந்துவிடுகிறதோ அப்படியே மற்றோர் நிலையில் அது மறைந்து பூரண பிரம்ம ஸ்வரூபம் தோன்றலாம். ஆனால் அந்த நிலை அடையும்வரை யில் பிரத்தியக்ஷ ஞானமே நாம் பெறும் நிச்சய ஞானம். இதை அலக்ஷியம் செய்துவிட்டு இவ்வுலகில் வாழமுடியாது.

நமது உள்ளத்தில் உதிக்கும் உணர்ச்சிகளும் பிரத்தி யக்ஷ அனுபவங்களே. சுகம், துக்கம், கோபம், பயம், பசி, களைப்பு முதலிய பாவங்கள் நம் மனத்தின் அம்சங்கள். இவைகள் ஒவ்வொரு மனிதனுக்கும் பிரத்தியேகமான அனு பவங்கள். சாதாரணமாக இவைகளும் ஓரளவு எல்லா மனி தர்களுக்கும் பொதுவாக இருந்தபோதிலும், ஞானேந்திரியங்

கள் மூலம் வரும் பிரத்தியக்ஷத்தைப்போல் எல்லா மனிதருக்கும் எக்காலத்திலும் ஒரே மாதிரியாக இருப்பவைகளல்ல. ஒரே காரணத்தினல் ஒருவனுக்கு சுகமும், மற்றொருவனுக்கு துக்கமும் உண்டாகலாம். விஷப் பாம்பைப் பார்த்து சாதாரணமாக பயம் உண்டாகிறது. ஆனல் சிலருக்குக் கோபமே தோன்றும். ஆயிரத்தில் ஒருவன் அதைப் பற்றி அலக்ஷியமாகவும் இருக்கக் கூடும். ஆகையால், வெளிப்பிரபஞ்ச சாஸ்திரத்தைப்போல் மனோபாவ சாஸ்திரம் எல்லோரும் ஆக்ஷேபனையின்றி ஒப்புக் கொள்ளக்கூடிய நிச்சய நிலைபெறுவது துர்லபம்.

பிரத்தியக்ஷ உணர்ச்சிகள் நிமிஷந் தோறும் மாறிக் கொண்டே இருப்பன. இவைகளை உபயோகமான ஞானமாகச்செய்வது ஞாபகம். ஒரு பொருளைப் பார்க்கும்பொழுது ஞாபக சக்தியால் அது முன் கண்ட பொருளென்று அறிந்து கொள்ளுகிறோம். அதன் பேரில், ஒரேவித அனுபவத்திற்கு ஒரு பெயர் கொடுத்து அவைகளை மனதில் பதித்து வைக்கிறோம்.

பிரத்தியக்ஷ ஞானமே அனுமானத்திற்கு ஆதாரம். அனுமானத்திற்கு மூன்று படிகள் உண்டு. அவையாவன (1) பிரத்தியக்ஷ உணர்ச்சிகளை அவைகளின் குணங்களின் பிரகாரம் வகுத்தல் (2) இப்படிப் பாகுபடுத்திய ஜாதிகளின் பரஸ்பர சம்பந்தங்களை நிர்ணயித்தல் (3) இந்த சம்பந்தங்களுக்கு ஆதாரமாகவுள்ள இயற்கைத் தத்துவங்களை நிச்சயித்தல்.

ஒவ்வொரு பொருளுக்கும் அநேக குணங்கள் உண்டு. அவைகளில் சில மற்றப் பொருள்களுக்குப் பொதுவான குணங்களாகவும் சில அந்தப் பொருளுக்கே பிரத்தியேகமான குணங்களாகவும் இருக்கும். ராமன் சில குணங்களால் மிருகமாகவும், மற்றும் சில குணங்களால் மனிதனுகவும், சில பிரத்தியேக குணங்களால் ராமனுகவும் ஆகிருன். இப்படிப் பொருள்களின் சாதாரண குணங்களையும், விசேஷ குணங்களையும் அறிந்து அவைகளை ஜாதிகளாக வகுத்தபிறகு அந்த ஜாதிகளின் பரஸ்பர சம்பந்தங்களை நிர்ணயிப்பது அனுமானத்

தின் இரண்டாவது வேலை. இந்த சம்பந்தங்கள் (1) சுபாவ சம்பந்தங்கள் (2) காரண காரிய சம்பந்தங்கள் (3) சகவாச சம்பந்தங்கள் என மூவகைப்படும். பனிக்கட்டியும், ஜலமும், நீராவியும் ஒரே பொருளின் மூவித நிலைகள். சீதோஷ்ண ஸ்திதியை ஒத்து இப்பொருள் ஆவியாகவோ, நீராகவோ பனிக்கட்டியாகவோ இருக்கின்றது. அப்படியே இவ்வுலகி லுள்ள அநேக பொருள்களுக்கு இம்மூன்று நிலைகள் உண்டு. இது சுபாவ சம்பந்தத்திற்கு உதாரணம்.

களி மண்ணும், ஜாடியும் பார்ப்பதற்கு ஒரே பொருளாகக் காணப்படவில்லை. ஆனால் ஜாடி களி மண்ணால் செய்யப்படு கிறதென்று எல்லோருக்கும் தெரியும். குயவனால் தயாரிக்கப் பட்டு அவனது சக்கரத்தால் செய்யப்பட்ட பிறகே 'களிமண் ஜாடியாக மாறுகிறது. ஆகையால் ஜாடி களிமண் மட்டுமல்ல. களி மண்ணும், குயவன் வேலையும் சேர்ந்து ஜாடியின் காரணங்கள். இவைகளில் களிமண்ணை உபாதான காரணம் அல்லது வஸ்து காரணமென்றும், குயவனை நிமித்தகாரணமென்றும் சொல்வது வழக்கம். அப்படியே காய்ச்சின பாலில் ஒரு துளி மோர் சேர்த்தால் தயிறு உண்டாகிறது. ஆகையால் தயிறுக்குப் பால் உபாதான காரணமென்றும், மோர்த்துளி நிமித்த காரணமென்றும் சொல்ல வேண்டும். சுபாவ சம்பந்தத்திற்கும், காரிய காரண சம்பந்தத்திற்கும், முக்கிய வித்தியாசம் என்னவெனில், முன் நிலையிலிருந்து பின் நிலைக்கும், பின் நிலையிலிருந்து முன் நிலைக்கும் போவது சுபாவ சம்பந்தத்தில் சாத்தியப்படும். பனிக்கட்டி ஜலமாக மாறுவது போலவே, ஜலமும் பனிக்கட்டியாகவே மாறும். ஆனால் காரணத்திலிருந்து காரியம் வருமே யொழிய காரியத்திலிருந்து காரணம் வராது. தயிரிலிருந்து பால் கிடைக்காது. ஜாடியை உடைத்து முன் போன்ற களிமண்ணைச் செய்ய முடியாது. காரியம் இருக்கும்பொழுது காரணம் இருந்தே தீரவேண்டும். காரணம் இருக்கும்பொழுது காரியம் சம்பவிக்கக்கூடும்; சம்பவித்தே தீரவேண்டும் என்று சொல்வதற்கில்லை. மேகமில்லாமல் இடியில்லை. இடியில்லாமல் மேக மிருக்கலாம்.

இடிக்கும் மின்னலுக்குமுள்ள சம்பந்தத்தை சகவாச சம்பந்தம் என்று கூறலாம். இரண்டும் சாதாரணமாகச் சேர்ந்து காணப்பட்டாலும், இடியிருக்கும்பொழுது மின்னல் இருந்தே தீரவேண்டுமென்றுவது, மின்னல் இருக்கும்பொழுது இடி யிருப்பது அவசியம் என்றுவது சொல்ல முடியாது. இரண்டுக்கும் காரணம் மேகம். இரண்டும் அதன் காரியங்கள்.

ஜகத்திலுள்ள பொருள்களில் பலவற்றிற்குப் பொதுவாக வுள்ள சம்பந்தங்களுக்கு இயற்கைத் தத்துவங்கள் என்று பெயர். எல்லா கனபதார்த்தங்களும் மேலிருந்து கீழே விழுகின்றன. ஒரு சாமான் கீழே விழாமலிருந்தால் அதைக் கீழே போகாமல் தடுக்கும் காரணம் ஒன்று இருக்கவேண்டும். மேலிருந்து கீழே விழும்பொழுது பெரிய கல்லாயிருந்தாலும், இரும்புக் கட்டியாக இருந்தாலும், பஞ்சாக இருந்தாலும், ஒரே வேகத்துடன் கீழே விழுகின்றன. இந்த விஷயங்களை ஆராய்ந்து ஞானிகள் ஆகர்ஷண சக்தி (Gravity) என்ற ஒரு இயற்கைத் தத்துவத்தை ஸ்தாபித்திருக்கின்றனர். இதன்படி, இரண்டு அணுக்களை ஒரு குறிப்பிட்ட தூரத்தில் வைத்தால், இவ்விரண்டணுக்களுக்கு மத்தியில் ஓரளவு பரஸ்பர ஆகர்ஷண சக்தி உண்டாகிறது. தூரம் இரண்டு மடங்கானல் சக்தி நாலில் ஒரு பங்காகிறது. தூரம் பாதியானல் சக்தி நான்கு மடங்காகிறது.

முதலில் உலகத்தில் இந்த சக்திக்குட்பட்ட பொருள்களை கனபதார்த்தங்களென்றும், இதற்குட்படாத ஒளி, உஷ்ணம் முதலிய கிரணங்களை சக்திகள் என்றும் கூறப்பட்டது. தற்காலத்திய நுண்ணிய ஆராய்ச்சிகளால் இவ்வித்தியாசம் மறைந்து விட்டது. உலகிலுள்ள சகல வஸ்துக்களும் ஆகர்ஷண சக்திக்குட்பட்டவை. ஒளி, உஷ்ணம் முதலிய கிரணங்களும் அதற்குட்பட்டவை. அவைகளுக்கும் கனமுண்டு. நாள் ஒன்றுக்கு சூரியனிடமிருந்து வெளிவரும் ஒளிக்கிரணங்களின் கனம் சுமார் இரண்டு லக்ஷம் டன் என்று கணக்கெடுத்திருக்கின்றனர். வெகு தூரத்திலிருக்கும் ஒரு நக்ஷத்திரத்திலிருந்து வரும் ஒளிக்கிரணங்கள் சூரியனருகில் செல்

லும்பொழுது இந்த சக்தியால் இழுக்கப்பட்டு சிறிது வழி கோணி நம் கண்ணுக்குப் புலப்படுகின்றன.

மேலே கூறிய உதாரணங்களிலிருந்து, அனுமானம் எவ்வளவு மகத்தான கருவியென்று விளங்கும். இயற்கைத் தத்துவங்களை ஸ்தாபிப்பதனால் ஜகத்தின் விசித்திரம் நன்கு புலப்படுவதன்றியில், அதிலிருக்கும் விசித்திர சக்திகளை உபயோகிக்கும் ஆற்றலைப் பெறுகிறோம். நீராவியின் தன்மையை ஆராய்ந்ததின் பயனாக புகை வண்டிகள் ஓடுகின்றன. மண்ணெண்ணெயின் ஆவியால் மோடாரும், ஆகாய விமானங்களும் செல்லுகின்றன. மின்சார சக்தியின் உதவியைக் கொண்டு மனித சமூகம் எவ்வளவு அற்புத மாறுதலடைந்து வருகிறதென்று பத்திரிகை வாசிப்பவர்கள் அறிவார்கள். ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் நடக்கும் சம்பவங்களை கம்பித் தந்திகளாலும், கம்பியில்லாத் தந்திகளாலும் அறிகிறோம். இதெல்லாம் நம் முன்னோர்களால் கல்பனையில்கூட கண்டதில்லை.

மதம், சாஸ்திரம் அல்லது ஆப்தர்களின் உபதேசம் மூன்றுவது பிரமாணம். இதே எல்லாவற்றிலும் முக்கியமான பிரமாணமென்றும், மற்றப் பிரமாணங்கள் இதற்கு விரோதமாக விருக்கும்பொழுது தள்ளப்படவேண்டுமென்றும் எல்லா மதங்களிலும் போதிக்கப்பட்டு வருகிறது. இதன் காரணம், ஒவ்வொரு மதத்தினரும் தங்கள் மூல குருக்கள் தெய்வீக புருஷர்களென்றும், தங்கள் மதக்கிரந்தங்கள் ஈசுவரனிடமிருந்து பிரத்தியேகமாகக் கிடைத்தனவென்றும் கொண்ட நம்பிக்கை. மனித சமூகங்களின் சரித்திரங்களை ஆராய்ந்தால் இக்கொள்கை ஆதாரமற்றதென்றும், பல அநர்த்தங்களுக்குக் காரணமானதென்றும் எளிதில் விளங்கும்.

ஹிந்துக்கள் வேதங்களையும், மகம்மதியர் குரானையும், கிறிஸ்தவர் பைபிளையும் கடவுளிடமிருந்து நேரில் கிடைத்ததாக நம்புகின்றனர். இவைகளில் சில விஷயங்களில் ஒற்றுமையும், பல விஷயங்களில் வேற்றுமையும் காணப்படுகின்றன. இப்புஸ்தகங்களெல்லாம் ஒரே சர்வேசுவரனிடமிருந்து

வந்தவையென்று நம்புவது சாத்தியமில்லை. இக்காரணத்தால் ஒவ்வொரு மதத்தினரும் தங்கள் கிரந்தங்களைப் போற்றுவதுடன் மற்ற மதத்தார்களின் கிரந்தங்களை இகழவேண்டியிருக்கிறது. ஆனால் நடுநிலைமை வகித்துப் பார்க்கின் இக்கிரந்தங்களில் ஒன்று மற்றவையைக்காட்டிலும் தெய்வீகமானதென்று உரைப்பதற்கு எவ்வித காரணமுமில்லை. தவிர, இவைகளெல்லாவற்றிலும் பல விஷயங்கள் ஒப்புக்கொள்ளக் கூடாதவைகளாகவிருக்கின்றன. இவைகளில் சொல்லப்பட்ட சிருஷ்டிக்கிரமங்களும், தெய்வத்தின் செய்கைகளும் பல அம்சங்களில் குழந்தைகளுக்குச் சொல்லும் கட்டுக் கதைகளை போல்வன.

இந்தப் புஸ்தகங்களுக்குத் தெய்வீகத்தன்மை கொண்டாடுவதை விட்டாலொழிய சமூகம் முன்னேற முடியாது. ஈசுவரன் இது வரையில் எவருக்கும் பிரத்தியேகமாகத் தோன்றி எவ்வித ஞானத்தையும் கொடுத்ததாக நம்புவதற்கு கொஞ்சங் கூட ஏதுவில்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் மதியென்னும் அபூர்வ சக்தி இருக்கிறது. இக்காலத்தைப் போலவே, எக்காலத்திலும் சிலர் மந்த மதிகளாகவும், சிலர் கூர்மதி படைத்தவர்களாகவும் இருந்து வந்திருக்கிறார்கள். அந்தந்தக் காலங்களில் தோன்றிய புத்திமான்கள் தங்களுக்குக் கிடைத்த மதி, கல்வி, அறிவின் சாதனங்கள் இவைகளை அனுசரித்து இவ்வுலகத்தின் விசித்திர தத்துவங்களை ஆராய்ந்து தங்கள் காலத்தவர்களுக்கு உபதேசித்தார்கள். அவைகளில் சில ஆராய்ச்சிகள் இன்றும் நமக்கு ஆச்சரியத்தையும், நல்லறிவையும் கொடுக்கத்தக்கனவாக இருக்கின்றன. மற்றவை இக்கால அறிவின்படி ஒப்புக்கொள்ளத் தகாதனவாக இருக்கின்றன. இதையெல்லாம் சிறிதேனும் கவனியாமல் நமது மத கிரந்தங்களை முழுதும் நம்பவேண்டுமென்று சொல்வது அவைகளை இகழ்வதேயாகும். முழுவதையும் நம்ப இடமில்லை. தெய்வத்தால் செய்யப்பட்ட கிரந்தங்களில் பிழைகளுக்கிடமில்லை. பல பிழைகள் இருப்பதால், இவைகளை முற்றிலும் தள்ளிவிடவேண்டும் என்ற தர்க்கத்திற்கு வேதம் அமானுஷம் என்ற வாதம் நம்மைக் கொண்டுவந்து விடும்.

ஆனல், அறிவாளிகள் இந்த சங்கடத்தில் அகப்பட்டுக் கொள்ள வேண்டியதில்லை. எல்லா சாஸ்திரங்களும் நுண்ணிய மதியுடைய அறிஞர்களால் செய்யப்பட்டவை. ஆகையால் அவைகளை வணக்கத்துடன் படித்து இக்காலத்தில் நமக்கு உபயோகமிருக்கும் அம்சங்களை ஏற்றுக் கொண்டு மீதியைத் தள்ளுவது நமது கடமை.

பொதுவாக ஒரு நியமத்தை ஐயமின்றிக் கூறிவிடலாம். பிரத்தியக்ஷமான விஷயங்களிலும், பிரத்தியக்ஷத்தை ஆதாரமாகக்கொண்டு அனுமானத்தால் கிடைத்தஅறிவிலும் மதத்திற்கும், சாஸ்திரத்திற்கும் இடமில்லை. இவைகளுக்கு விரோதமான மதம், சாஸ்திரங்கள் பெயரால் உலவிவரும் கொள்கைகளை தாக்ஷிண்யமின்றித் தள்ளிவிட வேண்டும்.

இதனல் மதத்தினல் ஆகவேண்டியகாரியம் ஒன்றுமில்லையென்று நினைத்துவிடக் கூடாது. பலவிஷயங்களை மனிதஅறிவினல் நிச்சயபூர்வமாகத் தீர்மானிக்கமுடியாது. அவைகளில், பெரியார்களின் மனத்தில் தோன்றும் எண்ணங்களைக் கொண்டே வாழவேண்டியவர்களாக விருக்கிறேம். இவைகள் என்னவென்று ஆராயுமுன் இம்மூன்று பிரமாணங்களைக் கொண்டு கிடைக்கும் ஞானத்தின் தன்மையையும், பிரிவுகளையும் சற்று கவனிப்போம்.

## (4)

நமது மதியைக்கொண்டு அறியக்கூடிய ஞானம் பலவகைப்பட்டது. அவைகளை (1) ஆராய்ச்சி ஞானம் (2) தியான ஞானம் என்ற இரண்டு முக்கியப் பிரிவுகளாக வகுக்கலாம். ஆராய்ச்சிஞானத்தில் பிரத்தியக்ஷமும், அதனை ஆதாரமாகக் கொண்ட அனுமானமுமே கருவிகள். தியானத்தால் உண்டாகும் ஞானத்திலோ பிரத்தியக்ஷமும் அனுமானமும் ஓரளவே உதவி யளிக்கும். தூய வாழ்க்கையையுடைய பெரியார்கள் தியானம்செய்யும்பொழுது அவர்களின் உள்ளத்தில் உதிக்கும்

எண்ணங்களே இந்த ஞானத்தின் முக்கிய அம்சங்கள். இவ்விடம் ஆராய்ச்சி ஞானத்தைப்பற்றி ஆலோசிப்போம்.

ஆராய்ச்சி ஞானம் இப்பிரபஞ்சத்தின் மூலமாகவுள்ள இயற்கைத்தத்துவங்களை நிர்ணயிப்பதை லக்ஷ்யமாக உள்ளது. ஆதி முதற் கொண்டு மனிதர் ஜகத்தின் விசித்திரத்தைப்பற்றி வியப்புடன் விசாரித்திருக்கின்றனர். ஆனால் இந்த விசாரம் தற்காலத்தில் மிகவும் விரிவோடும் நிச்சயத்தோடும் செய்யப் படுகிறது. மதப் புஸ்தகங்களிலிருந்து கிடைக்கும் லௌகிக ஞானம் ஆயிரக்கணக்கான வருஷங்களுக்குமுன் வசித்த மனிதர்களின் கல்பனைகளை அறிவிப்பதற்கு உபயோகமே ஒழிய, அதைக்கொண்டு தற்கால ஆராய்ச்சிக்குத் தடை செய்வது பரிகாசத்திற்கு இடமாகும். ஆயினும், ப்ருனோ, காலிலியோ, டார்வின் முதலிய மேதாவிகள் பைபிளில் சொல்லப்பட்ட சிருஷ்டி கிரமத்திற்கு விரோதமாக இயற்கைத்தத்துவங்களை ஸ்தாபித்த பொழுது கிறிஸ்தவமதப்பித்தர்களால் துன்புறுத்தப்பட்டனர். நம்நாட்டில் வித்வான்கள் அப்படிக்கஷ்டப்படுத்தப் படாவிடினும், நம்சாஸ்திரங்களில் காணப்படும் மூடக்கொள்கைகளுக்குக்கணக்கில்லை. தற்காலம் ஆரம்ப கலாசாலையில் படிக்கும் எட்டு வயது பையன் கூட பூமி உருண்டையானதென்று போதிக்கப்படுகிறான். பூமியை அஷ்டதிக்கஜங்கள் தாங்கி நிற்கின்றனவென்று, நம் புராணங்களில் போதிக்கப்பட்டு எவ்வளவு கோடி ஜனங்கள் இன்னும் நம்புகின்றனர்! சூரிய கிரகணம் சந்திரனுடைய நிழல் சூரியனை மறைப்பதாலும், சந்திரகிரகணம்—பூமி சூரியனுக்கும் சந்திரனுக்கும் மத்தியில் வருவதாலும் உண்டாகின்றனவென்று நமது புராதன வான சாஸ்திரிகளும் அறிந்திருந்தார்கள். அப்படியிருந்தபோதிலும், கிரஹணகாலங்களில் சங்கல்பம் செய்து ராகு விடமிருந்து சூரியனையும் சந்திரனையும் விடுவிக்க முயலுகின்றோம். நமது புராணங்கள்முழுதும் இப்பேர்ப்பட்ட கட்டுக்கதைகள் நிரம்பியிருக்கின்றன. அவைகளை யெல்லாம் பாரமார்த்தமாக நம்ப வேண்டுமென்று வாதிப்பார் பலர் இன்னும் இருக்கின்றனர். ஆசிரியர்களின் காலங்களில் உள்ள பழக்கவழக்கங்களையும்

அவர்களடங்கிய சமூகங்களின் நம்பிக்கைகளையும் அறிவிப்பதற்கே புராணங்கள் உதவும். சரித்திராம்சமும் சிறிதளவு இருக்கலாம். இவைகளின்பேரில் கவிகளின் கல்பனுசக்திகளைக் கொண்டு கட்டப்பட்ட விநோதக்கதைகளென்பதில் சிறிதுகூட சந்தேகமில்லை. ஆனுல் ராவணனுக்குப் பத்துத்தலை இருந்தனவென்றும், அனுமார் ஆயிரமைல் சமுத்திரத்தை உண்மையில் தாண்டினுரென்றும் எவ்வளவு இந்தியர் நம்புகின்றனர்! இதைப்படிக்கும் ஹிந்துக்களில்பலர் ஆக்திரத்துடன், "வால்மீகிமுனி பொய்சொல்வாரா?" என்றுகேட்பார்கள். உண்மையில் வால்மீகிஎவ்விதப்பொய்யும் எழுதவில்லை. அவர்ஒருகவி. ஒன்றிரண்டு சரித்திரசம்பவங்களை வைத்துக்கொண்டு சமூகத்துற்கு ஆதர்சமாகவிளங்கக்கூடிய நாயகர்களையும் நாயகிகளையும் கற்பித்துக் கதை எழுதுவதே கவிகளின்வேலை. இந்தநியாத்தைக் கொண்டே துளஸிதாஸரும், கம்பனும் தங்கள் இஷ்டப்படி இராமாயணக் கதையை மாற்றி எழுதினுர்கள். அனுமார் கதையில் ஆயிரம் மைல்தாண்டினுல் வால்மீகியின் பொய்மையைக் காட்டாது. அதைப் பரமார்த்தமென்று வாதிப்பவர்களே அறிவீனர்கள்.

நமது இந்திரியங்களின் சக்திகளை ஆயிரமடங்கு அதிகரிக்கும் கருவிகளைக்கண்டு பிடித்ததே தற்காலபூத ஞானத்தின் விரிவிற்கு அஸ்திவாரம். பூதக் கண்ணுடியைக் கொண்டு ஒரு அங்குலத்தில் பதினுயிரத்தில் ஒருபாகம் அளவுள்ளபொருளை அளக்கலாம். தூர திருஷ்டிக் கண்ணுடியின் உதவியால் கோடானுகோடி மைல்தூரத்தில் நமது கண்ணுக்கெட்டாமலிருக்கும் நக்ஷத்திரங்களைத் தெளிவாகப் பார்க்கிறோம். வர்ணரேகைக் கண்ணுடி (Spectroscope)யைக்கொண்டு நக்ஷத்திரங்களிலுள்ள பொருள்களை நிர்ணயிக்க முடியும்.

அளவோடு கூடிய ஞானமே நிச்சயமானது. ஆகையால் ஆராய்ச்சி ஞானத்தில், காலம், தேசம், கனம், உஷ்ணம், பிரகாசம்முதலியஅளவுகளை நிர்ணயிப்பது முக்கியவேலை. இதற்கு கணிதசாஸ்திரம் ஆதாரம். கணிதசாஸ்திரம் தற்காலம் அடைந்திருக்கும் விரிவை அதைக் கற்றுலொழிய அறிய முடியாது.

கணிதத்தின் உதவியைக்கொண்டு, சலனம், உஷ்ணம், ஒளி, காந்தம், மின்சாரம்முதலிய இயற்கை சக்திகளின் சுபாவங்களைத்தெரிவிப்பது இயற்கை சக்தி சாஸ்திரம் (Physics) இது மேல் நாட்டுநாகரீகத்திற்கு அடிப்படையானது. இயந்திரங்களை அமைப்பதற்கும் ஓட்டுவதற்கும் இது இன்றியமையாதது.

இதைப் போலவே, ரஸாயன சாஸ்திரம் உலகிலுள்ள பொருள்களின் சுபாவங்களையும், அவைகள் ஒன்றோடொன்று சேருவதால் உண்டாகும் மாறுதல்களையும் தெரிவித்து, அத் தத்துவங்களைக்கொண்டு எஃகு, கண்ணாடி, சாயம், முதலிய பல கைத் தொழில்களுக்கு ஆதாரமாக இருக்கிறது. விவசாயத்தின் அபிவிருத்திக்கும் ரஸாயன சாஸ்திரம் அத்யாவசியமானது.

கணிதம், சக்தி சாஸ்திரம், ரஸாயன சாஸ்திரம் இவைகளின் உதவியைக் கொண்டு பரமாணுக்களின் தன்மையை ஒரு பக்கமும், வெகு தூரத்திலிருக்கும் பிரம்மாண்டமான நக்ஷத்திரக் கூட்டங்களின் போக்குகளை! மற்றொருபக்கமும் விசாரித்து அசேதன ஜகத்தின் விசித்திரத்தை அறிய ஆற்றல் பெறுகிறோம். இந்த ஞானத்தின் பெருமையை அறிந்து அதைப் பரப்புவது நம்தேசம் முன் செல்வதற்கு அஸ்திவாரமான வேலை. இல்லாவிடில் நமது வறுமை விலகாது. பாரத தேசம் மற்ற நாடுகளுக்கு முன் தலை தூக்கி நிற்க முடியாது.

அசேதனப் பொருள்களின் ஞானத்தைப் போல் சேதன பொருள்களைப் பற்றிய அறிவு நிச்சயமாக இருக்க முடியாது. இவ்விரண்டுக்கும் மத்தியில் ஓர் விசித்திர சக்தி இருக்கிறது, இதை உயிர், பிராணன், அல்லது ஜீவன் என்று கூறலாம். இதன் தன்மையை முழுதும் விளக்க வாக்குக்கு வல்லமையில்லை. ஒரே பழத்திலுள்ள இரண்டு விதைகளைப் போட்டால் அவைகளிலிருந்து கிளம்பும் செடிகளில் ஏதாவது வித்தியாசம் அவசியம் காணப்படும். உயிருள்ள பொருள்களை ஸ்தாவரங்கள் என்றும், ஜங்கமங்கள் என்றும் வகுப்பது வழக்கம்.

ஸ்தாவரசாஸ்திரம் (Botany) செடிகள் மரங்கள் இவைகளின் உற்பத்தி, வளர்ச்சி, வியாதிகள் முதலியவற்றை ஆராய்வதால் விவசாயத்திற்கு இன்றியமையாதது, ஜங்கம சாஸ்திரத்தின் (Biology) முக்கிய நோக்கம் அல்ப புழுக்களிருந்து மனிதன் ஈறாக வுள்ள பிராணிகள் படிப்படியாக உண்டாவதை விளக்குவதே. இதைப்பரிணாம வாதம் என்றுபெயரிடலாம்.

மனித அறிவுக்கு விசேஷ பாத்திரமானது மனித வாழ்க்கையே. இதற்கு ஆதாரம் மனித சரீர சாஸ்திரம் (Physiology). இதன் பேரில் வைத்திய சாஸ்திரம் அமைக்கப் பட்டிருக்கிறது இந்நாட்களில் வைத்திய சாஸ்திரம் அதிக விரிவடைந்திருப்பதன் பலனாக, அரிய ரண சிகிச்சைகள் செய்யவும், எக்ஸ்ரே முதலிய சக்திகளால் நோய்களை அறியவும் ஆற்றல் பெற்றிருக்கிறோம்.

மனோபாவ சாஸ்திரம் மிகவும் முக்கியமானது. மனிதனுடைய சுகதுக்கம் அவன் மனத்தைப் பற்றியிருப்பதால் குழந்தைகளை வளர்ப்பதற்கும், குற்றவாளிகளைச் சீர்ப்படுத்துவதற்கும் பொதுவாக மனித சமூகத்தின் நன்மையை நாடுவதற்கும் இந்த சாஸ்திரம் பேருதவியளிக்கும். ஆனால், மனோபாவங்களின் தத்துவங்களை ஸ்தாபிப்பது மிகவும கஷ்டமானது. ஒருவன தனது மனோபாவங்களைக் கூட சரிவர கவனித்து விரித்துரைப்பது அரிது. மற்றவர்களின் மனோபாவங்களை அறிந்து பொதுவாகவுள்ள உண்மைகளை நிர்ணயிப்பது மிகவும் சிரம சாத்தியமென்று சொல்ல வேண்டியதில்லை.

அசேதன சாஸ்திரங்களுக்கும், ஜீவ சாஸ்திரங்களுக்கும் பிரத்தியக்ஷம், அநுமானம் ஆகிய இரண்டே பிரமாணங்களாக இருந்த போதிலும், தத்துவங்களை ஸ்தாபிக்கும் முறையில் வித்தியாசம் இருக்கிறது. ரஸாயன ஆராய்ச்சி செய்யும் பொழுது வேண்டிய பொருள்களை இஷ்டப்படி ஆராய்ச்சி சாலைகளில் தயாரித்துக் கொள்ளலாம். உயிருள்ள பொருள்களை அப்படித் தயார் செய்து கொள்ள முடியாது. தொடர்ச்சியாகப் பல வருஷங்கள் கவனித்து ஆராய்ந்த பின்பே உண்

மைகள் தெளிவாகும். அதிலும் மனோபாவங்களை அறிய, மனத்தின் போக்கை சாந்தத்துடன் கவனிப்பதைத் தவிர வேறு வழியில்லை. நமது மனோபாவங்களின் அனுபவத்தின் பேரில் மதங்கள் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மதமும் சில மனோபாவங்களைப் பெருக்கி, மற்றவைகளைக் குறைக்க வேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டுள்ளது. ஆகையால், உலகில் தோன்றிய மதங்களைப் பூராவாக ஆராயாமல் மனோபாவ சாஸ்திரம் முடிவான தத்துவங்களை உபதேசிக்க முடியாது.

நமது அறிவு பூர்த்தியாவதற்கு சரித்திரம், ராஜ்ய சாஸ்திரம், பொருளாதார சாஸ்திரம் முதலிய சமாஜ சாஸ்திரங்களும் அவசியமானவை. பெரிய சமூகங்களின் பழக்கங்களும், நடவடிக்கைகளும் எப்படி உண்டாயின, மாறுதல் அடைந்தன வென்றும் அவைகளால் அந்த சமூகங்கள் எவ்வித உன்னதி பெற்றுப் பிறகு க்ஷீணித்துப்போயின வென்றும் ஆராய்வதால் நமது சமாஜத்தின் லக்ஷயங்களை நிச்சயிப் பதற்கு ஆற்றல் பெறுவோம். இந்தியாவின் தற்கால நிலைமையில் உலக சரித்திரத்தைப் படித்தல் மிகவும் அவசிய மானது. பரம் பரையாக வந்திருக்கும் மூடக் கொள்கைகளை விட்டு விடுவதற்கு இது பேருதவியளிக்கும். சகுனம், ஜோஸ்யம், பேய், பிசாசு முதலிய நம்பிக்கைகள் மற்றதேசங்களிலும் உலவி வந்திருக்கின்றன. அவ்விடங்களில் கல்வி அதிகரிக்கவே இவைகளில் நம்பிக்கை குறைந்து ஜனங்களின் மனத்திலிருந்து அளவற்ற பயம் ஓடி விட்டது. நமது நாட்டிலும் இப்பூச்சாண்டிகள் எவ்வளவு சீக்கிரம் மறைகின்றனவோ, அவ்வளவு விரைவில் சீரடைவோம். உலக சரித்திரத்தைப் படிப்பதே இதற்குக் கைகண்ட சாதனம்.

(5)

மானிட வாழ்க்கையின் லக்ஷயங்கள் என்ன? தர்மார்த்த காம மோக்ஷங்கள் என்று சொல்லப்படும் புருஷார்த்தங்களை

ஒவ்வொரு மனிதனும் எவ்வளவு தூரம் எந்த வழிகளில் நாட வேண்டும்? இவைகள் ஒன்றிற்கொன்று பல விதங்களில் விரோதமாக விருப்பின், எதை விட்டு எதனை நாடவேண்டும்?

நமது செயல்கள் ஓரளவே நமது புத்தி பூர்வமாகச் செய்யப் படுகின்றன. பல சம்பவங்களை நாம் தடுக்க முடியாமல் பொறுக்க வேண்டியவர்களாக விருக்கிறோம். அடிக்கடி நமது சுபாவ குணங்களுக்கும் அறிவுக்கும் சண்டை ஏற்படுகிறது. பசியால் வருந்தும் மனிதன் திருடலாமென்று நினைக்கிறான். ஆனால், அவன் அறிவு திருடுதல் தீமையென்று போதிக்கிறது. காமவெறி பிடித்தவன் தன் அறிவை மீறி பாதக வழி நாடுகிறான். நமது இந்திரியங்களை அடக்கி ஆள்வது எவ்விதம்?

பிறந்தவன் இறக்க வேண்டும். இதை அறியாதவன் இல்லை. ஆனால் யுதிஷ்டிரரை யக்ஷன் உலகில் எல்லாவற்றிலும் வியப்பான செய்தியைக் கூறும்படி கேட்டபொழுது, ஒவ்வொரு மனிதனும் தான் இறப்பான் என்று நம்பாமல் வாழ்வதே அதிசய மென்றார். எந்த மனிதனுக்காவது தன் மரணத்தின் ஞாபகம் சதாகாலமும் இருக்குமாகில் அவன் இந்த உலகின் அற்ப சுகங்களில் ஈடுபட எப்படி சம்மதிப்பான்? மரணத்திற்குப் பின் நிலையை அறிய சக்தியற்றவர்களாக விருக்கின்றோம். இந்த ஸ்திதியில் பயமின்றி இறப்பதற்கு தைரியம் பெறுவது எப்படி?

ஒவ்வொரு மனிதனும், ஒரு சமூகத்தின் அங்கத்தினராக இருக்கிறான். அந்த சமூகத்திடம் அவனுக்குள்ள கடமையென்ன? மனிதர்கள் ஒருவருக்கொருவர்பால் நடந்து கொள்ளும் முறை என்ன? ஸ்திரீ, புருஷர்களுடைய பரஸ்பர சம்பந்தம் எப்படி இருக்க வேண்டும்? குழந்தைகளை எப்படி வளர்க்க வேண்டும்?

இக்கேள்விகளுக்கு பதிலுரைப்பது தர்ம ஞானம். இது எவ்வளவு அத்தியாவசியமான தென்று சொல்லாமலே விளங்கும். மற்ற ஞானங்கள் அதிகமாக இல்லாமல் ஒருசமூகம் வாழ முடியும். தர்ம ஞான மில்லாமல் வாழ முடியாது. ஆகை

யால், தர்ம ஞானம் எந்த சமூகத்திலும் முதல் முதலாகத் தோன்றுகிறது.

ஒருவனுடைய தர்மா தர்ம விவேகம் பிரத்தியக்ஷத்தாலும் அனுமானத்தாலும் உண்டாவதில்லை. அவனது மனச்சாக்ஷியானது ஒரு பிரத்தியேக அறிவல்ல. அவனுடைய சமூகத்தின் கொள்கைகளிலிருந்தும் பழக்க வழக்கங்களிலிருந்தும் உண்டாகிறது. இந்தக் கொள்கைகளும், பழக்க வழக்கங்களும் அவ்வப் பொழுது தோன்றும் பெரியார்களின் மனதில் உதிக்கும் எண்ணங்களை ஆதாரமாகக் கொண்டுள்ளன. இதற்குத் தான் மதம் என்று சொல்லுவது. ஆகையால் தர்ம ஞானத்திற்கு மதம் பிரமாண மென்று உரைப்பது தவறு. புத்த மதத்தைப் போன்ற சில மதங்கள் தர்மத்தைத் தவிர வேறொன்றும் போதிக்க வில்லை.

நன்மை, தீமை, நியாயம், என்கிற வித்தியாசங்களை ஒப்புக்கொள்ளாத மனிதன் இல்லை. ஆகலால், ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு மதம் இருந்தே தீரவேண்டும். அவன் ஒருக்கால் மற்ற மதங்களை ஒப்புக்கொள்ளாமல் இருக்கலாம். அப்பொழுது தனக்காக ஒரு பிரத்தியேக மதத்தை ஸ்தாபித்துக் கொள்ள வேண்டும்.

இது எளிதான காரியமல்ல. நமது ஆகாரத்தை எடுத்துக் கொள்ளுவோம். காட்டில் வசிக்கும் சில ஜாதிகள் மனிதன் உள்பட எல்லாப் பிராணிகளையும் தின்கிறார்கள். பெரும் பாலான மனிதர்கள் மனிதனைத் தவிர மற்ற மிருகங்களை உண்ணலா மென்ற கொள்கை கொண்டிருக்கின்றனர். சிலர் தானியங்களையும், மரக்கறிகளையும் கொண்டே காலம் வாழ வேண்டும் என்ற மத முடையவர்களாக இருக்கிறார்கள். இவர்களில் எச்சாரார் மதத்தை ஒப்புக் கொள்ள வேண்டுமென்று நிச்சயமாக உரைக்கப் பிரமாணங்களில்லை. தர்க்கத்தினால் எதையும் சரியென்று வாதாடக் கூடும். ஒருவனது மதமும், தன் அந்தக்கரணத்தில் தோன்றும் உணர்ச்சியுமே வழி காட்ட வேண்டும்.

அப்படியே ஒருவன் தன் தேசத்திற்கோ, சமூகத்திற்கோ மதத்திற்கோ பாடுபட வேண்டும், சில காலங்களில் உயிரையும் கொடுக்க வேண்டுமென்று வெறும் தர்க்கத்தினால் ஸ்தாபிக்க முடியாது. ஆனால், சுய நலமற்ற புருஷர்களே மனித சமூகத்தின் சிகாமணிகளென்று மதிக்காதவனுண்டோ?

தர்ம ஞானம் இன்றியமையாதது. ஆனால், அனுஷ்டானமில்லாமல் அது எதற்கும் உபயோகமில்லை. தர்மானுஷ்டானம் நமது இயற்கை குணங்களான காமம், குரோதம், லோபம் முதலியவைகளைக் கட்டுப் படுத்த முயல்வதால் வெகு பிரயாசத்துடன் அடையக் கூடியது. அது பரம்பரையாக வந்தால் அனுசரிக்க எளிதாக விருக்கும். அப்பொழுதே சமூகம் செழித்தோங்கும். கோடிக் கணக்கான ஜனங்கள் ஒரு செய்கையை நன்மையென்று நாடுவதும், மற்றொன்றை தீமையென்று விலக்குவதும் சில நாட்களில் ஆகக் கூடிய காரியமல்ல. ஆகையால் வெகு காலமாக வந்திருக்கும் தர்மா தர்மக் கொள்கைகளை எவனும் தீர ஆலோசிக்காமல் கலைக்கக் கூடாது. சில மூடக் கொள்கைகளுக்காக மற்றும் பல உயர்ந்த கொள்கைகளுள்ள மதத்தை ஆத்திரப்பட்டு அழிக்க விரும்புவது மதியீனம். தாழ்மையும், மரியாதையும் இல்லாத எவனும் எந்த சமாஜத்தையும் சீர் திருத்த உரிமை பெற மாட்டான்.

தர்மத்திற்குப் பெரியார்களின் எண்ணங்கள், அதாவது மதம், முக்கிய பிரமாணமென்று மேலே காண்பிக்கப் பட்டது. ஆனால், தர்மா தர்மத்தை நிர்ணயிப்பதில் நமது மதிக்கு வேலையில்லை யென்று நினைப்பது முற்றிலும் தவறு. அப்படி எண்ணுவதால் பெரிய கெடுதி நேரிடும்.

எந்த மதமும் தெய்வத்தால் நேரில் ஸ்தாபிக்கப் படவில்லை யென்பதை மறந்து விடக்கூடாது. நம்மைப் போன்ற மனிதர்களே அவைகளின் ஸ்தாபகர்கள். பரிபூரண புருஷன் இவ்வுலகத்தில் உதித்ததில்லை. ஆகையால் எம் மதத்திலும் சில அம்சங்கள் மேன்மை தரக் கூடியவையாகவும் மற்ற அம்

சங்கள் ஸ்தாபகர்களின் காலங்களுக்கே பொருத்தமானவை களாகவும் இருக்கும். மேலும், ஒவ்வொரு மதமும் சில குணங்களையே முக்கியமாக வற்புறுத்துகின்றன. கிறிஸ்தவ மதம் அன்பு வணக்கம், தெய்வபக்தி முதலிய குணங்களைப் பிரதானமாகப் போதிக்கிறது. மகம்மதிய மதம் தைரியத்தை யும், சகோதர பாவத்தையும் அடிப்படையாகக் கொண்டது. ஹிந்து மதம் அஹிம்சை, இந்திரிய நிக்கிரகம், சகிப்புத் தன்மை இவைகளை வற்புறுத்துகிறது. பூரண மனிதனுவ தற்கு இந்த குணங்களெல்லாம் தேவை. எம்மதத்தில் பிறந் தாலும், மற்ற மதங்களை ஆராய்ந்து அவைகளில் தோன்றும் நன்னெறிகளையும் ஏற்றுக் கொள்வது அறிவாளியின் கடமை.

நமது மதத்தின் உபதேசங்களின் நன்மை தீமைகளைச் சீர் தூக்கிப் பார்த்து நல்லவைகளை ஏற்றுக் கொண்டு, தீய வழக்கங்களைத் தள்ளுவது நம்முடன் பிறந்த பிறப் புரிமை யாகும். இதை விட்டு விட்டால், நமது மனிதப் பிறப்பின் மேன்மையில் ஒரு பகுதியை இழந்து விடுகிறோம். மதத்தால் உபதேசிக்கப்பட்ட தர்மங்கள், நம்மதியால் நன்கு ஆராயப் பட்டு ஒப்புக்கொள்ளப் பட்ட பிறகே உண்மையான தர்மங் களாகின்றன.

எப்படிப் பண்டை நாட்களில் பல மேதாவிகள் தோன்றி ஞர்களோ, அப்படியே இந் நாட்களிலும் புத்திமான்கள் இருக்கிறார்கள் என்பதை மறக்கலாகாது. இவர்கள் சொல் வது நமது பழைய தர்மங்களுக்கு விரோதமாக விருப்பின், இரண்டு உபதேசங்களையும் சீர் தூக்கிப் பார்த்து மேன்மை யாகத் தோன்றுவதைக் கடைப் பிடிக்க வேண்டும்.

நமது மதி எத்துணை சிறிதாயினும், அதற்கு அநியாய மாகத் தோன்றும் காரியங்களை மதத்தின் பெயரால் செய்வது எவ்விதத்திலும் தர்ம மாகாது. தன்னுடைய எண்ணம் தவருக விருக்கலாம். ஆயினும், தீர ஆலோசித்த பிறகு தன் மனதில் பிசகென்று உறுதியாகத் தோன்றும் எந்த வழக்கத்

தையும் தள்ளிவிட வேண்டும். தர்மத்திற்கும், மதிக்கு முள்ள சம்பந்தம் தங்கத்திற்கும் தட்டானுக்கு முள்ளதைப் போன்றது. தட்டான் தங்கத்தைச் செய்ய முடியாது. ஆனால் உரைக் கல்லில் அது தங்கமா, ஈன உலோகமா வென்று பரீக்ஷை செய்ய முடியும். அப்படியே நம் மதியைக் கொண்டு தர்மா தர்மத்தைச் சோதிக்க வேண்டும். இந்த வேலையை நாம் செய்யாவிட்டால் பித்தளையைக் கண்டு தங்கமென்று மோகிப்பது போல் கொடுமையான அதர்மங்களையும் தர்மத்தின் பெயரால்செய்ய உடன்பட வேண்டி வரும்.

மரத்தின் யோக்கியதையை அதன் பழத்தின் ருசியைக் கொண்டே அறிய வேண்டும். வேப்ப மரத்தினின்று மாங்கனி கிடைக்காது. எந்த மதத்தின் நலத்தையும் அதன் பலன்களி லிருந்து அனுமானிக்கலாம். அம்மதத்தைச் சேர்ந்த சமூகம் ஞானம், அன்பு, அழகு, சுகம், தைரியம் இவைகளில் ஓங்கி வளர்ந்தால் அது உண்மையில் சன்மார்க்க மென்று கொள்ள லாம். எந்த சமாஜத்தில் இந்த குணங்கள் இல்லாமல் விபரீத குணங்கள் தோன்றுகின்றனவோ அதன் நெறியில் ஏதோ குறைகள் இருக்கின்றன வென்பது நிச்சயம். மதத்தைச் சார்ந்தவர்கள் அதை சரியாக அனுஷ்டிப்பதில்லை என்ற வாதம் உபயோக மற்றது. உயர்ந்த லக்ஷியங்களைப் போதிப் பது மட்டு மன்றி அந்த போதனைகளை அனுஷ்டிக்குமாறு தூண்டும் சக்திவாய்ந் திருந்தாலொழிய மதத்தால் பயனில்லை.

(6)

நம் கண் முன் தோன்றும் எல்லையற்ற இவ் விசித்திர பிரபஞ்சத்திற்குக் காரணம் யாது? அது சேதனமா? அசே தனமா? அதன் தன்மை யென்ன? சக்திகள் என்ன? அதன் மூலம் இவ்வுலகம் எப்படி உண்டாயிற்று?

'நான்' என்று ஒவ்வொரு ஜீவனும் நினைக்கும் பொரு ளின் தத்துவம் என்ன? அது சரீரமா அல்லது வேறொரு பொருளா? ஆத்மா என்று ஒரு தனித் தத்துவ முண்டா?

அதன் சுபாவம் என்ன? அதற்கும், தேகத்திற்கு முள்ள சம்பந்தம் என்ன? நமது சுக துக்கங்கள் எதைச் சேர்ந்தது? மரணம் என்பது என்ன? கொளுத்தப்பட்ட மெழுகு வத்தி போல் நாமும் சில நாட்கள் பிரகாசித்து அணைந்துபோய் விடுவோமா? சமுத்திரத்தின் அலைகள் போல் பல ஜன்மங்கள் பிறந் திறந்து கடைசியில் மறைந்துபோய் விடுவோமா? அல்லது நித்தியமான யாதேனுமோர் நிலையுண்டா?

ஒருவன் மேதாவியாகப் பிறக்கிறான். மற்றொருவன் மூடனாகப் பிறக்கிறான். அப்படியே பலம், ஆரோக்கியம், தைரியம் முதலிய எல்லா குணங்களிலும் பிறப்பாலேயே வித்தியாசங்கள் காணப் படுகின்றன. இவைகளுக்கு ஏதேனும் காரணங்கள் உண்டா?

இக்கேள்விகள், ஆதி முதற்கொண்டு மனிதன் முன்னிலையில் நிற்கின்றன. இவைகளுக்குத் தகுந்த பதில் கூற ஐயாயிர வருஷங்களுக்கு முன் வசித்த நமது முன்னோர்களைக் காட்டிலும் நமக்கு அதிக ஆற்ற லில்லை. ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு விதமாகப் பதிலுரைத் திருக்கிறது. இவைகளில் எந்த சமயத்தை ஆதரிப்பது எதைத் தள்ளுவது என்று நிர்ணயிப்பதற்கு நம்மிடம் பிரமாணங்க ளில்லை.

ஆகையால் இந்தப் பிரச்சினைகள் நம் மதிக்கு அப்பாற் பட்டவைக ளென்பதில் ஐயமில்லை. ஆயினும், அவைகளைப் பற்றிச் சிந்திக்காமல் இருப்பது அசாத்தியம். மோடார் வண்டியும், கம்பி யில்லாத் தந்தியும் நமது அறிவின் வன்மையை விளக்குகிறது. ஆனால், மரண காலத்திலும், பெரிய துக்க காலத்திலும் இவைகளைக் கொண்டு ஆறுதல் அடைய முடியாது. கடவுள் பக்தியும், ஆத்ம சிந்தனையுமே சற்று மனோசாந்தி யளிக்க வல்லன.

இது சிரத்தையைப் பொறுத்தது. தர்க்கத்தைக் கொண்டு கடவுள் இருக்கிறார் என்றும், இல்லையென்றும் வாதிக்கலாம். அப்படியே, ஆத்மா, கர்மம், புனர் ஜன்மம் முதலிய கொள்கைகளிலும் தர்க்கம் அதிக அறிவைக் கொடுக்காது.

இவ் விஷயங்களில் ஒருவன் தன் உள்ளத்தின் தோற்றத்திற கேற்றவாறே நம்ப வேண்டும். அப்படியே, தான் அங்கீகரிக்காத கொள்கைகளை நம்புவோர்களை இகழ எவனுக்கும் உரிமை யில்லை. குருடர்கள் யானையைப் பற்றி ஆலோசித்து அது முறமா, தூணு வென்று சண்டை யிட்டது போல ஆதி யந்த மில்லாத ஜகத்தின் ஒவ்வொரு அம்சத்தைப் பார்த்து ஒவ்வொரு சமயமும் தனது கொள்கையை ஸதாபித்திருப்பதை யறியாமல் மதச் சண்டையில் இறங்குவது மூடர்களின் அறிகுறி.

இந்த அத்யாத்ம விஷயம் ஒவ்வொரு மனிதனுக்கும் பிரத்தியேக மானது. பூர்வ காலத்தில் நமது தேசத்திலும் அப்படியே இருந்தது. ஒரே குடும்பத்தில் ஒருவன் அத்வைதியாகவும், ஒருவன் த்வைதியாகவும், மற்றொருவன் சாங்கிய மதத்தைச் சேர்ந்தவனாகவும் இருந்த துண்டு. ஒவ்வொரு மனிதனும் தன் பிதாவின் சம்பிரதாயத்தை யோசிக்காமல் கண்களை மூடிக் கொண்டு ஒப்புக் கொள்ளுவ தென்னும் முறை தற்காலத்திலே தான் உலவி வருகிறது. இது நமது மதத்தின் வீழ்ச்சிக்கு ஒரு அடையாளம். இவ் வழக்கம் முன் காலத்திலும் இப்படியே இருந்திருக்கு மாகில், புத்தர் எப்படி தன் மதத்தை ஸ்தாபித் திருக்க முடியும்? அதை நிராகரித்து சங்கரர் அத்வைதத்தை எவ்வாறு பரப்பி யிருக்க முடியும்? அவருக்குப் பின் ராமானுஜர் பலரை எப்படி விசிஷ்டாத்வைத மதத்திற்கு மாற்றி யிருக்க முடியும்?.

இந்த மத குருக்கள் அனைவரும் தாராளமாகத் தர்க்கத்தை உபயோகித்தே தங்கள் மதங்களை ஸ்தாபித் திருக்கின்றனர். அதைக் கொண்டு, நாமும் நமக்கு சாந்த மளிக்கக் கூடிய சம்பிரதாயத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இவைகளில் உண்மை யென்றும், அல்ல வென்றும் நிச்சயமாகக் கூற நமக்கு சக்தி யில்லை. அதனால் மற்றவர் மதத்தை இகழ அதிகாரமு மில்லை.

பலாத்காரத்தால் ஒரு மதத்தைப் பரப்புவது மனித அறிவுக்கு அவமானம் செய்வதே. மதத்தின் பெயரால் நடக்

திருக்கும் கொடுமைகளையும், சண்டைகளையும் ஆலோசித்தால், மதங்களால் நன்மை அதிகமா, தீமை அதிகமாவென்று சிலவேளை சந்தேகப் படாமலிருக்க முடியாது.

ஆனால், அத்யாத்ம விஷயங்களைப் பற்றி சிந்திப்பதை ஒரு நாளும் தடுக்க முடியாது. எப்பேர்ப் பட்ட நாஸ்திகனும், ஒரு வேளை அவைகளைப் பற்றி தியானம் செய்யவேண்டி வரும். மதத்தை இகழ்வது மதியீனம். ஒவ்வொரு மனிதனும் தனக்கு இஷ்டமுள்ள மதத்தைச் சேர சுதந்திர மிருக்க வேண்டும். ஒரு மதத்தையும் சேராம லிருக்கவும் சுதந்திரம் வேண்டும். இதுவே சத்தியத்தை நிலை நிறுத்தும் வழி.

(7)

எல்லா ஞானத்திற்கும் ஆதாரம் மதி. ஆனால் மனித அறிவு அளவற்றதல்ல. இவ்வுலகத்தின் ரகஸ்யத்தில் சில அம்சங்களையே அது நமக்கு அறிவிக்கும் தெய்வம், ஆத்மா முதலிய அத்யாத்ம விஷயங்களில் மின் மினி போலவும், தர்ம விசாரத்தில் மெழுகு வத்தி போல் மந்தமாகவும், லௌகிக விஷயங்களில் காந்த விளக்கைப போல் நன்றாகவும் பிரகாசிக்கும். எவ்வளவு சிறியதாயினும், நம் மதி ஒன்றே நமக்குப் பிறப்புடன் வந்த துணை. அதை விட்டு விட்டால் எந்த மதமும், சாஸ்திரமும் உதவாது.

இந்த உண்மையை மறந்து விட்டதால் பாரத தேசம் அடிமையி லாழ்ந்தது. நமது நாட்டில் பல மதங்கள் தோன்றி யிருக்கின்றன. சில புத்திமான்கள் தங்கள் புத்திக்குத் தோன்றியபடி ஆலோசித்து நடந்திருக் கின்றனர். ஆனால், ஒவ்வொரு பாரத புத்திர, புத்திரியும் தன் மதியை வளர்த்து எல்லாக் காரியங்களிலும் அதன் உதவியை நாடவேண்டு மென்ற தத்துவம் பரவவில்லை. பரம்பரையாக வந்த சம்பிரதாயங்களை விசாரிக்காமல் ஒப்புக் கொள்ளவேண்டும், பெரியார்களின் உபதேசங்களில் குற்றம் கண்டு பிடிப்பது பாவம், வேதம் அனாதி, நமது ரிஷிகள் சர்வக்ஞர்கள் என்ற நம்பிக்கைகளால் பெரும்

பாலான ஹிந்துக்கள் தங்கள் மதியை உபயோகிக்கத் தயங்கு கின்றனர். தன் மதியில் நம்பிக்கை யில்லாத எவனும் இவ் வுலகில் எந்த நன்மையும் செய்ய முடியாது.

இதிலிருந்து ஒவ்வொருவனும் தான் சர்வக்ஞன் என்று அகங்காரம் கொள்ள வேண்டிய தில்லை. எவ்வளவு பெரும் பிரச்சினைகளில் நாம் பால் மணம் மாறாத பாலர்கள் போல் ஒரு வழியும் தெரியாம லிருக்கிறோ மென்று மேலே காண் பிக்கப் பட்டிருக்கிறது. தன் மதியில் நம்பிக்கையுடன், தாழ் மையும் சகிப்புத் தன்மையும் வேண்டும்.

மேல் நாட்டு நாகரீகத்தை எவ்வளவு தூரம் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டு மென்ற கேள்வி, நம் முன் நிற்கிறது. அது முற்றிலும் கெட்டது, என்று வாதிப்பது சரியல்ல. பூராவாக அங்கீகரிப்பதும் நமக்கு சாத்தியமல்ல. நலமுமன்று. இந்தப் பிரச்சினைக்குத் தகுந்த பதில் இவ்வியாசத்தி லிருந்து எளிதில் தோன்றும்.

ஞானம் எல்லோருக்கும் பொது. அதற்கு தேசம் காலம் முதலிய எல்லைகள் இல்லை. ஆகையால் எந்தெந்தத் துறைகளில் ஐரோப்பியரும், அமெரிக்கரும் நம்மை விட அறிவாளிகளாக விருக்கின்றார்களோ அத்துறைகளில் அவரிட மிருந்து கற்றுக் கொள்வதில் கூசவேண்டிய தில்லை. இவவுலக ஞானத்திலும், சமாஜ ஞானத்திலும் அவர்களின் உதவியைப் பூராவாக நாடவேண்டும்.

தர்மம், அத்யாத்மம் முதலிய விஷயங்களில் நம்மை விட அவர்கள் அதிக அறிவு பெற்றிருக் கிறார்களென்று சொல் வதற்கில்லை. ஆகையில், இவைகளில் நாம் சுதந்திரமாக விசாரித்துக் கூடிய வரையில் நமது பழைய தர்மங்களைப் பின் பற்ற வேண்டும். இவைகளிலும், மற்ற தேசங்களின் மேதா விகளின் விசாரங்களை அறிந்து நம்மிடம் இருக்கும் குறைகளைத் தீர்த்துக் கொள்ள ஓயாமல் ஜாக்கிரதை யுள்ளவர்களாக இருப் பது நமது கடமை.

மதியின் சுதந்திரமே மனித வாழ்க்கையின் ஆதாரம். இதுவே மற்றெல்லா சுதந்திரங்களுக்கும் அஸ்திவாரம். அடிமைப் புத்தியுடைய எந்த சமாஜமும் ராஜீயத்திலும், பொருளாதாரத்திலும் மற்றும் எவ்விதத்திலும் சுதந்திரமடைய முயலுவது வீண் பிரயாசை. நமது அடிமைத் தனத்தின் வேர் நமது மனத்திலிருக்கிறது. இதை அறுக்க அல்லும் பகலும் உழைப்போமாக.

## II

## சுதந்திரம்

'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' என்று பாடினார் பாரதி. இன்று இந்த தாகம் காட்டுத் தீயைப்போல நாடெங்கும் பரவியிருக்கிறது. முக்கியமாக பாரத தேசம் அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலையடைய வேண்டுமென்னும் அவாவே இதில் மேலோங்கி நிற்கிறது. நமது நாட்டின் சுதந்திரம் மற்ற எல்லா சுதந்திரங்களுக்கும் அஸ்திவாரமென்பதை எவரும் மறுக்கமுடியாது. ஆனால், அன்னிய ஆட்சி ஒழிந்தமட்டில் பாரத மக்கள் சுதந்திரமடைந்து விடுவார்களென்று எண்ணுவது தவறு. இத்தேசத்திலுள்ள ஜனங்கள் எல்லோரும் சுதந்திர புருஷர்களும் ஸ்திரீகளுமாகவேண்டும். அதுவரையில், நமது அடிமைத்தனம் சில அம்சங்களிலாவது இருந்தே தீரும்.

சுதந்திர ஸ்திரீ புருஷர்களின் குறிகள் என்ன? எம்மனிதனுடைய சக்திகளுக்கும் இயற்கையால் எல்லைகளுண்டு. எல்லாவழிகளிலும் தனது சக்திக்குறைவை நினைத்து வாடி மனிதன் ஆதி முதற்கொண்டு எல்லையற்ற ஆற்றல் பெற்ற கடவுளைக் கற்பித்து அவரை வணங்கி வந்திருக்கின்றான். இதனால் தன்னால் விலக்க முடியாத துன்பங்களை சகிக்க ஒருவித ஆறுதல் உண்டாகின்றதே ஒழிய, அவனுடைய சக்திக் குறைவு மாறுவதில்லை. தன் புத்தியின் சூக்ஷ்மபிரயோகத்தால் தனது சக்திகளைப் பன்மடங்கு பெருக்கும் சாதனங்களைக் கண்டுபிடித்திருக்கின்றான். ஆயினும் இவ்வித சாதனங்களுக்கும் எல்லைகள் உண்டு. இவ்வெல்லைகளுக்குள் எவ்வளவு சுதந்தரமடையக் கூடுமோ அதையடைந்த புருஷனை சுதந்திர புருஷனென்று கூறல் தகும்.

அப்படியே ஒருவிஷயத்தில் ஒருவனது மனம் இருவிதமாக விருக்கலாம். தான் இஷ்டப்பட்டு வாங்கிவந்த பழத்தைத்

தன்னிடம் ஓடிவரும் குழந்தைக்கோ அல்லது பசியால் வருந்தும் மற்றொருவனுக்குக் கருணையாலோ கொடுத்து விடலாம். இவ்விதம் பல்வித மனோபாவங்களில் ஒன்று மேலோங்கி நிற்பதால் சுதந்திரம் குறைந்த தென்று எண்ணலாகாது. இவ்வாறு மனதில் முரண்பாடில்லாமல் போனால் சுதந்திரத்திற்கே இடமில்லை. எறும்பு முதலிய சிறிய ஜந்துகளுக்கு இயற்கை தமது கடமைகளை ஐயமறத் தெரிவிக்கின்றது. அவைகளில் தயங்கி நிற்க அவகாசமில்லை. அது அவற்றின் சுதந்திரக் குறைவையே குறிக்கின்றது.

ஆதலால், மற்றவர்களின் பலாத்காரத்தாலாவது, பயத்தாலாவது நிர்ப்பந்தமின்றி தனது சக்திக்குட்பட்ட காரியத்தை புத்தி பூர்வமாக விரும்பிச் செய்யக்கூடிய நிலை சுதந்திரம்.

பல ஜனங்கள் இருக்கும் எந்த சமூகத்திலும் இந்த சுதந்திரம் பூர்ணமாக இருக்கமுடியாது. ஒருபொருளை இருவர் இச்சிக்கக் கூடும். அப்பொழுது அவர்களில் ஒருவரோ, இருவருமோ அதை விட்டு விட வேண்டிவரும். அப்படியே ஒருவன் ஒரு ஸ்திரீயை விரும்பினால் அவளும் அவனை விரும்புவாள் என்ற நியமம் இல்லை. அபிப்பிராய பேதங்கள், காமங்கள், குரோதங்கள், இவைகளால் உண்டாகும் சண்டைகளைத் தீர்ப்பதற்கு சில நிபந்தனைகள் அவசியம் வேண்டும். இந்த நிபந்தனைகளில் எவை இன்றியமையாதனவோ அவைகளை மட்டும் வைத்துக் கொண்டு மற்ற எல்லா வழிகளிலும் சுதந்திரத்தை யளிக்கும் சமூகத்தை சுதந்திர சமூகம் என்று அழைக்கலாம். இந்த நிபந்தனைகள் ராஜ்யம், சமாஜம் இவ்விரண்டு ஸ்தாபனங்களாலும் உண்டாகின்றன. ராஜ்யத்தின் நிபந்தனைகள் சட்டங்கள், சிறைக்கூடங்கள், போலீஸ், ராணுவம், இவைகள் மூலம் அமுல் செய்யப்படுகின்றன. பலாத்காரமே ராஜீய நிபந்தனைகளுக்குக் காவல்.

ஒரு தேசத்தில் பெரும்பான்மையான ஜனங்கள் ஒன்று சேர்ந்து ஒருசட்டத்தை நிராகரித்து விட்டால் அதை அமுல்

செய்வது சாத்தியமல்லை. எந்த சட்டத்திற்கும் பொது ஜனங்கள் மதிப்பு அவசியமாயினும், அது சட்டமாக விருக்கும் வரையில் ராஜாங்கத்தின் ராணுவபலத்தையே கடைசி ஆதாரமாகக் கொண்டிருக்கின்றது. ஒருசிறு கூட்டத்தார் இந்த பலத்தைக்கொண்டு கோடிக்கணக்கான ஜனங்கள் மீது அவர்களுக்கிஷ்டமில்லாத சட்டங்களை சிலகாலமாவது அமுல் செய்ய முடியுமென்பதற்கு நமது நாடே பிரத்தியக்ஷ உதாரணம்.

சட்டத்தால் குற்றமாகாத பலவிஷயங்களை சமாஜம் கண்டிக்கின்றது. வேசிஸை நாடுதல், மதுபானம், புதிய நடையுடை பாவனைகள் இவைகளெல்லாம் சட்டப்படி குற்றங்களல்ல. ஆயினும் அவைகளை சமாஜம் எதிர்க்கின்றது. சமூகத்தின் தண்ட உபாயங்களாவன: பொது ஜன கண்டனம், அவமரியாதை, சமூக பகிஷ்காரம்.

இந்த நிபந்தனைகளைக ளெல்லாம் பொது நலத்தின் பெயரால் ஏற்படுத்தப்படுகின்றன. ஓரளவு அவைகள் அவசியமென்று முன் கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் எல்லா சமூகங்களிலும், பொது நன்மையின் பெயரால் பல அனாவசிய நிபந்தனைகள் ஏற்படுத்தப்படுகின்றன. இந்த சந்தர்ப்பத்தில், கூடிய வரையில் சுதந்திரம் பெற்று வாழ்வதே முதல் பொது நலமென்பதைப் பலர் மறந்துவிடுகின்றனர். எவ்வளவு நல்லுணவு கிடைத்தபோதிலும் பறவை தனது சுந்திரத்தை விட்டு விட்டுக் கூண்டில் வசிக்க சம்மதிக்காது. பழக்கத்தினால் கூண்டில் விருப்பங்கொண்ட பக்ஷியை அடிமை யென்று கூறி பரிதாபப் படுகின்றோம். அப்படியே, சில அல்ப சௌகரியங்களுக்காககாகத் தங்கள் சுதந்திரங்களை இழக்க சம்மதிக்கும் சமூகத்தில் அடிமைத்தனம் வேரூன்றி விட்டதென்பதற்கு ஐயமில்லை. சுந்திரத்தைக் காப்பதற்காகவே இரண்டு விஷயங்களில் எவருக்கும் சுதந்திரம் கிடையாது. எவனும் தன் சுதந்திரத்தை விற்றுவிட்டு அடிமையாகப்போவதற்கு உரிமை பெறலாகாது. அவ்வாறே ஒருவன் மற்றொருவனுடைய சுதந்திரத்தைப் பறிமுதல் செய்து அவனை அடிமை செய்ய பாத்தியம் பெறக்கூடாது. இவ்விரண்டைத்தவிர, மற்றெல்லாக் காரியங்களிலும்

சுதந்திரத்தைக் குறைக்கும் நிபந்தனையை ஏற்படுத்து முன், அந்த நிபந்தனை இல்லாவிடில் சமூகம் அதிக நஷ்டமடைந்து சுதந்திரத்தின் மற்ற அம்சங்களுக்கு அபாயம் நேரிடுமென்று நிச்சயமாக நிரூபிக்கப் படவேண்டும். அவ்விதம் நிரூபிக்கப் படாமல் ஏற்படுத்தப்படும் எந்த நிபந்தனைக்கும் எதிராகப் போராட ஆயத்தமாக இருப்பது ஒரு சுதந்திர சமுதாயத்தின் அடையாளம்.

ராஜ்யம், சமாஜம், இவைகளில் அத்தியாவசியமாக ஏற்படுத்தப் படவேண்டிய நிபந்தனைகளை நிர்ணயிப்பதே இவ்வியாசத்தின் கருத்து. அவைகளை நிர்ணயித்தால் இதர விஷயங்களில் பூர்ண சுதந்திர மளிக்கப்படவேண்டுமென்று தானாகவே புலப்படும்.

## (2)

## ராஜ்ய சுதந்திரம்

ராஜ்யத்தால் ஏற்படும் நிபந்தனைகளுக்கு ஆதாரம் பலாத்காரமாக விருப்பதால், இவ்வித நிபந்தனைகள் மிகக் குறைவாக விருப்பது சுதந்திரத்தை நிலை நிறுத்துவதற்கு இன்றியமையாததாகும். ஏதேச்சாதிகார முள்ள ராஜ்யத்தில் எவ்வித சுதந்திரமும் ஸ்திரமாக விருக்காது. அவ்வித அரசன் ஒருவேளை நல்லவனாகவும், பிரஜைகளிடம் அன்புள்ளவனாகவும் இருக்கலாம். ஆயினும் அவன் தனக்கு நன்மையென்று தோன்றிய விஷயங்களில் பலாத்காரமாகப் பிரஜைகளின்பேரில் அமுல் செலுத்துவான். தவிர, அவன் இறந்தபிறகு அடுத்த அரசனும் அவனைப் போலவே இருப்பான் என்று எதிர்பார்க்க முடியாது. ஆகையால், பொது ஜன ஆட்சியின்றி உண்மையான சுதந்திரம் இருக்காது. குடியரசில் எவ்வளவோ குறைகளும் கஷ்டங்களும் இருக்கலாம். ஆனால் சுதந்திர வாழ்வுக்கு அதைத்தவிர வேறு எவ்வித ராஜ்ய முறையும் பொருந்தாது.

சுதந்திரத்திற்குக் குடியாசு அவசியமானது. ஆனால் அதுமட்டும் போதாது. குடியரசுமட்டும் இருந்தால் சுதந்திரம் தானாகவே நிலைநிற்கும் என்பது வீண்கனவே. சொத்திலும், சமாஜ கௌரவத்திலும் பெரிய ஏற்றத்தாழ்வுகள் இருப்பின் பெரும்பான்மையான ஜனங்கள் சுதந்திரமின்றியே வாழவேண்டிவரும். பணத்தினால் ஒருவனுக்கு அதிக சௌகரியங்கள் கிடைப்பது மட்டுமின்றி மற்ற ஜனங்கள் மீது அதிகாரம் கிடைக்கிறது. இந்த அதிகாரத்திற்கு ஒரு வரம்பு விதிக்கப்படாவிடின் பெரும்பாலான பிரஜைகள் சில தனவந்தர்களுக்குட்பட்டு தங்கள் சுதந்திரத்தை இழந்துவிடுகின்றனர். இவ்விதமே பிறப்பினால் ஒரு கூட்டத்தார் மிகவும் சிரேஷ்டர்களென்றும் மற்றொரு கூட்டத்தார் இவர்களுக்குப் பணிவிடை செய்தலே தங்கள் பாக்கியமாகக் கருதவேண்டுமென்ற மூட நம்பிக்கை இருக்கும் தேசத்தில் நிஜ சுதந்திரம் ஏற்படாதென்பது

நிச்சயம். இவ்வித ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்து, ஓரளவே னும் சமத்துவம் ஏற்படுத்துவது அவசியம்.

இவ்விதம் குடியரசும் சமத்துவமும் சுதந்திரத்தின் தூண் களாவன. இவ்விரண்டு மிருந்தும் மேல் கட்டடம் சரியாக வில்லாவிடில் சுதந்திரத்தை அனுபவிக்க முடியாது. குடியர சுள்ள நாடுகளிலும், ராஜ்ய நிர்வாகம் செய்வோர் பிரஜைகளின் சுதந்திரங்களைக் குறைக்கும் சட்டங்களைச் செய்ய ஓயாமல் முயற்சி செய்வார்கள். அதிகாரம் கட்குடியைப்போல் ஒருவித மயக்கத்தை உண்டு பண்ணுகின்றது. அதனால் பெரும் தீங்கு கள் விளையக்கூடும். ராஜ்யம் அதிகாரமின்றி நடக்காத காரணத் தால் இவ்வதிகாரத்திற்குத் தெளிவான எல்லைகள் ஏற்படுத்தப் படவேண்டும். அதிகாரிகள் சட்ட பூர்வமாகவே எல்லாக்காரி யங்களையும் செய்யவேண்டு மென்பதும், அப்படிச் செய்யா விட்டால் அவர்கள் மீது வழக்குத் தொடரப்படக் கூடுமென் றும் விதியிருப்பது அவசியமானது.

சட்டங்கள் மூலம் பிரஜைகளின் சுதந்திரத்தைப் பாதிப் பதற்கு வரம்புகள் நிர்ணயிக்கப்பட்டு அவைகள் தாண்டப் படாதிருக்கவேண்டும். ராஜ்யம் பிரஜைகளின் சுதந்திரத்தில் தலையிடுவதற்கு காரணங்கள் சாதாரணமாக இருவகைப்படுவன. (1) பிரஜைகள் பரஸ்பரம் நடந்துகொள்ள வேண்டிய கடமை களை நிர்ணயித்தல் (2) சமூகத்தின் பொது நன்மைக்காக வேண்டிய வரியையும், சேவையையும் வசூல் செய்தல். இவ் விரண்டு காரியங்களுக்காகச் சட்டங்கள் இயற்றும் பொழுதும் மனிதனுடன் கூடப்பிறந்த சில மூல சுதந்திரங்களுக்கு எவ்வித பங்கமும் ஏற்படக்கூடாது. இவைகளை முதலில் ஆராய்வோம். ஒவ்வொரு புருஷனும் ஸ்திரீயும் தன் மனதில் தோன்றிய வாறு நினைப்பதற்குப் பூரண சுதந்திரம் வேண்டும். ஒருவ னுடைய எண்ணம் மற்றவர்களுக்கு எவ்வளவு அருவருப்பாக விருந்தபோதிலும், அது வெறும் எண்ணமாக விருக்கும் வரை யில் அவர்களுக்கு அதனால் எவ்வித தீங்கும் நேரிடாது. சுதந் திரமாக நினைப்பதை எவ்விதத்திலும் தடுக்க முடியாது. எண்

ணத்தைத் தடுப்பதற்குச் செய்யப்படும் முயற்சிகளெல்லாம் மனிதர்களைப் பொய்யர்களாகச் செய்வதற்கே பயன்படும்.

ஒரு விஷயத்தைப் பற்றி சுதந்திரமாக எண்ணுவதைப் போலவே, அவ்வெண்ணத்தை வெளிப்படுத்துவதற்கும், பிரசாரம் செய்வதற்கும் முழு உரிமை வேண்டும். ஆனால் இதற்கு ஒரு முக்கிய நிபந்தனையுண்டு. சுதந்திரமாக எண்ணுகிறேன் என்ற வியாஜத்தின் பேரில் ஒருவன் மற்றொருவன் பேரில் பொய்யாக அவதூறு செய்து அவனுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடாது. ஒருஸ்திரீயின் கற்பைப் பழித்து ஒருவன் பேசினால் அவளுடைய வாழ்க்கைக்கு பங்கம் உண்டாகும். ஒரு பாங்கின் நிலைமையைப் பற்றித்தவறாக உரைப்பின் அதனிடம் ஜனங்களுக்குள்ள நம்பிக்கை குறைந்து நல்ல ஸ்திதியிலிருக்கும் பாங்கும் திவாலாகப் போகநேரிடும். ஆதலால் எவ்விதமும் பிறருக்குத் தீங்குசெய்வது குற்றமாகும். இந்த ஒரு நிபந்தனையைத் தவிர்த்துப் பிரசாரத்திற்கு எவ்விதத் தடையும் அவசியமில்லை. ஒருவன் மற்றவர்கள் மனதைக் கலைத்துவிடுவான் என்றவாதம் ஆதாரமற்றது. இவ்வுலகில் எவனும் சர்வக்ஞனல்லன். பலர் பலவிதமாக ஆலோசித்துத் தங்கள் தங்கள் விசாரங்களைப் பிரசாரம் செய்த பிறகே உண்மை தலைப்படும். ஒருவன் தப்பெண்ணங்களைப் பரப்புவதாகத் தோன்றினால் அதற்குவிரோதமாக நல்ல எண்ணங்களைப் பிரசாரம் செய்வதே நியாயமான வழி.

ஒருவனது எண்ணங்கள் அவனுடைய மதி, கல்வி, சகவாசம் இவைகளைப் பொருத்திருக்கின்றன. இவைகள் மாறுவதால் எண்ணங்களும் மாறுதலடைகின்றன. 100-ல் 99பேர்கள் இன்று ஓர் அபிப்பிராயத்தைத் தப்பு என்று நினைத்தாலும் அதை நாளைக்கு சரியென்று எண்ணக்கூடும். ஆகையால் அபிப்பிராயங்களுக்காக ஒருவனை தண்டிப்பது மூடத்தனமென்று எளிதில் விளங்கும். ஆயினும், உலக சரித்திரத்தைப் படிக்கையில் அபிப்பிராய சுதந்திரம் மனிதனுடைய மூல உரிமை யென்றும், அவனுடைய வளர்ச்சிக்கு அது அத்தியாவசியமென்றும் கொஞ்ச காலமாகத் தான் ஒப்புக்கொள்ளப்

பட்டு இன்னும் பலவிடங்களில் அது பூராவாக அங்கிகரிக்கப் பட வில்லையென்று காண்கிறோம்.

மத விஷயங்களில் அபிப்பிராய பேதத்திற்காகப் பலசாதிக் கள் கொடுமைகளுக் காளாகாத நாடில்லை. ஐரோப்பாவில் பல நூற்றுண்டுகள் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த இரண்டு கக்ஷி கள் ஒன்றை மற்றென்று தூக்கிலிட்டும், கொளுத்தியும் மற் றும் பலவித பலாத்கார முறைகளால் அழிக்க முயன்றும் வந் தன. பலபிரதேசங்களில் இஸ்லாம் கத்தி முனையில் பரப்பப் பட்டது. நம்நாட்டில் சைவர், வைஷ்ணவர், பௌத்தர் முத லிய மதத்தினர் ராஜாங்க பலத்தைக்கொண்டு தங்கள் மதத்தை ஸ்தாபிக்கப் பலவாறு முயற்சி செய்திருக்கின்றனர். எதேச் சாதிகாரம் செய்யும் அரசர்களும், பிறதேசங்களைப் பிடித்தாள் வோரும் தங்களுக்கு விரோதமான எண்ணங்களைப் பலாத் காரமாக அடக்க முயலுவது சகஜம்.

பலாத்காரத்தால் எண்ணங்களைத் தடுக்க முயல்வது அநாகரிகத்தின் எல்லை யென்பதில் சந்தேகமில்லை. இதுசாத் தியமுமன்று. ஓர் எண்ணத்திற்காக ஒருவனைத் தண்டித்தால் அது மற்றவர்களிடம் அதிக சீக்கிரமாகவே பரவும். இவ்வுண் மையை அதிகாரச் செருக்கால் மயங்கியுள்ளவர்கள் அறியாமல் தம்தலைகளில் தாமே மண்ணை யள்ளி போட்டுக் கொள்ளுகின் றனர்.

ஒரே அபிப்பிராய முள்ளவர்கள் ஒன்று கூடி தங்கள் கொள்கைகளின் பிரகாரம் வாழ்வதற்கும், அவைகளைப் பிரசா ரம் செய்யவும் சங்கம் ஸ்தாபிக்கும சுதந்திரம் மூன்றாவதாக இன்றியமையாதது. ஆனல், இதற்கு ஒரு விசேஷ நிபந்தனை அவசியம். செல்வத்தைப் போலவே சங்கமும் பல மனிதர்கள் பேரில் அதிகாரத்தைக் கொடுக்கிறது. இந்த அதிகாரம் அக் கிரமமாகச் செலுத்தப்படாமல் பார்ப்பது ராஜ்யத்தின் கட மை.ஒரு சங்கத்தால் அதைச் சேர்ந்தவர்களுக்கு எவ்விதத் தீங் கும் விளையாமலும், அதைச் சேர்ந்தவர்களின் மனித உரிமை கள் பாதிக்கப்படமலும் இருக்கும் பொருட்டுத் தகுந்தசட்டங்

கள் செய்வது நியாயமாகும். பொதுவாக எவ்வித பலாத்காரத்தையும் கையாளாத எந்த சங்கமும் தீமை விளைவிக்காதென்று கூறலாம். ஒரு தேசத்தில் ராஜ்யாதிகாரிகளைத் தவிர மற்ற எவருக்கும் பலாத்காரத்தை உபயோகிக்க உரிமை கிடையாது.

ஓர் ராஜ்யத்தின் அமைப்பின் பேரிலாவது நிர்வாகத்தின் பேரிலாவது அதிருப்தி கொண்டவர்களின் கடமையென்ன? முதலில் அவர்கள் தம் அபிப்பிராயத்தை அரசாங்கத்தாருக்கும் மற்றப் பிரஜைகளுக்கும் தெரிவிக்க வேண்டும். அதைத் தீவிரமாகப் பிரசாரம் செய்யவும், சட்டத்திற்குட்பட்ட முறைகளில் குறைகளைத் தீர்க்கவும் முயலவேண்டும். பொதுஜன சம்மதத்தின்பேரில் நடந்துவரும் ராஜ்யங்களில் இதற்குமேல் செய்ய எவனுக்கும் உரிமையில்லை. பெரும்பாலான ஜனங்கள் மூடர்களென்று வாதித்து அவர்களைப் பலாத்காரமாகச் சிறுபாலார் திருத்த முயலுவது அக்கிரமம்; முடிவில் சத்தியமே ஜெயிக்குமென்ற நம்பிக்கையைக் கடைப் பிடித்து ஓயாமல் பிரசாரம் செய்வதே தர்மமாகும். பெரும்பாலோர் அந்தக் கொள்கைகளை ஒப்புக்கொள்ளாத வரையில், அவை பிசகோ, அல்லது தமது பிரசாரம் போதாதோ வென்று எண்ணிப் பொறுமையுடனிருக்க வேண்டும்.

பொது ஜன நன்மைக்காக ராஜ்யம் சட்டங்கள் செய்வது அவசியமென்று முன் கூறினோம். அதன் எல்லைகளை இப்பொழுது ஆராய்வோம். சுதந்திரத்தை விரும்பும் பிரஜை எவ்விதச் சட்டமும் தன் சுதந்திரத்திற்கு பங்கமென்று நினைக்க வேண்டும். அப்பொழுதுதான் அது அத்தியாவசியமா வென்று நிச்சயிக்க சக்தி ஏற்படும். பொதுவாக அடியிற் கண்ட சட்டங்கள் சுதந்திரத்தைக் குறைக்காமல் பெருக்குவதற்கு சாதனமாக விருப்பன :

(1) பிரஜைகளில் ஒரு சாராரைப்பாதிக்கும் வழக்கங்களை ரத்து செய்யவேண்டி செய்யப்படும் சட்டங்கள். இவைகளால் மற்றவர்கள் அநியாயமாக அனுபவித்துவரும் சலுகைகள் குறையலாம். ஆனாலும் சமூகத்தின் சுதந்திரம் அதிகரிக்

கும். தீண்டாதவர்கள் ரஸ்தாக்களிலும், பள்ளிக்கூடங்களிலும் தாராளமாகச் சென்று வாழ்வதற்கு வேண்டிய சட்டங்கள் இதற்கு உதாரணமாவன :

(2) முன்னால் கட்டாயப் படுத்தப்பட்ட விஷயங்களில் அனுமதிகொடுக்கும் சட்டங்கள். ஹிந்து தர்மப்படி விதவா விவாகம் செல்லத்தகாதது. சட்ட பூர்வமாக விதவைகளுக்கு மணம் புரிந்துகொள்ள உரிமை கொடுத்ததால் எவருடைய சுதந்தரமும் பாதிக்கப்படவில்லை. சமூகத்தின் சுதந்திரம் அதிகரித்தது.

(3) தனி ஸ்திரீ புருஷர்களின் சுதந்திரம் பாதிக்கப்படும் வழக்கங்களையும், ஸ்தாபனங்களையும் ஒழிக்க வேண்டிச் செய்யும் சட்டங்கள். பால்ய விவாகத்தைத் தடுக்கும் சட்டம் இதற்கு நல்ல உதாரணம். இது பெற்றோர்களின் சுதந்திரத்தைப் பாதிக்கின்றதென்று வாதாடுவது அறியாமை. குழந்தை பெற்றோர்களின் சொத்தில்லை. அதை இஷ்டப்படி நடத்துவதற்கு அவர்களுக்கு உரிமையில்லை. அதைக்கொல்லவும், கொடுமையாக நடத்தவும் பெற்றோர்களுக்கு உரிமையில்லை யென்று எவரும் ஒப்புக்கொள்வார்கள். அன்பினால் செய்யப்பட்டபோதிலும் பால்ய விவாகம் குழந்தைகளைத்தம் இஷ்டமின்றியே பெரும் பாரத்தைச் சுமக்கச் செய்யும் ஏற்பாடென்பதையாரும் மறுக்கமுடியாது. குடும்பபாரத்தை எப்பொழுது எவ்விதம் ஏற்றுவகிக்க வேண்டுமென்பதை நிர்ணயிக்கும் சுதந்திரம் எல்லோருக்கும் அவசியமானது. இதையளிக்கும் சட்டம் சுதந்திரத்தைப் பெருக்குவதே யாகும்.

(4) தன் சுதந்திரங்களை அனுபவிப்பதற்கு வேண்டிய ஆற்றலைத் தரும் சட்டங்கள். கட்டாயக் கல்வியும், மதுவிலக்கும் இதற்கு நல்ல உதாரணங்கள். கட்டாயக் கல்வியால் படிப்பதற்கும், சிந்திப்பதற்கும் சக்தியுண்டாகிப் பிரஜைகள் தம் சுதந்திரங்களைக் காக்க வல்லவர்களாகின்றனர். மதுவிலக்கு வெளிப் பார்வைக்கு சுதந்திரத்தைக் குறைப்பதாகத் தோன்றினும் உண்மையில் அதைக்காப்பதற்கு அவசியமானது. மதுவினால்

மனிதனுடைய மதிகெட்டு அவன் எவ்வித சுதந்திரத்தையும் அனுபவிக்கத் தகுதியற்றவனாகி விடுகிறான். எப்படி ஒருவனுக்குத் தன்னை அடிமையாக விற்று விட உரிமை கொடுக்க முடியாதோ, அவ்வாறே மனித வாழ்வுக்கு அஸ்திவாரமாகவிருக்கும் நல்லறிவைக் கெடுத்துகொள்ள உரிமையும் வழங்கப்பட முடியாது.

இவ்வித சட்டங்களைத் தவிர பாதுகாப்பிற்கும், பிரஜைகளுக்குள் நியாயமாகவும், சமத்துவம் பெருகும் வழியிலும் சொத்து, வருமானம், வரி, சேவை இவைகளை வகுத்துவைப்பதற்கு வேண்டிய சட்டங்களைச் செய்வதற்கு ராஜ்யத்திற்கு உரிமையுண்டு. எந் நாட்டின் செல்வத்திற்கும் அளவுண்டு. ஆகையால், அதைப் பட்சபாதமின்றிப் பகுத்துக்கொடுப்பது ராஜ்யத்தின் சட்டங்களையும், நிர்வாகத்தையும் பொருத்திருக்கின்றது. இந்தச் சட்டங்கள் எவ்விதமாக விருக்கவேண்டுமென்பது காலதேச வர்த்தமானங்களைப் பொறுத்திருக்கின்றது. நியாயத்தையும், சமத்துவத்தையும் பெருக்க வேண்டுமென்றுமே சொல்லக் கூடும்.

மேற்கூறிய வண்ணம் சரியான சட்டங்களைச் செய்யும் பொதுஜன ஆட்சியில் அதிருப்தியடைந்தவர்கள் தங்கள் அபிப்பிராயங்களைப் பிரசாரம் செய்வதோடு திருப்தியடைய வேண்டுமென்று கூறப்பட்டது. சிலகாலங்களில் பொதுஜன ஆட்சியில்கூட மேலே குறிப்பிடப்பட்ட வரம்புகளை மீறி அநியாயச் சட்டங்களோ, உத்தரவுகளோ ஏற்படக்கூடும். ஒரு கொள்கையை நம்புவதோ அதைப்பிரசாரம் செய்வதோ குற்றமென்று சட்டம் செய்யப்படக் கூடும். அவ்விதச் சட்டம் தனது மனச்சாட்சிக்கு விரோதமாக விருந்தால் அதை நிராகரித்து அதன் தண்டனையை ஏற்றுக்கொள்வது சுதந்திரத்தை விரும்பும் பிரஜையின் கடமை. இதனால் ராஜ்யத்திற்கு ஒரு கெடுதியும் விளையாது. அந்தச் சட்டம் நியாயமென்றும் அவசிய மென்றும், பெரும்பாலோர் எண்ணும் வரையில் ஒரு சிலர் அதை மீறி தண்டனை ஏற்றுக்கொள்வதால், அச்சட்டத்தின் பலம் குறையாது. பெரும்பாலோர் அச்சட்டம் அநியாய

மானதென்று நினைத்து அதை நிராகரித்தால் அது தானே ரத்தாகி விடும். சாத்வீகச் சட்ட மறுப்பை நியாயமான வழி யென்று ஒப்புக் கொள்ளும் ராஜ்யத்தில் பலாத்காரப் புரட்சிக்கு இடமில்லை.

பொது ஜன ஆட்சி யில்லாத நாட்டில் எந்த சுதந்திரத் திற்கும் சரியான அஸ்திவாரமில்லை. ராஜ்யாதிகாரம் பெற்ற சிலர் தங்களிஷ்டம் போல் செய்வார்கள். பெரும்பாலான பிரஜைகளின் அபிப்பிராயங்களுக்கு விரோதமாக சட்டங் களும், வரிகளும் விதிக்கப்படும். இவ்விடங்களில் ஜனங்கள் ஒன்று சேர்ந்து அந்த ராஜாங்கத்தை ஒழிக்க உரிமையுண்டு. பலாத்காரப் புரட்சிசெய்ய உரிமையில்லை யென்றும் சொல்வ தற்கில்லை. ஆனால், பலாத்காரத்தால் உண்டாகும் தீமைகள் அதனால் கிடைக்கும் நன்மைகளைக் காட்டிலும் அதிகமாகவே யிருக்கும். ஆதலால், சாத்வீக சத்தியாக்கிரகமொன்றே உண் மையான சுதந்திரத்தையும் நியாயமான ராஜ்ய முறையையும் நிலைநிறுத்துவதற்கு ஒப்பற்றவழி. எல்லா அநியாயங்களுக்கும் பலாத்காரமே ஆதாரம். உலகில் நியாயமும், சுதந்திரமும் பெருகுவதற்கு அதன் வேரை அடியோடு அறுக்கவேண்டும். நியாயத்திற்காக பலாத்காரத்தை உபயோகிப்பது குறுக்குவழி யாகத் தோன்றிய பொழுதும் தூரதிருஷ்டியுள்ள புருஷர்கள் அதை மயக்கமென்றறிந்து எதற்கும் அதைப் பிரயோகம் செய்ய உடன்படார்.

## (3)

## சமாஜ சுதந்திரம்

ஒரு மனிதனுடைய சுதந்திரம் தன் ராஜ்யத்தின் சட்டங் களால் மட்டும் பாதிக்கப் படுவதில்லை. தன் சமாஜத்தின் பழக்க வழக்கங்களாலும் பெரிதும் குறைவடைகின்றது. சட்ட மில்லாத விஷயங்களில் கண்டனத்தாலும், பகிஷ்காரத்தாலும் தனது பழக்க வழக்கங்களைக் கடந்தவர்களை ஒவ்வொரு சமூக மும் கண்டிக்கின்றது. இவ்வாயுதங்கள் சக்தியில் சட்டத்தின்

பலாத்காரத்திற்கு குறைந்தவைகள் என்று நினைப்பது தவறு. தூக்கிற்கும், சிறைக்கு மஞ்சாத பலர் பொது ஜனக் கண்டனத்திற்கும், பகிஷ்காரத்திற்கும் பயந்து நடுங்குகின்றனர். ராஜ்யாதிகாரத்தை எதிர் பாராமல் இவ்விரண்டு கருவிகளைக் கொண்டு ஒரு சமூகம் ஆயிரக் கணக்கான வருஷங்கள் நடந்துவரக் கூடுமென்பதற்கு ஹிந்து சமாஜம் பெரிய அத்தாட்சியாக விளங்குகின்றது.

ஹிந்து சமாஜத்தைச் சேர்ந்த பல வகுப்புகளில் மனிதன் காலையிலிருந்து எழுந்தது முதல் இரவில் படுக்கப் போகும் வரையில் அவன் செய்ய வேண்டிய காரியங்கள், நடை யுடை பாவனைகள் எல்லாவற்றையும் பற்றி நியமங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை யெல்லாம் சட்ட பூர்வமாக அமுல் செய்வதானால் இந்நாட்டில் எவனும் வாழ முடியாது. ஒரு காலத்திலும், எந்த ராஜாங்கத்தாலும் ஹிந்து வர்ணாசிரம தர்மம் சட்ட பூர்வமாக நடத்தப் படவில்லை யென்பது அதன் பெருமை. அதனால், அதில் பல தீமைகளும் கொடுமைகளு மிருந்த போதிலும் எவருக்கும் சகிக்க முடியாத கஷ்டம் விளையவில்லை. தைரிய மிருந்தவர்கள் இந்த நியமங்களை அலக்ஷியம் செய்து தம் இஷ்டப்படி செய்வது வழக்கம். அவர்களை சமாஜம் சிறிது காலம் ஒதுக்கிப் பார்த்து, அவர்கள் பயப்படாமல் தன் வழியே போவார்க ளாகில் ஒரு தனிக் கூட்டத்தாராக அவர்களை ஒப்புக் கொண்டு விடும். இந்தியாவிலுள்ள நூற்றுக் கணக்கான வகுப்புக்களின் ஆரம்பம் இவ்விதமாகவே இருந்து வந்திருக்கின்றது. நம் நாட்களில் ஆரிய சமாஜத்தின் உற்பத்தி இதை நன்கு விளக்கும். ஸ்வாமி தயாநந்தர் சனாதன தர்மத்தின் பெயரால் வழங்கி வரும் பல வழக்கங்களை நிராகரித்து ஒரு தனி வகுப்பை அமைத்தார். அதில் ஜாதிப் பிரிவினைகளில்லை, தீண்டாமை யில்லை, பால்ய விவாக மில்லை. ஆயினும், அவர்களை ஹிந்து சமாஜம் ஒப்புக் கொள்ள வேண்டி யிருக்கின்றது. தனது பழக்க வழக்கங்கள் சட்டங்கள் வாயிலாக நிர்ப்பந்தம் செய்யப் படாமல் சமூக அபிப்பிராயத்தின் பேரிலேயே அமுல் செய்யப்பட்டு வந்தது

ஹிந்து சமாஜம் சுதந்திரத்தை ஆதாரமாகக் கொண்டதென்பதை விளக்குகின்றது.

இக்காரணத்தால், ஹிந்து சமாஜத்தைச் சீர்திருத்துவதும் சுலபமல்ல. சட்டத்தால் ஏற்படும் அநியாயங்களை சீக்கிரம் அகற்றி விடலாம். நீண்ட காலமாக வழங்கி வரும் பொது ஜன அபிப்பிராயத்தால் விளையும் கொடுமைகளை அகற்றுவதற்கு அவ்வெண்ணங்களை மாற்றுவதைத் தவிர வேறு வழி யில்லை. தீண்டாமை இதற்குச் சான்ற உதாரணம். தீண்டாதவர்களுக்கு எதிராக எவ்வித சட்டமுமில்லை. ஆனல் ஹிந்து சமாஜத்தைச் சேர்ந்த பெரும்பான்மை யோரால் அவர்கள் மீது கொடிய அநியாயம் இன்றும் செய்யப்படுகிறதென்பதை யார் தான் மறுக்க முடியும்?

இதைக் கண்டு ஆத்திரப்படும் சில சீர்த்திருத்தக் காரர்கள் சமூகக் கொடுமைகளைச் சட்டத்தால் விலக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். இது அநர்த்தத்திற்கு வழி. பலாத்காரத்தால் புத்தியை மாற்ற முடியாது. சட்டத்தின் மூலம் ஜனங்களுக் கிருக்கும் சுதந்திரங்களை அதிகரிப்பதை விட்டு அதைக் குறைக்க முயலுவது மதியீனம். தீமையை விளைவிக்கும் பழக்கங்களுக்கு எதிராகப் பிரசாரம் செய்து அவைகளை ஒழித்து நடப்பவர்களின் தொகையை நாள்தோறும் விருத்தி செய்வதே இதற்குத் தகுந்த வழி.

தனது பழக்க வழக்கங்களைக் கடந்து செல்லுவோரைக் கண்டனத்தாலும், பகிஷ்காரத்தாலும் தண்டிப்பதற்கு எந்த சமாஜத்திற்கும் ஓரளவு உரிமை யுண்டென்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். எப்படி ஒருவன் ஒரு காரியத்தை நன்மை யென்று நினைக்க உரிமை யுண்டோ அப்படியே மற்றவர்களும் அதைத் தீமை யென்று எண்ண உரிமை யுண்டு. ஒரு சமூகத்தின் அபிப்பிராயத்திற்கு விரோதமாகப் போகும் ஒருவன் அதன் கண்டனத்திற்கும், பகிஷ்காரத்திற்கும் தயாராக விருக்கவேண்டும்.

ஆனல் சாதாரண விஷயங்களில் இவ்வாயுதங்களை உபயோ

கிக்கும் எந்த சமாஜமும் சுதந்திரமாகவும், சுசமாகவும் வாழ முடியாது. எவ்வளவு தீர புருஷனானாலும், தன் சமூகத்தினரின் கண்டனத்தால் துக்கமடையாம லிருக்கமாட்டான். சமூக பகிஷ்காரம் ஏழைகளைப் பொருத்த மட்டில் பலாத்காரத்திற்கு சமானமாகும். நம் தேசத்தில் ஒரு கிராமத்தில் ஒரு குடியானவனைத் தன் சமூகம் பகிஷ்காரம் செய்தால் அவன் தன் ஊரை விட்டு ஓடினாலொழிய சரிவர ஜீவனம் கூட செய்ய முடியாது. கல்யாணம் செய்து கொள்ளுவது அசாத்தியமாகி விடுகின்றது. சாவு காலத்தில் அவன் வீட்டிற்கு ஒருவரும் வந்து உதவார். கஷ்ட காலங்களில் அவனுக்கு சகாயம் கிடைக்காது. சிறையைக் காட்டிலும் இது அதிக கொடிய தண்டனையாகும். ஆதிதிராவிடர்கள் தண்ணீர் எடுக்கும் கிணறுகளில் ஜலபானம் செய்த குற்றத்திற்காக இவ்வித தண்டனை விதிக்கப் படுவதைக் கண்டிருக்கின்றோம்.

இது ஒரு மூட சமுதாயத்தின் சின்ன மென்பதில் ஐயமில்லை. சமூகத்தின் அத்தியா வசியமான ஆரோக்கியத்தையும், தர்மத்தையும் பாதுகாத்து துரோகம், கொடுமை இவைகளைப் போக்குவதற்காகவே சமூக பகிஷ்காரம் உபயோகப் படவேண்டும். அபிப்பிராய பேதங்களை சாந்தமாக வாதிப்பதும், சமாஜத்திற்குப் பாதகம் விளைவிக்கக் கூடிய காரியங்களைக் கண்டிப்பதும் சாதாரணமாகப் போதுமானது. இதைக் கவனியாமல் தன் இஷ்டப்படி நடப்பவனைத் தன் கர்மத்தின் பலனைத் தானே அனுபவிக்க விட்டு விடுவதே சுதந்திர சமாஜத்தின் முறையாக விருத்தல் வேண்டும்.

நிறை வாழ்வுக்கு சுதந்திரத்தின் அவசியத்தை உணராம லிருத்தலே சமூகத்தின் பல கொடுமைகளுக்குக் காரணம். சுதந்திரம் இதர நன்மைகளுக்கு சாதன மாவதுமட்டு மன்று மனித வாழ்க்கையின் அந்திம லக்ஷ்யங்கள் அல்லது புருஷார்த்தங்களில் ஒன்று. அத்தியாவசியமான காரணங்களின்றி அதற்குப் பங்கம் விளைவிப்பது மானிட வாழ்க்கைக்குத் தீங்கு விளைவிப்ப தாகும். குழந்தைகளுக்குப் பொம்மையை வைத்துக் கொண்டு மனம் போனவாறு விளையாடுவது அவற்

றின் வளர்ச்சிக்கு எவ்வளவு அவசியமோ, முதிர்ந்த மனிதனுக்கும் தனது கல்வி, தொழில், குடும்ப வாழ்க்கை, கிரீடைகளில் பிறருக்குத் தீங்கு விளையாத வரையில் எதேச்சையாக நடக்க உரிமை வேண்டும். இவ்வாறு சுதந்திரத்துடன் வாழும் மனிதன் இவைகளில் தானாக அலுத்துப்போய் ஆத்ம ஞானத்தைத் தேட வாரம்பிக்கும்பொழுது பூரண ஞானம் பெற்று ஒரு புத்தராகவும், சாக்ரதராகவும், கிறிஸ்துவாகவும் பரிணமிக்கின்றான். ஆதி முதற்கொண்டு பலவித சமாஜக் கயிறுகளால் கட்டுண்டவன் இரத்த ஓட்ட மின்றி, நிறை வாழ்வின்றி, நோயாளியைப் போல் இவ்வுலகில் சுகமின்றியும், மறு வாழ்விலும் விடுதலையின்றியும், நசித்துப் போய் விடுகின்றான்.

ஒரு தேசத்திலோ, சமூகத்திலோ, கூடிய வரையில் சுதந்திரம் ஏற்படுவதற்கு இரண்டு காரியங்கள் வேண்டும். தேசத்தின், சமூகத்தின் அதிகாரிகள் பயத்தினாலும், தண்டனையினாலும் தங்கள் அதிகாரத்தைச் செலுத்த வெறுக்க வேண்டும். அபபடியே பிரத்தியேக ஸ்திரீ புருஷர்கள் பொது நன்மையைக் காக்கத் தாங்களாகவே முன் வர வேண்டும். இதெல்லாவற்றிற்கும் அஹிம்சையே ஆதாரம். பலாத்காரத்தை அடிப்படையாகக் கொண்ட தேசங்கள் ஓரளவே சுதந்திரமாக வாழக் கூடும். ஆனால், இங்கிலை ஸ்திரமாக விருக்காது. உலகம் முழுதும் அஹிம்சா தர்மத்தைப் பரப்புவது மனிதர் சுதந்திரம் பெற்று வாழ்வதற்கு உண்மையான வழி. எல்லா மனிதரும் அஹிம்சையை மேற்கொண்டால் தற்காலம் நிகழ்ந்து வரும் தேசச் சண்டைகளும், வர்ணச் சண்டைகளும் நின்று போய் விடும். இதுவே நாகரீகத்தின் முக்கிய லக்ஷ்யம்.

இது எளிதில் ஆகக்கூடிய காரியமன்று. ஆயிரக் கணக்கான வருஷங்களில் பல மகா புருஷர்களின் முயற்சியாலும், தியாகத்தாலும் ஆகவேண்டியது. ஆதலால், சுதந்திரத்தை விரும்பும் எவனும் தன்னாலானவளவு ஓர் சிறிதேனும் அஹிம்சையைப் பரப்புவது கடமை.

III

# சமத்துவம்

## (1)

## இயற்கையும், செயற்கையும்

மனித சமூகத்தில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளின் கொடுமைகளை ஆலோசிக்கும் எவனும் மனம் புண்ணுகமலிருக்க முடியாது. கோடிக் கணக்கான ஜனங்கள் உணவுக்கும், ஆடைக்கும் அல்லாடிக் கொண்டிருக்கும் பொழுது சிலர் கோடீசுவரர்களாகத் தங்கள் செல்வத்தைச் செலவழிக்க வழி தோன்ருமல் திகைக்கின்றனர். ஒரு மனிதன் ஆயுள் முழுதும் தோட்டி வேலை செய்து எல்லோராலும் அவமதிக்கப்பட்டுக் காலம் கழிக்கின்ருன். மற்ருெருவன் ஒரு சிறிய புஸ்தகம் எழுதியோ, நாடகம், சங்கீதம் முதலிய ஆநந்தக் கலைகளில் தேர்ச்சியடைந்திருப்பதனுலோ புகழும்,செல்வமும் பெற்றுப் பாக்கியவானுக வாழ்கின்ருன்.

இவ்வேற்றத் தாழ்வு ஒன்றுமறியாத குழந்தைகளின் விஷயத்தில் அதிகக் கொடூரமாகக் காணப்படுகிறது. தாங்கள் விளையாடி மேய்த்து வரும் பசுக்களின் பால் முழுதும் பிற வீட்டுக் குழந்தைகளுக்கே போய்ச் சேர்வதைப் பார்த்துத் துயரப்படும் இந்தியக் குழந்தைகளின் தொகையை யார் தான் சொல்லக் கூடும்?

இவ்வேற்றுமைகள் எல்லாம் அத்தியாவசியமா? அவைகளுக்கு நிவர்த்தியாவது, சிறிது பரிகாரமாவது உண்டா என்னும் கேள்வி சாதாரணமாக எல்லோர் மனத்திலும் உதிக்கக் கூடியது. 'இவ்வேற்றுமைகள் எக்காலமும் இருக்கவே இருக்கும். சமூகம் நிறை வாழ்வு வாழ்வதற்கு அவை

அவசியமானவை. எல்லோரும் அரசர்களாகிவிடின் பல்லக்குத் தூக்குபவர்களிருக்க முடியாது. அப்பொழுது ஒருவன் கூட உண்மை அரசனுக இருக்கான்.' என்று ஒரு சாரார் வாதாடுவர். இதற்கு நேர் விரோதமாகப் பூர்ண சமத்துவ வாதிகள் சமூகத்தில் தோன்றும் ஏற்றத் தாழ்வுகள் அனைத்திற்கும் அநியாய சமூக அமைப்பே காரணமென்றும், அதை அடியோடு அழித்து சமத்துவ சமூகத்தை ஏற்படுத்தும் வரையில் சத்திய சமாஜம் சாத்தியமில்லையென்றும் கூறுகின்றனர். இந்தப் பிரச்சினை மகத்தானதென்று கூறத் தேவையில்லை.

இவ்வளவு சிக்கலான பிரச்சினையைப் பற்றித் தெளிவாகவும், தைரியமாகவும் சிந்தித்து முடிவுக்கு வரவேண்டியது நமது வருங்கால வாழ்வுக்கு மிகவும் முக்கியமானது.

இவ்வேற்றுமைகளுக்கு மூலம் இருவகைப் படும். இயற்கையால் சில வித்தியாசங்கள் தோன்றுகின்றன. மற்றவை சமூக அமைப்பைப் பொருத் திருக்கின்றன. இயற்கையை நாம் திடீரென்று மாற்ற முடியாது. நீண்ட காலம் ஓர் சமூக அமைப்பு நிலைத்திருந்தால் அச்சமூகத்தின் பிரஜைகளின் இயற்கையும் ஓரளவு மாறலாம். இதைப்பற்றி சமாஜ சாஸ்திரத்தில் வல்லோர் இன்னும் நிச்சயமான முடிவுக்கு வரவில்லை. ஆனல் எச்சமூகத்திலும் இயற்கையால் பல்வித வேற்றுமைகள் உண்டாகின்றன வென்பதை எவரும் மறுக்க முடியாது. சமூக அமைப்பினுலுண்டான வேற்றுமைகளை மாற்றுவது நம் சக்திக்குக்குட்பட்டது. இதிலும், காரியத்தின் பலாபலன்களை நன்கு ஆலோசிக்காமல், திடீரென்று புரட்சி செய்தோமானல், பழைய தீமைகளைக் காட்டிலும் புதிய தீமைகள் அதிகக் கொடுமையாக விருக்கக் கூடும்.

வேற்றுமைகளின் இவ்விரண்டு காரணங்களி லிருந்து, இரண்டு பொது நியமங்கள் ஏற்படுகின்றன. இயற்கையினுலுண்டாகும் வித்தியாசங்களை நாம் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டு அவைகளைச் சமூகத்தின் நன்மைக்குப் பயன்

படுத்திக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக, செயற்கையால் அனுவசியமாக மனிதனுக்கு மனிதன் ஏற்றத் தாழ்வு உண்டாக்குவது அதர்மம். வேறு விதமாக உரைக்கின், ஒவ்வொரு குழந்தையும் தன் இயற்கை சக்திகளையும், குணங்களையும் பூர்ணமாக வளர்க்க அவகாசம் கொடுக்கப்பட வேண்டும். ஆனால், இந்த அவகாசத்திற்கு மேற்பட்ட எவ்வித ஏற்றத் தாழ்வும் இருக்கக்கூடாது.

இவ்விரு நியமங்களையும் அமுலுக்குக் கொண்டு வருவது எளிதன்று. அவைகளைப் பூராவாக நடவடிக்கையில் அனுசரிப்பது சாத்திய மென்று அனுபவ மில்லாமல் சொல்ல முடியாது. இவ்விரண்டிற்கும் ஒன்றிற்கொன்று முரண்படும் சந்தர்ப்பங்கள் பலவுள. ஒருவன் தன் பலத்தைக் கொண்டு பலஹீனர்களுக்குத் தீங்கிழைக்க இடங் கொடுக்கலாகாது. புத்திசாலிகளுக்கு மற்றவர்களை ஏமாற்ற உரிமை யில்லை.

தற்சமயம் சமாஜங்களில் ஏற்படும் வேற்றுமைகளில் எந்த அம்சம் இயற்கையினு லுண்டானது, எது சமூக ஏற்பாடுகளினுலான தென்று வகுத்து எத் துறைகளில் எவ்வளவு தூரம் சமத்துவம் சாத்தியமான தென்று நிர்ணயிக்க முயல்வதே இவ்வியாசத்தின் நோக்கம்.

## (2)

## இயற்கை வேற்றுமைகள்

இயற்கையில் இரண்டு ஜீவன்கள் ஒரே சமமாக இருப்பது துர்லபம். இவ்வித்தியாசம் மற்றப் பிராணிகளை விட மனிதர்களிடம் அதிகமாகக் காணப் படுகிறது. ஒரே தாய் தந்தையருக்குப் பிறக்கும் குழந்தைகள் தங்கள் குணங்களில் பெரிதும் வேறுபட் டிருப்பது எல்லோருக்கும் சாதாரண அனுபவம். இவ்வேற்றுமைகளை (1) பலம் (2) புத்தி கூர்மை (3) அழகு என்று மூன்று வகைகளாகப் பிரித்துக் கூறலாம்.

இவைகளைச் சமூக ஏற்பாடுகளால் மிகவும் அதிகரிக்கக் கூடும். ஆனால் இவற்றிற்கு ஆதாரம் இயற்கையே.

இவ்வித்தியாசங்களுக்குக் காரணங்கள் என்ன வென்று நிச்சயமாக எவரும் சொல்ல முடியாது. ஒரு தேசத்தின் அமைப்பு, அதன் சீதோஷ்ண ஸ்திதி, ஜாதிகளின் மூல இயற்கை குணங்கள், தாய் தந்தையரின் சுபாவம் இவைகளெல்லாம் ஒவ்வோர் அம்சங்களில் காரணமாவன. இவையெல்லாம் ஒன்றாக விருக்கு மிடத்தும் வேற்றுமைகள் தோன்றுகின்றன. இதை ஹிந்துக்கள் கர்ம பலனென்றும், மற்ற மதஸ்தர்கள் தெய்வ சங்கல்ப மென்றும், விஞ்ஞானிகள் இயற்கை விநோத மென்றும் கூறுவர். இவையெல்லாம் நமது அறியாமைக்கு வெவ்வேறு பெயர்கள். எப்படி உரைத்தாலும், உண்மையான காரணம் நமக்குத் தெரியா தென்பதே வாஸ்தவம். இவ்வேற்றுமைகளால் வாழ்க்கையின் இன்பத்திலும், மேன்மையிலும் பல ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுவது நிச்சயம். இதர விஷயங்கள் சமானமாக விருப்பின், திடகாத்திரமான குழந்தை சவலைக் குழந்தையைக் காட்டிலும் ஆயுள், ஆரோக்கியம் வீர்யம் இவைகளில் உயர்ந்து விளங்கு மென்பதில் ஐயமில்லை. அவ்வாறே, பிறவியால் கூர்மதி படைத்தவன் தன் சமூகத்தின் குருவாக விளங்குவான். அழகு படைத்த ஸ்திரீ புருஷர்கள் மற்றவர்களைத் தம் வசமாக்கிக் கொள்ளுவார்கள்.

மனித சமாஜங்களில் பல காரணங்களால் இவ்வியற்கை குணங்கள் தங்களுக் குரிய பதவியை அடைவதில்லை. திடகாத்திரமுள்ள குழந்தைக்குச் சரியான உணவும், தேகப் பயிற்சியும் கிடைப்பதில்லை. புத்தி யுள்ளவர்களுக்குக் கல்வி கிடைப்பதில்லை. அழகுள்ளவர்களுக்கு அதை வளர்க்கக் கூடிய வசதிகள் கிடைப்பதில்லை.

இயற்கையின் வேற்றுமைகளில் ஒரு அதிசய குணமிருக்கின்றது. அவைகளால் எவருக்கும் தீங்கு விளைய வேண்டியதில்லை. இதற்கு மாறாக, இவ்வித்தியாசங்களே

மனிதன் மேன் மேலும் வளர்வதற்கு சாதனங்களாவன. அவைகள் தீமைகளாகத் தோன்றினுல் அதற்குக் காரணம் சமூக அமைப் பென்று நிச்சயிக்கலாம். ஒருவனுக்கு அதிக பலம், புத்தி அல்லது அழகு இருப்பதால் மற்ற எவனுக்கும் கெடுதி ஏற்பட வேண்டியதில்லை. நன்ருக அமைக்கப் பட்ட சமாஜத்தில் இவ்வேற்றுமைகள் அதற்கு சக்தியும், வைசித்திரியமும் அளிப்பன. புத்திசாலிகள் தங்கள் மதியைக் கொண்டு அச்சமூகத்தின் நன்மையைத் தேடுவார்கள். பலவான்கள் அதைப் பாதுகாப்பார்கள். அழகும் சமார்த்தியமும் படைத்தவர்கள் அதன் கலைகளை விருத்தி செய்து வாழ்க்கையின் இன்பத்தை அதிகரிப்பார்கள்.

மற்றவர்களுக்குத் தீங்கியற்ருமல் தனது இயற்கை சக்திகளையும், குணங்களையும் வளர்க்கும் உரிமை எவனுக்கும் உண்டு. இதற்கு சமாஜம் சரியான அவகாசம் அளிக்கவேண்டும். ஒவ்வொருவருக்கும் இந்த அவகாச மளிப்பதே இவ்விடத்தில் சமத்துவ மாகும். வேறு வித சமத்துவம் சாத்தியமில்லை. எவரும் கேழ்ப்பது மில்லை. இவ்வியற்கை வேற்றுமைகளின் பேரில் மற்ற அனுவசியமான பேதங்களைப் பாராட்டுவதனுல் சமூகத்தின் பேரில் பிரஜைகளுக்கு அதிருப்தி உண்டாகின்றது. புத்திசாலிக்கு மற்றவர்களை விட அதிக வயிறு இல்லை. அவனுக்குப் பிறரை விட அதிக புஸ்தகங்கள் கொடுக்க வேண்டு மென்பது நியாயம். அத்துடன் மற்றவர்களை விடச் சிறந்த உணவும், ஆடையும் கொடுக்க வேண்டு மென்பது வெறும் விதண்டாவாதமே.

இயற்கை குணங்களை வளர்க்க எல்லா ஜனங்களுக்கும் சம அவகாசம் கொடுக்கப்பட வேண்டு மென்பது உசிதம். அவசியமு மாகும். அதனுல், சிலர் உயர்ந்தவர்களாக விருப்பார்களென்பது திண்ணம். இதை எவரும் மாற்ற முடியாது. இதனுல் தீங்கு விளையாதிருக்கும் பொருட்டு, சமூகத்தில் சகோதர பாவத்தை வளர்க்க வேண்டும். சகோதரத்துவமில்லாத சமூகத்தில் பொருமையும், சண்டையும் சகஜமாக ஏற்படும். எப்படி ஒரு குடும்பத்தில் பலஹீனமான

குழந்தைகளுக்குத் தாய் தந்தையர் விசேஷ உணவு முதலி யவை கொடுத்துப் போஷிக்கிறார்களோ, அப்படியே சமூகமும் இயற்கையால் தாழ்த்தப் பட்டவர்களுக்கு அன்பும், ஆதரவும் அளிக்க வேண்டும். ஆனால், தற்கால சமாஜங்களோ "பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்" என்ற பழமொழியை அனுசரித்து இயற்கையால் தாழ்ந்தவர்களை சமூக ஏற்பாடு களால் மீண்டும் தாழ்த்துகின்றன. இந்த ஏற்பாடுகள் என்ன வென்று இனி விசாரிப்போம்.

(3)

## செயற்கை வேற்றுமைக் காரணங்கள்

செயற்கை வேற்றுமையின் காரணங்களை (1) ராஜ்ய முறை (2) சமூக நம்பிக்கைகள் (3) செல்வப்பிரிவினை என்று மூவகையாக வகுக்கலாம். இயற்கையாலுண்டாகாத எல்லா வேற்றுமைகளுக்கும் இவற்றில் ஏதாவதொன்று காரணமாக விருக்கும்.

ராஜ்ய முறையால் உண்டாகும் வேற்றுமைகளை நாம் நேரில் அனுபவித்து வருகிறோம். இது இரு விதமாக உண் டாகலாம். ஒரு நாட்டார் மற்றொரு தேசத்தைப் பிடித்து ஆளும் பொழுது அரசாள்பவர் உயர்ந்தவர்களென்றும், ஆளப் படுவோர் தாழ்ந்தவர்களாவும் கருதப்படுகின்றனர். ராஜ்யாதி காரத்தைக் கொண்டு தங்கள் செல்வத்தையும் அக்கிரமமாகப் பெருக்கிக் கொள்ளுகின்றனர்.

ஒரு தேசத்தில் ஒரு தனி மனிதனோ, ஒரு கூட்டத் தாரோ மற்றவர்களை ஆண்டு வரும் பொழுதும் இதே பரிணா மங்கள் உண்டாகின்றன. அதிகாரம் செய்பவர்கள் மற்ற ஜனங்களைத் தங்கள் சௌகரியத்திற்கும், சிறப்புக்கும் தொண்டு புரியுமாறு பலவந்தப் படுத்துகின்றனர். நமது நாட்டில் அரசர்கள் தங்களுக்கு வேண்டியவர்களை ஜமீன்தார் களாகச் செய்வது மன்றி, ஏழைக்குடியானவர்களின் கிராமங்

170651

களைப் பிராம்மணர்களுக்கும், மற்றவர்களுக்கும் இனாமாகக் கொடுப்பதும் வழக்கம். எந்நாடும் அதன் பிரஜைகளுக்கே சொந்த மென்பதும், அதில் பிற நாட்டாரோ, ஒரு தனிக் கூட்டத்தாரோ எதேச்சையாக அரசு புரிவது அக்கிரமமென்பதும் வாதத்திற்கிடமில்லை. ஜனங்கள் தங்களைத் தாம் ஆண்டு கொள்வது சுலபமல்ல வென்பதை ஒப்புக் கொள்ளலாம். ஆயினும் இதற்கு வேறு வழியில்லை. ஒற்றுமையும், பொது நல உணர்ச்சியுமில்லாத நாடுகள் கஷ்டப்படவேண்டியது தான். இதை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு பூனைகளுக்கு நடுவில் குரங்கு செய்த நியாயத்தை மேற்கொண்டு சிலர் உரிமை கொண்டாடுவது எவ்விதத்திலும் ஒப்பத் தகுந்ததில்லை.

இதற்குப் பரிகாரம் பொது ஜன ஆட்சியே. எந்நாட்டிற்கும் இது பிறப்புரிமையாகும். அதனால் ஒருதேசம் தனக்கு நன்மை புரிந்து கொள்ளவும், தீங்கிழைத்துக் கொள்ளவும் பாத்தியமுண்டு. இதரார் புத்திமதி கூறலாமே யொழிய பலாத்காரமாகப் பிரவேசிக்கலாகாது.

பொது ஜன ஆட்சியின் கீழும், சாதாரணப் பிரஜைகள் மீது ராஜாங்க அதிகாரிகள் அதிக அதிகாரம் செலுத்தாமல் பார்ப்பது அவசியம். பொது ஜன உணர்ச்சி அதிகரிப்பதே இதற்குத்தகுந்தவழி. ராஜாங்க உத்தியோகஸ்தர்கள் சாதாரண ஜனங்களின் சேவகர்கள், எஜமானர்களல்ல வென்ற உண்மையை எல்லோரும் நன்கு உணர்ந்த பொழுது அதிகாரிகள் வணக்கமாக நடந்து கொள்ளுவார்கள். மற்றவர்களை விட அதிக ஊதியம் கொடுக்காமலிருப்பதும் அதிகாரிகளின் அகங்காரத்தைக் குறைக்கும்.

ராஜ்ய முறையைப் போலவே, சமூக நம்பிக்கைகளும் பல அனாவசிய வேற்றுமைகளை உண்டாக்குகின்றன. ஜாதி, வர்ணம், வகுப்பு என்ற பேதங்கள் பெரும்பாலும் இந்த நம்பிக்கைகளைப் பொருத்தேயிருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் பரிகாரம் அறிவின் வளர்ச்சி ஒன்றே. நேரில் அனுபவிக்காத எக்காரணத்தைக் கொண்டும் மனிதருக்குள் உயர்வு

தாழ்வு கொண்டாடுவது அறிவீனமென்ற கொள்கை பரவ வேண்டும்.

செல்வப் பிரிவினையால் உண்டாகும் வேற்றுமைகளை ஒவ்வொருவரும் தினந்தோறும் அனுபவிக்கிறோம். இதைப் பற்றிப் பின்னால் விரிவாக ஆராய்வோம்.

இம் மூன்று காரணங்களால் ஒவ்வொரு சமூகத்திலும் ஜனங்கள் தங்கள் (1) பிறப்பு (2) செல்வம் (3) தொழில் (4) அதிகாரம் இவைகளின் வாயிலாகப் பலவித ஏற்றத் தாழ்வு கொண்டாடி வருகின்றனர். இவற்றைத் தனித்தனியாக ஆலோசிப்போம்.

## (4)

## பிறப்பு

பிறப்பினால் உயர்வு, தாழ்வு உலகமெங்கும் காணப்படுகின்றன. அது ஒருவனுடைய தேசம், ஜாதி, குடும்பம் இம் மூன்றையும் பொருத்திருக்கின்றது.

ஒரு தேச மக்களின் பலமும் ஆரோக்கியமும் அதன் சீதோஷ்ண ஸ்திதியைப் பெரிதும் அவலம்பித்திருக்கின்றன. அந் நாட்டின் தொழில்கள் அதன் செழிப்பைப் பொருத்திருக்கின்றன. இவ்வேற்றுமைகள் மாற்றக் கூடாதவை. ஆனால், சில அவாந்தர காரணங்களால் ஒரு நாடு மற்றோர் தேசத்திற்கடிமைப் பட்டுவிட்டால் அந்நாட்டின் ஜனங்கள் மற்ற தேசங்களால் அவமதிக்கப்படுகின்றனர். அப்படியே ஒரு நாட்டின் செல்வத்தை மற்றோர் நாட்டார் பலாத்காரத்தாலும், உபாயத்தாலும் கொண்டுபோவதைப் பார்க்கிறோம். தவிர, இதுகாறும் அதிக ஜனங்கள் குடியேறாத பெரும் கண்டங்களைச் சிலர் பிடித்துக் கொண்டு தங்கள் ஜாதியார்களைத் தவிர மற்றவர்களை வர விடமாட்டோம் என்று பிடிவாதம் செய்வதை ஆஸ்திரேலியா, ஆப்பிரிகா, அமெரிக்கா கண்டங்களில் காண்கிறோம். இவ்விஷயங்களில் சமத்துவம் அடை

வது சாத்தியமானது. அதற்காக முயல்வது கடமையாகும். எக்காரணத்தைக் கொண்டும் ஒரு தேசத்தை மற்றோர் நாட்டார் ஆளுவதற்கோ, அதன் செல்வத்தைக் கொள்ளை கொண்டு போவதற்கோ உரிமையில்லை. பூமியின் ஜனமில்லாத பாகங்கள் எல்லா மனிதருக்கும் பொதுவாக விருக்க வேண்டும். ஜனத்தொகை ஓரளவு சேரும் வரையில் எவனுக்கும் அவ்விடங்களில் போய் வாழ உரிமை யளிக்கப் பட வேண்டும்.

ஜாதிப் பிரிவுகள் மதம், நிறம், பழக்க வழக்கங்களால் சகஜமாக உண்டாகின்றன. இந்த வித்தியாசங்களைத் தடுக்க முடியாது. இவைகளால் ஒரு மனிதன் உயர்ந்தவனென்றும், மற்றொருவன் தாழ்ந்தவன் என்றும் நினைப்பதற்கு யாதொரு காரணமுமில்லை. ஆனால் அவ்வித எண்ணம் பலவாறாகப் பரவி அநர்த்தத்தை விளைவிக்கிறது. நம்நாட்டில் இதன் கொடுமைக்கு அளவில்லை. ஒவ்வொரு குடும்பமும் பிறரைத் தனக்குக் கீழாகவும், மேலாகவும் எண்ணிக் கொள்ளுகிறது. நம்மிடம் அதிகமாகப் பரவியிருப்பினும் இந்த நோய் மற்ற தேசங்களிலும் இல்லாமலில்லை. வெள்ளையர்கள் கருப்பு மனிதர்களைத் தாழ்ந்தவர்களாக எண்ணி அப்படியே நடத்தி வருகின்றனர்.

இதெல்லாம் மூடத்தனமாக விருந்த போதிலும் இந்த எண்ணம் ஒரு சமூகத்தின் மனத்தில் குடி கொண்டு விட்டால் அதை அகற்றுவது துர்லபம். உயர்ந்தவர்கள் என்ற ஜாதி மட்டுமின்றி தாழ்த்தப் பட்டவர்களும் தாங்கள் கீழானவரென்று நம்புகிறார்கள். பிராம்மணர்கள் அக்கிரகாரத்திற்குள் தீண்டாதவர்கள் வந்தால் தம் மதம் போய் விடுமென்று நம்புவது போலவே, ஆதி திராவிடர்களில் பலர் அக்கிரகாரத்திற்குள் போனால் தங்களுக்குப் பெரும் கேடு விளையுமென்று நினைக்கின்றனர்.

பிறப்பினால் எவனும் உயர்ந்தவனல்ல, தாழ்ந்தவனுமல்ல என்ற கொள்கை சத்திய சமாஜத்திற்கு இன்றியமையாதது. இதனால் பழக்க வழக்கங்களில் பேதங்களிருக்கக் கூடா தென்

படது அர்த்தமல்ல. சமத்துவ எண்ணம் எவ்வளவு அவசியமோ அவ்வாறே பரஸ்பர பேதங்களை சகிக்கும் தன்மையும் சமூக நலத்திற்கு இன்றியமையாதது.

பெற்றோர்களின் அந்தஸ்தும், செல்வமும் மக்களுக்கு ஓரளவு கிடைப்பது சகஜம். ஆனால், இது பல விடங்களில் பிறருக்கு அநியாயத்தை விளைவிக்கிறது. நல்ல சேவைக்காகவும், ஞானத்திற்காகவும் அளிக்கப்படும் சாதனங்கள் அந்த குணங்கள் இல்லாத மக்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்பது எவ்வித நியாயத்திற்கும் பொருந்தாது. இக்காரணத்தால் இறந்தவன் சொத்தில் பெரும்பாகம் சமூகத்திற்குச் சேரவேண்டுமென்று அறிவாளிகள் கூறுகின்றனர். சில நாடுகளில் இம்முறை அனுசரிக்கப்பட்டு வருகின்றது. எவனுக்கும் எந்த உத்தியோகமும், அதிகாரமும் அந்தஸ்தும் தன் குடிப்பிறப்பினால் கிடைக்கக் கூடாது. தனது குணங்களாலும் காரியங்களாலுமே அவைகளுக்கு அவன் பாத்திரனாக வேண்டும். தன் பெற்றோர்களின் குணங்கள் சில அம்சங்களில் தனக்குக் கிடைப்பதும், பால்யத்தில் அவர்களுடைய சகவாசத்தால் கிடைக்கும் நன்மையுமே ஒருவன் தனது தாய் தந்தையர்களிடமிருந்து உரிமையாக அடைய வேண்டியவை. இவைகளைத் தவிர பெற்றோர்களின் புகழும், செல்வமும், சேவையும் சமூகத்திற்குப் பொதுவாக விருக்க வேண்டும். இந்நியமங்கள் ஒப்புக் கொள்ளப் பட்டால் சமத்துவம் பெருகி சமூக வாழ்வின் தன்மை உன்னத நிலை யடையும்.

## (5)

## செல்வம்

மற்றெல்லா வேற்றுமைகளை விட செல்வத்தின் ஏற்றத் தாழ்வே மனித சமூகங்களின் துக்கத்திற்கும், பொறாமைக்கும், குழப்பத்திற்கும் பெரிய காரணமாகும். ஏனெனில், எவ்வளவு செழிப்பான தேசமாயினும் அதன் செல்வத்திற்கு அளவுண்டு. ஆகையால், அதில் பெரும்பாகம் ஒரு சிலருக்குப்

போய் விட்டால் மற்றவர்களுடைய பாகம் குறைந்தே தீர வேண்டும். உணவு ஆடை, வீடு முதலியவை எல்லோருக்கும் ஒரே மாதிரி தேவையானவை. விசேஷ காரண மிருந்தாலொழிய சிலர் உணவின்றியும், ஆடையில்லாமலும் தவிக்கும் பொழுது மற்றும் சிலர் தேவைக்கு மேல் செல்வம் பெற்றிருப்பது அநியாயமென்று ஏற்படுகின்றது.

தவிர, சொத்தின் ஏற்றத் தாழ்வு ஒரு மனிதனுடைய சுகத்தை மட்டுமல்ல, அவனது சுதந்திரத்தையும் பாதிக்கிறது. தினம் நாலணா கூலி கிடைக்காத ஜனங்கள் ஒருபக்கமும், மாதம் ஆயிரக் கணக்கான வருமான முள்ளவர் மற்றொரு பக்கமும் இருக்கும் நாட்டில் உண்மையான சுதந்திரம் நிலைத்திருப்பது சாத்திய மன்று. ஏழைகள் பணக்காரர்களுக்கு அடிமையாகாமலிருக்க முடியாது.

இவ்வேற்றுமைகளுக்குக் காரணம் சமூக அமைப்பே. இயற்கை எவனுக்கும் செல்வத்தைக் கொடுப்பதில்லை. சமூகத்தின் ஏற்பாடுகளால் ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு ஊதியம் கிடைக்கிறது. தற்காலமிருக்கும் ஏற்பாட்டில் எவ்வித நியாயமும் புலப்படவில்லை. ஒரு காரியாலயத்தில் உட்கார்ந்து வேலை செய்யும் குமாஸ்தாவுக்கு ஒரு தச்சனை விட அதிகக் கூலி கொடுப்பதற்கு யாதொரு காரணமுமில்லை. ஆயினும் அப்படிக் கொடுப்பது வழக்கம். சமூக அமைப்பு மாறினால் இந்த ஊதியங்களும் மாறிவிடும். ருஷியா தேசத்தில் புரட்சிக்கு முன் ஆயிரக் கணக்கான சம்பளம் பெற்று வந்த வித்வான்களும், ஆசிரியர்களும் புரட்சிக்குப் பின் உணவுக்கு வழியில்லாமல் திகைத்தனர். இப்பொழுது சாதாரண கூலி வேலை செய்பவனை யொத்த சம்பளம் பெற்றுத் தம் தொழிலைச் செய்து வருகின்றனர்.

ஒருவன் புத்திக்கும், சாமர்த்தியத்திற்கும் ஏற்றவாறு தொழிலும், அத்தொழிலைத் திடம் படச்செய்யும் வசதிகளும் கொடுப்பது நியாயமாகும். ஆராய்ச்சியில் வல்ல ஒருவனுக்கு அதிக புஸ்தகங்கள் கொடுக்க வேண்டும். ஆனால் அவனுக்கு

மற்றவர்களுடைய உணவையும், ஆடையையும் பறி முதல் செய்து கொடுக்க வேண்டியதில்லை.

சொத்து வேற்றுமைக்கு இரண்டாவது காரணம் முதல். சிலருக்குத் தேவைக்கு அதிகமாக வருமான மிருப்பதால் அதில் ஒரு பாகத்தை மீதி வைத்துப் பிறருக்குக் கடன் கொடுத்து வட்டிவாங்குகிறார்கள். இப்படி முதலும் வட்டியும் சேர்ந்து நாளடைவில் பெரிய சொத்தாகி விடுகின்றது. எந்த நாட்டிற்கும் முதல் அவசியம். முதல் இல்லாமல் சமூகத்தின் பொருளாதார நிலைமை சீர் படாது. ஆனால், இம்முதல் பிரத்தியேக முதலாளிகளிடம் இருக்க வேண்டுமென்று அவசியமில்லை. அப்படி இருப்பதனால் பெரும் தீங்குகளும் விளைகின்றன. அதனால் பொது ஜனங்களுக்கு வேண்டிய அவசிய பொருள்களை உற்பத்தி செய்யாமல் முதலாளிகளுக்கு விருப்பமுள்ள உல்லாச பொருள்கள் செய்வதில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஈடு படுகின்றனர். ஆகையால், ஒரு சமூகத்தின் முதல், அச்சமூகத்திற்குப் பொதுவாக இருப்பதே நலமென்று உலகெங்கும் ஒப்புக்கொள்ளப்பட்டு வருகின்றது.

செல்வத்தின் ஏற்றத் தாழ்விற்குக் குடும்ப பரம்பரை சொத்து உரிமைக் கிரமம் மூன்றாவது காரணமாகும். ஒருவன் சொத்தை அவன் இறந்த பிறகு அவனது மக்களும், பந்துக்களும் அடைகின்றனர். இது பண்டைக் காலக்கிரமமானதால் மிகவும் பொருத்த முள்ளதாகக் காணப்படுகிறது. ஆனால் சற்று ஆலோசித்துப் பார்ப்போம். ஒருவன் தனது சமூகத்திற்கு அரிய சேவை செய்ததன் பொருட்டு அவனுக்கு விசேஷ சௌகரியங்கள் கொடுத்தால், அப்படி யாதொரு தொண்டும் இயற்றாத அவன் மக்களுக்கும் ஏன் அவை வழங்கப்பட வேண்டும்? இம்முறையின் காரணமாக, தனவந்தர்களின் மக்கள் சோம்பேறிகளாக விருப்பதே தமது உரிமையும், கடமையுமெனக் கருதுகின்றனர். தற்காலம், பிதுரார்ஜித சொத்து இருப்பவனுக்கே நல்ல கல்வியும், தொழிலும் கிடைப்பதால், இம்முறை அவசியமாகத் தோன்றுகிறது. எந்த சமூகத்திலாவது எம் மனிதனுக்கும் அவன் சக்திக் கேற்ற

கல்வியும், தொழிலும் வழங்கப்படுமாயின் இப்பொழுதிருக்கும் சொத்து விபாக முறை அனுவசிய மென்றே புலப்படும். ஒரு வேளை ஒருவனுடைய சொந்த மக்களுக்கு அவனது சொத்தில் ஒரு பாகம் கொடுப்பது நியாயமாகத் தோன்றலாம். தூர பந்துக்களுக்குப் போவதில் எவ்வித அர்த்தமுமில்லை. தனது சமூகமே ஒருவனுடைய முக்கிய வார்சாகக் கருதப்பட வேண்டும்.

ஐரோப்பாவில் சொத்து சமத்துவத்தைப்பற்றி ஆழ்ந்த தீர்க்காலோசனை செய்யப்பட்டு வருகின்றது. அதை விவகாரத்தில் கொண்டு வர வேண்டுமென்று பலகக்ஷிகள் தோன்றி முயற்சிகள் செய்து வருகின்றன. அவைகளில் ஒரு சாரார் பிரத்தியேகமாக ஸ்திரீ புருஷர்களுக்கு சொத்தே இருக்கலாகா தென்றும், எல்லாச் செல்வமும் சமூகத்திலுள்ள அனைவருக்கும் பொதுவாக இருக்க வேண்டு மென்றும், பலாத் காரமாக முதலாளிகளிடமிருந்து சொத்தைப் பிடுங்கிக் கொள்ள வேண்டு மென்றும் நம்புகின்றனர். இவர்கள் ருஷியாவில் ராஜ்யாதி காரத்தைக் கைப் பற்றிக்கொண்டு தம் கொள்கைப்படி அந்நாட்டைத் திருத்தி அமைத்து வருகிறார்கள்.

மற்ற பொது உடமைக் கக்ஷியார்கள் இவ்வளவு தூரம் போகாமல் பிரத்தியேக மனிதரிடம் அதிக சொத்தும் முதலும் சேரக்காடாதென்றும், பெரிய தொழிற் சாலைகள், ரயில் பாதைகள், நிலங்கள் முதலியஸ்தாவர சொத்துக்கள் சமூகத்திற்குப் பொதுவாக இருக்க வேண்டு மென்றும் எண்ணுகின்றனர். வருமானங்களில் ஒரெல்லைக்குள் வித்தியாசங்கள் இருக்கலாமென்றும், வரிவிகிதத்தாலும், இறந்தவர்களின் சொத்துக்களில் பெரும்பாகத்தை சமூகத்திற்கு எடுத்துக்கொள்ளுவதாலும் வேற்றுமைகளின் கொடுமையைக் குறைக்க முயன்று வருகிறார்கள். இவ்விஷயங்களை ஆதியோடந்தமாக ஆராய்வதற்கு இச்சிறு வியாசத்தில் இடமில்லை. சில முக்கிய தத்துவங்களை மட்டும் எடுத்துக் கூறுவது சாத்தியமாகும்.

பூர்ண சமத்துவம் அடைவது சாத்தியமாகத் தோன்ற

வில்லை. ஒரே வித வேலையில் நன்றாக வேலை செய்பவனுக்குஞ் சோம்பேறிக்கும் ஒரே கூலி கொடுப்பது நியாய மில்லை. ஒரே சம்பளம் பெறுவோர்களிலும் ஒருவன் தன் சம்பளத்தைச் சிக்கனமாக உபயோகித்துக் கொஞ்சம் மீதி வைப்பான். மற்றொருவன் முன்பின் ஆலோசியாது வாரி இறைத்து விடுவான். இவர்களிருவருக்கும் ஏதாவது வித்தியாசமில்லாவிடின் சிக்கனமே மறைந்து போய் சமூகம் திவாலாகி விடும்.

ஆதலால் வித்தியாசங்களே கூடா தென்ற வாதத்தைக் காட்டிலும், அவைகள் ஓர் வரம்புக்குட்பட்டிருக்க வேண்டுமென்ற கொள்கையே பொருத்தமானது. ஒரு குடும்பத்திற்கு வருஷம் ரூ 250 ம், மற்றொரு குடும்பத்திற்கு ரூ 500 ம் வருமானம் வந்தால் சமூகத்தில் அதிகக் கொடுமை ஏற்படாது. அப்படியன்றி, சிலருக்குப் பதினாயிரம், லக்ஷம் ரூபாய் வருமானம் கிடைத்துப் பலர் ஒன்று மில்லாமல் ஆண்டியாகத் திரியும் சமூகம் மகோதரம் பிடித்த மனிதனைப் போலாகும்.

நிலம், சுரங்கம் போன்ற இயற்கை சொத்துக்களும், புகை வண்டிகள், கப்பல்கள், பெரிய தொழிற் சாலைகள் முதலிய அதிக பொறுமான முள்ள சொத்துக்களும் சமூகத்திற்குப் பொதுவாக இருப்பது அத்தியாவசியமானது. அப்பொழுது அவைகளின் பலன் எல்லோருக்கும் சமமாகக் கிடைப்பது மன்றி பிரத்தியேக மனிதரிடம் அதிக சொத்துச் சேருவதற்கு வழியில்லாமற் போய்விடும். அப்படியே ஒருவனுடைய சொத்திற்கு அவனது சமூகமே பங்காளியாகக் கருதப் படவேண்டும். பிதுரார்ஜித சொத்தை வைத்துக் கொண்டு சோம்பேறிகளாகக் காலங் கழிக்கும் முறை அறவே ஒழிய வேண்டும்.

வரி விகிதமும் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கு நல்ல சாதனம். குடும்பத்தை சரிவர சவரக்ஷணை செய்ய வேண்டியதை விட அதிகமாக விருக்கும் வருமானத்திற்கே வரி போட வேண்டும். வருமானம் உயர உயர வரி படிப் படியாக உயர்ந்து ஒரு எல்லைக்கு மேற்பட்ட பிறகு மேற்கொண்ட வருமானம் முழுதும் வரியாக வசூல் செய்யப்பட வேண்டும்.

மற்றெல்லா வேற்றுமைகளுக்கும் சொத்து வேற்றுமையே அஸ்திவாரமானது. எவ்வளவு இழிவாகக் கருதப்படும் சமூகத்தில் பிறந்தாலும், தனவானுகி விட்டால் அவனது கீழ்மை பெரும்பாலும் விலகி விடுகின்றது. நமது நாட்டில் தீண்டப்படாதவர்களின் நிலைமையின் காரணம் மதத்தின் பேரால் கொண்டுள்ள மூடக் கொள்கைகள் ஒரு பக்க மிருந்தபோதிலும், இவ்வகுப்பினரின் வறுமையே அதை ஸ்திரமாகச் செய்து வந்திருக்கின்றது. இவ்வறுமை நீங்கின், தீண்டாமை நிலைத்திருக்க முடியாது.

நியாயமான செல்வப் பிரிவினை சத்திய சமாஜத்திற்கு முதல் ஆதாரம். கட்டுக்கடங்காமல் செல்வ வேற்றுமைகளை வளர விட்டு விட்டு இதர வழிகளில் சமூக நன்மையைத் தேடுவது கானல் நீரைக் கொண்டு தாகத்தைத் தணிப்பது போலவே முடியும். சொத்து சமத்துவப் பிரச்சினையே உலகில் முக்கியப் பிரச்சினையாக உலவி வருகின்றது. இதற்கு சரியான வழி ஏற்பட்டு விட்டால், மானிட வாழ்க்கையின் தன்மை நல் வழியில் மாறி விடும்.

(6)

## தொழில்

பல மனிதர் கூடி சமூகமாக வாழ்வதற்குப் பல தொ ல்கள் தேவை. குடியானவன், வியாபாரி, உபாத்தியார், அரசாங்க உத்யோகஸ்தர் முதலிய அனேக தொழில்கள் இல்லாமல் சமூக வாழ்க்கை சாத்தியமில்லை. இத்தொழில்களை வகுப்பது எங்ஙனம்? மேலாகப் பார்க்கும் பொழுது இக் கேள்வி மிகவும் எளிதாகத் தோன்றலாம். ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது சாமர்த்தியத்திற்கு ஏற்ற தொழில் கொடுக்க வேண்டுமென்று கூறிவிடலாம். இது நடவடிக்கையில் சாத்தியமான நியமமல்ல. தோட்டி வேலை செய்பவன் விவசாயத்திற்குத் தகுந்தவனுக இருக்கக் கூடும். விவசாயம் செய்பவனும் வேறு வழி யில்லாமல் தோட்டி வேலை செய்யலாம். சாதாரண

வேலைகளில் பலவற்றை எல்லா மனிதரும் செய்யக் கூடும். சில காரியங்களுக்கு மட்டுமே விசேஷ சாமர்த்தியம் வேண்டும். நல்ல பாடகனுவதற்கும், நூலாசிரிய னுவதற்கும் பிரத்தியேக சக்திகள் வேண்டும். ஆனால் இவ்வித விசேஷத் தொழில்களிலும் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அவைகளில் பலவற்றிற்கு நீண்ட காலப் பயிற்சி வேண்டியிருக்கிறது. பயிற்சி கொடுப்பதற்கு முன்னமே எவர் முடிவில் அத்தொழில்களுக்குத் தகுந்தவர்க ளாவார்க ளென்று நிச்சயமாக நிர்ணயிப்பதற்கு வழியில்லை. ஆதலால் எத்தொழிலிலும் சிலர் சாமர்த்தியசாலிகளாகவும் மற்றவர்கள் மந்த மதிகளாகவும் இருந்தே தீருவார்கள்.

முன் காலங்களில் சாதாரணமாக ஒவ்வொருவனுடைய தொழிலும் குடும்பத்தில் பரம்பரையாக வந்து கொண்டிருந்தது. இக்காலங்களில் இம்முறை முற்றிலும் சாத்தியமில்லாத போதிலும், தகப்பன் தொழிலை மகன் செய்வதற்குப் பல சௌகரியங்கள் இருக்கின்றன. அத் தொழிலில் ருசியும், பழக்கமும் எளிதில் உண்டாகின்றன.

ஆதலால், யோக்கியதையுடன் இஷ்டம், அவகாசம், குடும்பம் முதலியவைகளை அனுசரித்தே தொழில் பிரிவினை செய்தல் சாத்தியமாகும்.

இதனால், மனிதருக்குள் ஏற்றத் தாழ்விற்கு இட மேற்படுகின்றது. எல்லாத் தொழில்களும் ஒரே சமானமானவையென்று வாதாடுவது வீண். சில தொழில்கள் சுலபமாகவும், இன்பத்தைக் கொடுக்கக் கூடியவையாகவும் இருக்கின்றன. வேறு சில கடினமாகவும், மற்றவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கக் கூடியவையாகவும் இருக்கும். ஒரு ராஜ்யத்தை ஆளுவதும் அப்படி ஆள்வோருக்கு மூட்டை தூக்கியாக விருப்பதும் என்றும் சமானமாகக் கருதப் படமாட்டா.

இவ்வேற்றுமைகளை ஒழிக்க முடியாது. ஆனால் இவைகளில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளைப் பல விதங்களில் குறைத்துக் கூடிய வரையில் சமத்துவம் ஏற்படுத்தக் கூடும்.

முதன் முதலாக, எவனும் எந்தத் தொழிலுக்கும் யோக்கியதை பெற உரிமையும், அதற்கு வேண்டிய வசதிகளும் ஏற்பட வேண்டும். சக்திக் கேற்ற வரையில் சமூகச் செலவில் கல்வியும், கலைப் பயிற்சியும் பெறும் உரிமை இதற்கு ஆதாரமாகும்.

இரண்டாவதாக, சமூகத்திற்கு அவசியமான எத்தொழிலும் இழி வென்றும் அதைச் செய்பவர் கீழ் மக்களென்றும் நினைத்தல் அடியோடு ஒழிய வேண்டும். தோட்டி வேலையைப் போன்ற சமூகத்திற்கு இன்றியமையாத தொழில்களைச் செய்வோர்களை இழிவாக நடத்துவது அநியாய மட்டுமல்ல, மிருந்த மதியீனமுமாகும்.

பல தொழில்கள் தங்கள் சொந்த உபயோகத்தால் மேன்மை பெறத்தகாமலிருந்தும், அவைகளிலிருந்து கிடைக்கும் ஊதியத்தின் மிகுதியால் உயர்ந்தவைகளாகக் கருதப்படுகின்றன. இவ்வூதியங்களைக் கூடியவரையில் சமமாகச் செய்துவிட வேண்டியது அவசியமென்று முன் பாகத்தில் கூறப்பட்டது. ஊதியம் சமமான பொழுது தொழில்களும் சமமாக எண்ணப்படும் என்பதில் ஐயமில்லை.

ஒரு மனிதனுக்கு அந்தஸ்து அளிப்பதில், தொழில் ஓர் அம்சமே. அவன் வீட்டில் வசிக்கும் முறை, மதம், நடை உடைபாவனைகள், விநோதங்கள் இவை யெல்லாம் சேர்ந்து சமூகத்தில் அவனுடைய ஸ்தானத்தை நிர்ணயிக்கின்றன இவைகளில் சமத்துவம் பெருகினல் தொழில் வேற்றுமைகளால் அதிக ஏற்றத் தாழ்வு தோன்ருது.

## (7)

## அதிகாரம்

ஒரு சமூகத்திலுள்ள எல்லா மனிதரும் மகாத்மா காந்தியின் உபதேசப்படி சத்திய புருஷர்களாகவும், சாந்த மூர்த்திகளாகவும், சுய நல மற்றவர்களாகவும் ஆய்விடின், அந்த சமூ

கத்தில் எவ்வித அதிகாரியும் தேவையில்லை. ஆனால், அக் காட்சி இவ்வுலகில் காணக் கூடியதாகப் புலப்படவில்லை. ஆகையால், எந்நாட்டிலும் பல்வித அதிகாரிகள் இருக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

ஒருவன் அதிகாரியாக விருக்க வேண்டுமாகில், மற்றவர்கள் அவனுடைய அதிகாரத்திற்குட் பட்டிருக்க வேண்டியிருக்கிறது. அந்த அதிகாரம் பொறுத்த வரையில் அவன் மேலானவனாகவும், மற்றவர்கள் கீழ்ப்பட்டவர்களாகவும் இல்லாமல் முடியாது. அதிகார வர்க்கம் ஓங்கின நாட்டில் அடிமைத் தனமும் பெருகும்.

சமத்துவத்தைக் கோரும் எந்த சமூகமும் தன்னிடமிருக்கும் அதிகாரிகளின் தொகையைக் குறைக்கவும், ஒவ்வொரு அதிகாரியின் அதிகாரத்திற்குத் தெளிவான வரம்புகள் செய்யவும் வேண்டும். இந்த வரம்புகளை மீறிச் செல்லும் அதிகாரிகள் குற்றவாளிகளாகக் கருதப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். இவ்வரம்புகள் பொது ஜனங்களுக்கு நன்கு தெரிந்திருப்பதும் அவசியம். இதற்குப் பொது ஜனக் கல்வி இன்றியமையாதது. கல்வியில்லா நாட்டில் சிறிய அதிகாரியும் பெரிய அட்டகாசம் செய்வான்.

மற்ற ஜனங்களின் வருமானததிற்கு அதிகமாக அதிகாரிகளுக்கு சம்பளம் கொடுக்கலாகாது. அதிகச் சம்பளத்தினால் அதிகாரத்தின் இறுமாப்பு வலுக்கிறது. அதிகாரிகள் சமூக ஊழியர்கள் என்ற உண்மை பரவுவதற்கும் அதிகச் சம்பளங்கள் பெரும் தடைகளாக விருக்கின்றன.

அதிகாரம் ஓர் வித வியாதி. அதை வகிப்பவன் தன்னை ஒரு பிரத்தியேக புருஷனாக நினைத்து மற்றவர்களுடைய பிரியம், வெறுப்புகளை நோக்குவதில்லை. எதேச்சாதிகாரம் பெற ஓயாமல் முயல்வான்.

அதிகார வர்க்கத்தின் செயல்களை ஜாக்கிரதையுடன் கவனித்து, அது தனக்கு உரிமையில்லாத அதிகாரத்தைக்

கைப்பற்ருமல் காப்பது தனது கடமையென்று ஒவ்வொரு சாதாரண மனிதனும் நினைக்கவேண்டும். குடிகளின் மனத்தில் பயமின்மையே அதிகாரத்தினல் ஏற்படும் தீமைக்குச் சிறந்த நன் மருந்து. பயமென்னும் பேயை ஓட்டுவது சமத்துவத்தை நாட்டுவதற்கு அத்தியாவசியமான பூர்வாங்க காரியமாகும்.

## (8)

## முடிவு

சமத்துவம் எந்த அளவு சாத்தியம்? அதற்காகக் கையாளவேண்டிய முறைகள் என்ன? இவ்விஷயங்கள் இதுகாறும் ஆராயப்பட்டன. அதன் முடிவை இங்கு சுருக்கிக் கூறுவது உபயோகமாக விருக்கும்.

இயற்கையால் உண்டாகும் வேற்றுமைகளை நாம் தடுக்க முடியாது. செயற்கையாலும் பல ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டே தீரும்.

ஆனல், சமத்துவம் சமூக ஏற்பாடுகளின் லக்ஷ்யமாகக் கருதப்பட வேண்டும். எந்த விஷயத்திலும், ஏற்றத் தாழ்வு இன்றியமையாததென்று நிச்சயமாக ஸ்தாபிக்கப்பட்டாலொழிய சமத்துவத்தைப் பாதிக்கக் கூடிய வழக்கங்களையும், சட்டங்களையும் ஒழிக்க வேண்டும். முக்கியமாகச் செல்வப் பிரிவினையில் சமத்துவத்தை நிலை நிறுத்த முயல வேண்டும். பொது ஜனக் கல்வி இரண்டாவது சாதனம். பொது ஜன ஆட்சியும், அதிகாரிகளிடம் பயமின்மையும், அவசியமுள்ள சகல தொழில்களிடத்தும் ஆதரவும் இதரசாதனங்கள்.

எல்லா விஷயங்களிலும் ஸ்திரீ புருஷர் அனைவருக்கும் சம அவகாசம், சட்டப்படி சம உரிமைகள், சீலத்தைப் பொருத்த கௌரவம், வறுமையின்மை, இலவசக் கல்வி இவைகள் சமத்துவத்தை விரும்பும் சமூகம் கையாள வேண்டிய முறைகளாவன.

எந்த சமூகமும் ஒரே ஸ்திரமான நிலையில் நின்று கொண்டிருக்க முடியாது. சமத்துவத்தை நோக்கியாவது செல்ல வேண்டும்; ஏற்றத்தாழ்வுகளை வளரவாவது செய்ய வேண்டும். சுயநலத்தால் மதிமயங்காதார் எத்திசை நோக்குவார் என்று கூறவும் வேண்டுமோ?

## IV

# சகோதரத்துவம்

1789ம் வருஷத்தில் பிரான்ஸ் தேசத்தில் ஓர் பெரும் மகா ஜனப் புரட்சி நடந்தது. அத்தருணத்தில் அந்நாட்டார் சமூக அக்கிரமங்களை அடியோடு ஒழித்துச் சத்திய சமாஜத் தைநிலை நிறுத்தப் பேரவாக் கொண்டிருந்தனர். மேதாவிகள் சமூக லக்ஷியங்களைப் பற்றி ஆராய்ந்து பாமர ஜனங்களுக்குப் போதிக்க வாரம் பித்தனர். அவர்கள் சமூகத்தின் முக்கிய லக்ஷியங்களை 'சுதந்திரத்துவம்' 'சமத்துவம்' 'சகோதரத்துவம்,' என மூவகையாக வகுத்துப் புரட்சியின் பிரதானப் போரொலி களாகச் செய்தனர். அவற்றில் சுதந்திரத்தையும், சமத்துவத் தையும் பற்றி முன் வியாசங்களில் விசாரித்தோம். இப் பொழுது சகோதரத்துவத்தைப் பற்றி ஆராய்வோம்.

ஒரு சமூகத்தின் ஜனங்கள் அடிமைத்தனம் நீங்கி பூர்ண ஸ்திரீ புருஷர்களாவதற்கு சுதந்திரமும், சமத்துவமும் அவசி யம். ஆனல் சகோதர பாவமில்லாமல் பலர் கூடி ஒரு சமூக மாகவே முடியாது. சுதந்திரமும், சமத்துவமுமில்லாத பல நாடுகள் ஓங்கி வளர்வதைக் கண்டிருக்கிறேம். சகோதர த்துவமில்லாத சமூகங்களோ சின்ன பின்னப்பட்டுப் பிறருக்கு அடிமைப்படு மென்பதில் சந்தேகமில்லை. சத்திய சமாஜ மாகிய கட்டிடத்திற்குச் சுதந்திரமும், சமத்துவமும் கல்லும், மரமும் போலாவன. சகோதரத்துவமோ இவ்விரண்டையும் சேர்த்துக் கட்டிடமாக செய்யும் சுண்ணும்பை யொக்கும்.

எச்சமூகத்திலும் சகோதரபாவம் பரவுவதற்கு இரண்டு குணங்கள் தேவை. முதலாவது சகிப்புத்தன்மை; இரண் டாவது, பொதுவான பாஷை, எண்ணங்கள், வழக்கங்கள், கொள்கைகள் இவைகளால் ஏற்படும் பரஸ்பர பிரியம். இவ்விரண்டும் சில வேளைகளில் ஒன்றிற் கொன்று முரண்படு

வதாகத் தோன்றலாம். ஆனால், உண்மையில் எவ்வித முரண்பாட்டுக்கும் காரணமில்லை.

எக் கூட்டத்தாரிடத்தும், பலவித எண்ணங்களும், மனோபாவங்களும் உள்ளவர்கள் இருப்பார்கள். இவர்களில் ஒரு சாரார் தங்கள் கொள்கைகள் மட்டுமே தத்துவங்களென்றும், இதரர்களின் எண்ணங்கள் மூடத்தன்மையாலும் துஷ்டத்தனத்தாலும் உதிக்கின்றனவென்றும் எண்ணினால் அந்த சமூகத்தில் பரஸ்பர ஒற்றுமையும், சகோதரத்துவமும் ஏற்படா. ஆதலால், எந்த மனிதனும், எக்கக்ஷியும் சர்வக்ஞர்களல்ல வென்ற உண்மை நிலவி வரும் சமூகத்திலேதான் சகோதரத்துவம் நிலை பெறும். அப்பொழுது ஒரு சாரார் தங்கள் கொள்கைகளைப் பூர்ணமாக நம்பியிருந்து கொண்டே மற்றவர்களிடம் அன்புடன் வாழக் கூடும். பலர் பலவிதமாக நினைப்பதால் கடைசியில் உண்மை மேலெழவும் இடமேற்படும்.

இவ்வாறு சகிப்புத் தன்மையை வளர்ப்பதோடு, வித்தியாசங்கள் தோன்றக் கூடாத விஷயங்களில் அறிவும், ஒற்றுமையும் உண்டாகும் முறைகள் கையாளப்பட வேண்டும். இவற்றிற்கு பாஷை மகத்தான கருவியாகும். உலகமுழுதும் ஒரே பாஷையில் விவகாரங்களை நடத்தக் கூடுமானால் சகோரத்துவம் எளிதில் பெருகும். அப்படியே இந்தியாவின் ஒற்றுமைக்கு ஹிந்தி பாஷையின் மாகாத்மியம் அளவிடக் கூடியதல்ல.

பிரத்தியக்ஷத்தாலும், அனுமானத்தாலும் நிரூபிக்கக் கூடிய ஞானத்தின் வளர்ச்சியும் சகோதர பாவத்தைப் பெருக்க பேருதவி புரியும். இவைகளில் அனைவரும் ஆத்திரமில்லாமல் சேர்ந்து ஆராய்வதற்கு அளவற்ற இடமுண்டு. அவ்வாராய்ச்சியால் சாதகமே விளையும். அறிவு வளர வளர குறுகிய நோக்கங்களும், அவைகளால் உண்டாகும் சண்டைகளும் ஒழியும்.

மனிதனுடைய உணர்ச்சிகளைத் தூய வழியில் திருப்தி

செய்யும் கலைகளும் ஒரு சமூகத்தில் சகோதர பாவத்தை விருத்தி செய்யவல்ல சாதனங்களாவன. சங்கீதம், காவ்யம், சில்பம் முதலிய கலைகள் ஓங்கும் நாடுகளில், ஜனங்கள் வீண் மனஸ்தாபங்களை விட்டுச் சுகமாக வாழ விரும்புவார்கள்.

அவ்வாறே பரஸ்பர பொறாமையையும், துவேஷத்தையும் உண்டாக்கக் கூடிய ஆடம்பர வாழ்க்கையை ஒழித்து சரள வாழ்க்கையைப் பரப்புவது சகோதரத்துவத்தை ஸ்தாபிப்பதற்கு மிகவும் உதவும். ஆடம்பரமற்ற வாழ்க்கையிலிருப்போரின் மனத்தில் சாந்தமும், அன்பும் குடி கொண்டிருப்பன. மனிதனுக்குச் சுயநலம் குறைந்து சமூக நன்மையைத்தேட அவகாசமும் கிடைக்கின்றது. பெரும் பாரத்தைச் சுமந்து போகும் மனிதன் பிறருடன் சந்தோஷமாகப் பேசிக் கொண்டு போகான். வீண் மூட்டைகளைக் கீழே எறிந்து கை வீசிக் கொண்டு நடக்கும் பிரயாணி தன்னுடன் செல்லுவோர்களோடு இனிமையாகச் சம்பாஷித்து அவர்களுடன் தானும் களிப்புற முயல்வான். துக்கக் கடலில் முழுகிப்போக விரும்பாத எந்த சமூகமும் தனது படகில் ஆடம்பர மென்னும் பாரத்தை அதிகமாக ஏற்றிக் கொள்ளலாகாது.

௭

# குடும்பம்

பசியைப் போல் காமமும் ஸ்திரீ புருஷர்களுக்கு சகஜமான இயற்கை குணம். எப்படி உணவுக்குத் தகுந்த ஏற்பாடு செய்வது இன்றியமையாததோ அவ்வாறே சமூகத்திலுள்ளவரெல்லோரும் தங்கள் காமத்தை நியாயமாகத் திருப்தி செய்து கொள்ளக் கூடிய விவாக முறையும் சத்திய சமாஜத்திற்கு இன்றியமையாதது. ஆயிரத்தில் ஒருவர் காமத்தால் பீடிக்கப்படாமலிருக்கலாம். மற்றும் ஒன்பது பெயர்கள் அப்படிப் பீடிக்கப் பட்டாலும் அதைப் பொறுத்தாளும் சக்தி பெறலாம். மற்றவர்களெல்லோரும் இல்லறத்தில் வாழாவிடில் துன்மார்க்கத்தில் ஈடுபட்டுக் கொடிய ரோய்களுக்காவார்களென்பதில் ஐயமில்லை.

தவிர, குழந்தைகளை சரிவரப் பாதுகாத்தல் சமாஜத்தின் வருங்கால வாழ்விற்கு அஸ்திவாரமாகும். சிறு குழந்தைகளை வளப்பது தாய்ப் பால் மட்டு மல்ல. பெற்றோர்களின் அன்பும் சேர்ந்தால் தான் குழந்தைகளின் தேகமும், ஆத்மாவும் மலரும்.

இவ்விரண்டுகாரணங்களாலும், ஒரு சமாஜத்தின் வாழ்க்கையின் தன்மை அதன் குடும்ப முறையைப் பெரிதும் பொறுத்திருக்கின்றது. குடும்பத்தைச் சீர்திருத்துவதற்கான யோசனைகளை நாம் மரியாதை யுடன் கேட்பது நியாயமே. ஆனால் அதை அழிப்பதற்காகக் கூறப்படும் வாதங்கள்முடிவில் சமாஜத்தையே அழிக்கக்கூடியனவாகவே யிருப்பன.

புருஷனும், ஸ்திரீயும் சமான அந்தஸ்துடன் ஒத்து வாழ்வதே சரியான குடும்பத்தின் அடையாளம். ஒரு சமயத்தில் ஒருவனுக்குப் பல மனைவிகள் இருந்தாலும், அல்லது ஒரு

ஸ்திரீக்குப் பல புருஷர்கள் இருப்பினும் இது சாத்தியமன்று. ஆதலால், ஒரே சமயத்தில் ஏகபதி பத்னியுள்ள முறையே ஒப்பத் தகுந்ததென்று எளிதில் புலப்படும்.

பல சமூகங்களில் ஸ்திரீகள் புருஷர்களுக்கு அடிமைக ளாகவும், வேலைக்காரிகளாகவும் இருப்பதைக் காண்கிறோம். இதற்கு சாதாரண காரணங்கள் இரண்டு. பெண்களுக்கு சொத்து பாத்தியமில்லாமை ஒன்று. அடிக்கடி கர்ப்பம் தாங்கிக் குழந்தை பெறவேண்டி யிருப்பதால் அக்காலங்களில் மற்றவர்களின் உதவியை நாடவேண்டி யிருப்பது இரண்டா வது.

இவ்வாறு ஸ்திரீகள் கீழ்ப்பட்டிருப்பது சமூகத்திற்கு நல மன்று. குழந்தைகள் தம் தாயிடமிருந்தே தங்கள் முதல் பழக்கங்களையும், எண்ணங்களையும் கற்றுக் கொள்ளுகின்றன. வேலைக்காரிகளிட மிருந்து தைரியமும், சுதந்திரமும் அவை கள் எவ்வாறு கற்றுக்கொள்ள முடியும்? பெண்களைக் கீழ் மக்களாக்கக் கருதும் சமூகங்களில் பயமும், அடிமைப் புத்தி யும் பரம்பரையாக வளர்ந்து சமூகத்தையே அடிமையாக்கி விடும்.

குடும்பம் ஒரு பெரிய பொறுப்பு. அதை வகிக்க சக்தி பெற்ற பிறகே ஒருவன் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஹிந்து சமாஜத்தில் குழந்தைகளின் தலையில் அவர்களின் அனுமதியின்றியே இப்பாரம் சுமத்தப் படுகின்றது. அதனால் ஆரோக்கியம், பலம், கல்வி இவைகளால் தகுதி பெறும் முன்னமேயே இளைஞர்கள் குடும்ப பாரம் வகித்து வாழ்க்கை யின் இன்பத்தை அனுபவிக்க முடியாது துக்கத்திற்கும், அகால மரணத்திற்கும் ஆளாகின்றனர். இதர நாட்டு வாலிபர் கள் மலைகள் ஏறியும், கடலைக் கடந்தும், வானத்தில் பறந்தும் பூர்ண வாழ்வுக்கு வேண்டிய சக்திகளையும், அனுபவங்களையும் தேடும் காலத்தில் நமது யுவர்கள் தங்கள் குடும்பங்களை எப் படிப் பரிபாலிப்ப தென்ற கவலை மேலிட்டுக் கலக்க முறுகின் றனர். பால்ய விவாகம் மறையும் வரையில் ஹிந்து சமாஜம்

உண்மையான சுதந்திர மடைவது துர்லப மென்று கூறுதல் மிகையாகாது.

சட்டத்தைக் கொண்டு, தம்பதிகளை பரஸ்பரம் அன்பு செலுத்தச் செய்ய முடியாது. ஆகையால், கணவனும், மனைவியும் சிறிதும் ஒத்து வாழ முடியாம லிருக்கும் குடும்பங்களில் அவர்களைப் பலாத்காரமாகப் பிணைத்து வைத்திருப்பதைக் காட்டிலும் விவாகத்தை ரத்து செய்து விட அனுமதி கொடுப்பதே நியாயமாகத் தோன்றுகிறது. குழந்தைகளுக்குத் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டிய தவசியமே. தாயும், தந்தையும் சதா காலமும் சண்டையிட்டுக் கொண்டிருந்தால் அவர்கள் ஒரு நாளும் குழந்தைகளைச் சரிவர வளர்க்க மாட்டார்கள். அக் குழந்தைகள் பொருட்டும் இவ்வித தம்பதிகளைப் பிரிந்து போக விடுவது நன்மையே யாகும்.

அப்படியே விதவைகளையும்,விதுரர்களையும்,விவாகரத்துச் செய்து கொண்டவர்களையும் சட்டத்தால் புனர் விவாகம் செய்து கொள்ளாமல் தடுப்பது சரியல்ல. அதனால் துன்மார்க்கமே அதிகரிக்கும்.

சட்டத்தால் விவாக ரத்திற்கும், புனர் விவாகத்திற்கும் உரிமை வழங்கப் படுவது அவசியமாயினும், அவை சமாஜத்தின் உறுதி நிலைக்குத் தீங்கு விளைவிப்பவை யென்பதை மறுக்க முடியாது. நல்ல சமாஜத்தில் ஒவ்வொரு புருஷனும், ஸ்திரீயும் சரியான வயது வந்தவுடன் தன் மனதிற்கேற்றவாறு மணந்து சுகப்படுவதற்குப் பூர்ண அவகாச மிருக்க வேண்டும். ஏக்காரணத்தினலாவது சிலர் இந்த அவகாசத்தைச் சரியாக உபயோகித்துக் கொள்ளக் கூடாவிடின் அவர்கள் குடும்ப வாழ்க்கையைத் துறப்பதே கிரமம். சாதாரணமாக ஒரு சமூகத்தில் ஸ்திரீகளும், புருஷர்களும் ஏறக்குறைய ஒரே தொகையாக விருப்பார்கள். ஒருவன் இரண்டாவது தடவை விவாகம் செய்து கொள்ள விரும்பினல் அது மற்றவர்களுக்குக் கஷ்டம் விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை. கோடிக் கணக்கான ஜனங்கள் உள்ள சமூகத்தில் ஒருவர் இருவர் எது செய்தாலும் அதன் பலன் நமக்குத் தெரிவதில்லை. ஆனல்

பலரிடம் பரவும் பொழுது சமாஜத்தின் நிலை குலைய ஆரம்பிக்கும்.

சட்ட பூர்வமாக இஷ்டப்படி விவாகம் செய்து கொள்ளவும், அதை ரத்து செய்து கொள்ளவும் உரிமை இருந்தும் ஜனங்கள் ஏகபதி பத்னீ விரதம் கொண்டால், அந்த சமாஜம் இவ்வுலகில் கீர்த்தியுடன் ஓங்கி நிற்கும்.

குழந்தைகள் தோன்றும் வரையில் தம்பதிகளின் பரஸ்பர அன்பே குடும்பத்தின் முக்கிய லக்ஷியமாகும். அதன் பிறகு அக்குழந்தைகளைச் சரிவர வளர்த்து வருவதே குடும்பத்தின் முதல் கடமையாகின்றது. குழந்தைகளை நன்கு வளர்ப்பதற்கு வேண்டிய அறிவையும், சாதனங்களையும் அளிப்பது சமூகத்தின் கடமைகளில் முதன்மையானது. குழந்தைகளைப் பெற்றோர் தங்கள் சொத்தாகக் கருதிச் சிங்காரித்துப் பொம்மைகளைப்போல் வைத்திருப்பது சமூகத்திற்குத் தீங்கு விளைவிப்பதாகும். தாம் பெற்ற குழந்தைகளை சுதந்திரமும், வீரமும் வாய்ந்த பிரஜைகளாகச் செய்வது பெற்றோர்கள் தம் சமூகத்திற்குச் செய்யவேண்டிய கடன். குழந்தைகள் பெற்றோரின் சௌகரியத்தைத் தேடுவது நியாயமாயினும், இது அவர்களின் முக்கிய வேலையன்று. தங்கள் ஆன்மாவுக்கும், சமூகத்திற்கும் நன்மை தேடுவதே அவர்களுடைய பிரதம லக்ஷ்யமாக இருத்தல் வேண்டும். தம் மக்களிடமிருந்து எவ்வித நன்றியையும் எதிர்பார்க்கப் பெற்றோர்களுக்கு உரிமை யில்லை. மக்களைப் பெற்ற பொழுதே வேறு பிரதி பலனை எதிர்பாராது அவர்களை வளர்த்துப் பரிபாலிப்பது தாய் தந்தையரின் கடமையாகின்றது. மக்கள் வயது வந்த பின் தாமாகக் கொடுக்கும் அன்பையும், உதவியையும் கொண்டு திருப்தி யடைவதே தந்தையருக்கு அழகு. இவ்வுண்மையை எல்லோரும் உணர்ந்தால் இப்புவியிலுள்ள துக்கம் எவ்வளவு குறையும்?

தங்களால் சரிவர வளர்க்கக் கூடிய மூன்று நான்கு குழந்தைகளைப் பெற்றவுடன், குடும்பத்தின் நாயகனும் நாயகியும் தம் காமத்தை அடக்க முயல்வது அவசியம். இல்லா

விடில் தம் குழந்தைகளுக்குச் சரியான போஷணையும் கல்வியும் கொடுக்க இயலாது. வறுமையாலும், மூடத் தன்மையாலும் தங்களையும், தங்கள் நாட்டையும் மாதம் எட்டு ரூபாய்க்கு விட்டு விடக் கூடிய பிரஜைகளைக் கொண்டு எந்த தேசமும் சமாஜமும் சுதந்திரமாக வாழ முடியாது. தம் புலன்களை அடக்கி ஆளுதல் மிகவும் கஷ்டமான காரியமென்பதில் சந்தேகமில்லை. ஆனால் குடும்பமும், சமூகமும் முன்னேற்ற மடைய வேண்டுமாயின் வேறு நல்ல வழியில்லை. தம்மை அடக்கியாள முடியாத தம்பதிகள் தற்காலம் பரவிவரும் கர்ப்பத் தடை முறைகளைக் கையாள வேண்டுமென்று பலர் பிரசாரம் செய்துகொண்டு வருகின்றனர். இது பெரும் சிக்கலான பிரச்சினை. இம் முறைகளால் பல தீமைகள் உண்டாகின்றன வென்பது நிச்சயம். ஜனத் தொகை-கணக்கு வழக்கின்றிப் பெருகுவதால் சமூகத்தின் வறுமை பெருகி ஆரோக்கியம் குன்றிப் பெரும் தீங்குகள் உண்டாகின்றன வென்பதும் பிரத்தியக்ஷமாக விளங்குகின்றது. இவ்விரண்டு தீமைகளில் எது பெரிது என்று நிச்சயமாக இன்று எவரும் சொல்ல முடியாது. ஒவ்வொருவரும் பயமின்றித் தம் மனச் சாக்ஷிக் கேற்றவாறு நடக்க வேண்டும். இவ்விரண்டு கேடுகளையும் விலக்க விரும்புவோர் மகாத்மா காந்தியின் உபதேசத்தைப் பின்பற்ற வேண்டும்.

## VI

# சமூக லக்ஷ்யங்கள்

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் இம்மூன்றும சத்திய சமாஜத்தின் உயிர் வேர்கள் என்று சொல்லலாம். அவைகளில்லாத சமூகம் மனித சமூகமென அழைக்கப்படத் தகுதியற்றது. ஆனால், அவைகளைச் சமூக லக்ஷ்யங்கள் என்று சொல்வது சரியல்ல. சுதந்திரம் இல்லாத மனிதன் உண்மையான மனிதனல்ல. மிருகங்களுள் ஒன்றே. ஆயினும், சுதந்திரம் வாழ்க்கையின் பயனன்று; ஆதாரமே. வாழ்க்கையின் பயன்களையே லக்ஷ்யங்களென்று சொல்லக் கூடும். எந்த பலன்களை அடைந்து நாம் திருப்தி யடைவோமோ அவைகளையே லக்ஷ்யங்களென்று கூற வேண்டும். ஆகையால், சுதந்திரத்தைப் போலவே சமத்துவமும், சகோதரத்துவமும் சத்திய சமாஜத்தின் ஆதாரங்களே ஒழிய முடிவான பயன்களல்ல.

அப்படியானால், சமூக லக்ஷ்யங்கள் எவை? அதாவது எந்த பலன்களை யடைந்து நாம் கிருத கிருத்தியர்களாகத் திருப்தி யடையக் கூடும்?

ஆரோக்கியம் இவ்வித லக்ஷ்யங்களில் ஒன்றென்று நிச்சயமாகக் கூறி விடலாம். சைதன்யத்தோடு கூடிய வாழ்க்கையே ஓர் வித ஆனந்தத்தைக் கொடுக்கின்றது. அதை அனுபவிப்பதற்கு ஆரோக்கியம் அவசியம். மிருகங்களுக்கு ஆரோக்கியம் ஒன்றே புருஷார்த்தம். மனிதர்களின் ஆரோக்கியம் உணவு, தேகப் பயிற்சி ஸ்நானம் முதலிய பழக்கங்கள், மனக்கவலை யின்மை, இந்திரிய நிக்கிரகம் முதலியவைகளைப் பொறுத்திருக்கின்றது. இவைகளைப்பற்றி நம் முன்னோர் நீர ஆலோசித்துப் பல நல்ல வழக்கங்களை மதக் கோட்பாடுகளாகச் செய்திருக்கின்றனர். இந் நாட்களில் நமது வாலிபர்கள் ஆரோக்கிய நியமங்களை அலக்ஷியம் செய்வது வருந்தத்தக்கது. அபாயத்திற்குமிடமானது. இதனால், பலர் நோய் வாய்ப்பட்டு வாழ்க்கையின் இன்பத்தை இழக்கின்றனர்.

ஆரோக்கியத்தை மற்ற லக்ஷ்யங்களுக்கு அஸ்திவாரமெனக் கூறலாம். அதன்பின், அறிவு இரண்டாவதான லக்ஷியமாகும். அறிவே மனிதனுடைய விசேஷ குணமென்று முதல் வியாசத்தில் கூறப்பட்டது. அறிவின் வளர்ச்சி இதர புருஷார்த்தங்களுக்கு சாதனமல்ல. மானிட வாழ்க்கையின் சுதந்திர லக்ஷ்யமாகும்.

அழகு மூன்றாவது லக்ஷ்யமாகும். அழகு என்ற பதத்தில் கவிதை, சங்கீதம், சில்பம் முதலிய எல்லாக் கலைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆரோக்கியமும் அறிவும் மனிதனுக்கு சுபாவ குணங்கள். அவைகளில்லாவிடில் துக்கம் உண்டாகின்றது. இருந்தால் விசேஷ சுகம் காணப்படுவதில்லை. ஆனால், அழகினால் மனம் பூரிக்கின்றது. நமது வீட்டிலும், நடை உடை பாவனைகளிலும், ஒவ்வொரு சிறிய காரியத்திலும் அழகை வளர்த்தல் அவசியமானது. நம் நாட்டில் சாதாரணமாக அழகைப்பற்றி கவனிப்பதில்லை. இதனால், நமது வாழ்க்கையின் பல அம்சங்கள் இதர தேசத்தினருக்கு அருவருப்பைத் தருகின்றன.

அன்பு சமூக லக்ஷ்யங்களின் திலகம். இது மனைவியிடம் காமமாகவும், மக்களிடம் வாத்ஸல்யமாகவும், பந்து மித்திரர்களிடம் பிரியமாகவும் மற்றவர்களிடம் கருணையாகவும் காணப்படும். மற்ற என்ன குறைகளிருப்பினும், எல்லா மதங்களும் இந்த அன்பை வளர்க்க முயன்றதால் தம் சமூகத்தினர்களின் மனத்தைக் கவர்ந்து ஆட்கொண்டு வந்தன. இந்நாட்களில் மதப்பற்று குறைந்துவருகின்றது. இதனால் அன்பும் குறைந்தால் மானிட சமாஜத்திற்கே குறைவு ஏற்படுமென்பதில் ஐயமில்லை. அன்பின் பலத்தால் மனிதன் தன் சிறுமையை மறந்து ஆனந்த பரவசனாகின்றான்.

ஆரோக்கியம், அறிவு, அழகு, அன்பு இந்நான்கும் ஒன்று கூடியபொழுது பூரண ஆனந்தம் உண்டாகின்றது. இந்நான்கும் கூடிய நிலையை ஆனந்த நிலையெனக் கூறலாம். இந் நிலையே சத்திய சமாஜத்தின் லக்ஷ்யம்.

## VII

# பிரவிருத்தியும் நிவிருத்தியும்

சமூகத்தின் லக்ஷ்யம் ஆனந்தமென்று கூறப்பட்டது. அது லௌகீகமென்றும், மோக்ஷம் அல்லது நிர்வாணமே அந்திம லக்ஷ்யமென்றும் பல ஆஸ்திகர்கள் கூறுவார்கள்.

மனிதர்களின் போக்கைப் பிரவிருத்தி யென்றும், நிவிருத்தி யென்றும் நமது பெரியோர் வகுத்தனர். இவ்வுலக வாழ்க்கையில் பற்றும், அப்பற்றினால் உண்டாகும் சுகத்தின் பேரிலாசையும், துக்கத்தினிடம் பயமும் பிரவிருத்தியைச் சேர்ந்தது. இவ்வுலகின் அநித்தியத்தைக் கண்டு மனம் வெறுத்து, உலக விவகாரங்களில் பற்றில்லாமல் ஒழிபவன் நிவிருத்தி மார்க்கத்தை நோக்குபவன்.

லௌகிக வாழ்க்கையில் எவ்வளவு ஆழ்ந் திருப்பினும், சில நேரங்களில் எவனுக்கும் இல்வாழ்க்கையின் சிறுமையில் வெறுப்பு உண்டாகாமலிராது. எவ்வளவு நேர்மையாக அமைக்கப்பட்ட சமூகத்திலும் நோயும், கஷ்டமும், துக்கமும் இல்லா தொழியா. சாவோ என்றும் நம்முன் நிற்கின்றது. இவற்றைக் கண்டு புத்த பகவான்போல் நாமும் தீர வைராக்கியமடையாமற் போனாலும், சில சமயங்களிலேனும் அதனை விரும்புவோம். ஆதலால், வைராக்கியத்தின் பெருமையை எவரும் மறுக்கார்.

ஆயினும், இத்தகைய வைராக்கியம் தானாகவே உதிக்க வேண்டும். இதைப் பிரசாரம் செய்து பக்குவமாகாத புருஷர்களைச் சந்நியாசிகளாகச் செய்வதனால் அநர்த்தமே விளையும். புத்த மதம் மிகவும் உயர்ந்ததாக விருந்தபோதிலும், எல்லோருக்கும் நிவிருத்தி மார்க்கத்தைப் போதித்து சோம்பேறி மடங்களை உண்டாக்கிச் சமூகத்தைக் குலைக்க வாரம்பித்தது. கிறிஸ்தவ மத சரித்திரத்திலும் இதே சம்பவத்தைக் காண்கிறோம். சுபாவமாக மனதில் வைராக்கிய முண்டாகாத புருஷர்களையும், பெண்களையும் பிரம்மசாரிகளாகவும் முனிவர்களாகவும் மாற்ற முயன்றதால் பெரிய தீமைகள் விளைந்தன.

ஹிந்து மதத்தில் வேறு பல குறைகள் இருந்த போதிலும், இல்லறத்தை முக்கியமாகக் கொண்டதனால் அது நிலைத்திருக்க முடிந்தது. ஆனால், அதனிடத்தும் நிவிருத்தி சாஸ்திரத்தை நமது ஆசாரியார்கள் பிரசாரம் செய்ததன் பலனாக வீண் வாதங்களும், ஜாதிப் பிரிவினைகளும், சோம்பேறி மடங்களும் நாடெங்கும் பரவி ஜனங்கள் மனச் சோர்வடைய நேரிட்டதே யொழிய வேறு நன்மை ஒன்றும் உண்டாகவில்லை. வெள்ளிப் பல்லக்கில் முழுக் குடியர்களால் தூக்கப்பட்டுப் பல விருதுகளுடன் ராஜ சன்னியாசிகள் என்று சொல்லிக்கொண்டு செல்லும் நமது மடாதிபதிகள் இதற்குச் சான்ற உதாரணங்களல்லவா?

வைராக்கியம் தானாகவே ஒரு மனிதனுடைய மனத்தில் உண்டாக வேண்டும். அப்பொழுது அவன் தன் புருஷார்த்தத்தைத் தானே தேடிக்கொள்வான். மற்றவர்களைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு போக முயன்றால் எல்லோருக்கும் அனர்த்தமே விளையும். பல தேசங்களிலும், காலங்களிலும் வைராக்கியமடைந்தவர்களின் சரித்திரங்களையும், மதக் கிரந்தங்களையும் எல்லோருக்கும் எளிதில் கிடைக்க ஏற்பாடு செய்வதைத் தவிர நிவிருத்தி மார்க்கத்தைப் பரப்புவதற்காகச் செய்யப்படும் எல்லா நடவடிக்கைகளும் வீணாகவே முடியும்.

உண்மையில் வைராக்கிய மடைந்தவனுக்கு இந்த உலகில் ஆக வேண்டிய காரியம் ஒன்றுமில்லை. சமூகத்திற்கும் அவனுக்கும் சம்பந்தமில்லை. தன் அந்தராத்மாவைத் தியானித்து சமாதி யடைவதொன்றே அவன் வேலை.

மற்றெல்லோரும் பிரவிருத்திமார்க்கத்தைச் சேர்ந்தவர்கள். ஒழுங்கான பிரவிருத்தி தர்மத்தை நிச்சயித்து அதன்படி ஜனங்கள் ஒழுகவேண்டிய முறைகளைத் தேடுவதே சமூகநன்மையை நாடுவோர் கடமை. இந்தப் பிரவிருத்தி மார்க்கத்தின் லக்ஷ்யம் ஆனந்தம். அதன் அம்சங்கள் ஆரோக்கியம், அறிவு, அழகு, அன்பு. அதன் ஆதாரங்கள் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம். தன்னைச் சார்ந்தவர்களுக்கு இந்த ஆனந்தத்தை அளிக்க வல்லது சத்திய சமாஜம்.

170651